
www.tamilarangam.net

# சுவடுகள்

## நிறவாதமும் நிலைபெறுதலும்

### சிறப்பிதழ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**SUVADUGAL,**
**A Tamil monthly from Norway**
Estd: Sept' 1988

**Bank account**: 16075213062
SparebankenNOR

ISSN: 0804 - 5712

**Editorial Group**: Thuruvapalagar

Price: 25NKr
Subscription: 300NKr/ 12 issues

**Published by**:
Norway Tamil Culturel Centre
**Address:**
Suvadugal,
Herslebs gt43,
0578 Oslo,
NORWAY

**சுவடுகள் ,**
தமிழ் மாத இதழ்
ஸ்தாபிதம்: புரட்டாதி 1988

**வங்கிக் கணக்கிலக்கம்**: 16075213062
ஸ்பாரபாங்கன் நூர்

ஆசிரியர் குழு:
துருவபாலகர்

தனிப்பிரதி விலை: 25 குறோனர்கள்
சந்தா:
பன்னிரு இதழ்களுக்கு 300 குறோனர்கள்

வெளியீடு:
நோர்வே தமிழ்க் கலாசார மையம்
முகவரி:
சுவடுகள்,
ஹேர்சிலப்ஸ் காதா 43,
0578 ஒஸ்லோ,
நோர்வே

*சுவடுகள் 67*
*வைகாசி 1995*

*நிறுவியது: புரட்டாதி 1988*

## இந்த இதழில்

*நிலைபெறுதல் பக்.........3*
*கவிஞர் பலமலைப் பேட்டி பக்.........39.#*
*ஐரோப்பாவில் நிறவாதம் பக்.........11*
*ஒஸ்லோ அமைப்புகளின் அபிப்பிராயங்கள்பக்.........17*
*சுவடுகள் பக்.........20*
*பாலஸ்தீனம் பக்.........21*
*நாற்சந்தி பக்.........24*
*வெட்ட வெளிச்சமாகும் பக்.........28*
*வெளிநாட்டவனே வெளியேறு பக்.........31*
*சிறுகதை பக்.........34*
*நிறவாதத்துக்கு எதிராக பக்.........37*
*தேசத்தின் குறிப்புகள் பக்.........5.20*
*அயலானின் அபிப்பிராயங்கள்பற்றி பக்.........45*
*மண்மணம் பக்.........49*

முன்பு வாக்குறுதி வழங்கியபடி
புகைப்படக்கலை தொடர்பான கட்டுரை
இடம்பெறவில்லை. அடுத்த இதழில் வரும்.

நிறவாதம் பற்றி எம்மவரிடையே பிரக்ஞை
ஏற்படுத்துவதை முக்கிய நோக்கமாய்க்
கொண்ட இந்த இதழ் பற்றி உங்கள்
அபிப்பிராயங்களை எழுதுங்கள்.


ஆண்டு மலருக்கான படைப்புகளை
விரைந்து அனுப்புங்கள்

*Suvadugal, A Tamil monthly from Norway, Issue nr 67.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




- வித்யன்

# நிலைபெறுதல்

புலம் பெயர்ந்த வாழ்க்கை, தற்காலிகமானது என்றும், இல்லை இது நிரந்தரமானது என்றும் பல வேறுபட்ட அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. ஆனால் ஒரு குறிப்பிட்ட ஒரு கஷ்டமான சூழலினால் கணிசமான மக்கள் குடிபெயர்ந்தது வரலாற்றில் பல தடவை நடைபெற்றே வந்துள்ளது. அப்படி குடி பெயர்ந்தவர்களில் ஒரு பகுதியினர் மீண்டும் தம் பழைய இடத்திற்குச் சென்று வாழ்கின்றனர். கணிசமான பகுதியினர் புலம் பெயர்ந்த இடத்திலேயே நிரந்தரமாகத் தங்கி விடுகின்றனர்.

தமிழர்களின் வரலாற்றிலே இப்படியான புலம் பெயர்வுகள் பல தடவைகள் நடைபெற்றுள்ளன. ஆயினும் அண்மைக்கால சில உதாரணங்களைச் சுட்டிக்காட்டலாம் என நினைக்கிறேன். ஆங்கிலேயர் இலங்கை இந்தியாவைக் கைப்பற்றி ஆண்ட காலத்தில் மொரீசியஸ், தென்னாபிரிக்கா, மலேசியா, சிங்கப்பூர், இலங்கை என்று பல இலட்சம் தமிழர்கள் குடிபெயர்ந்தனர். அவர்களில் பலர் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக அந்தந்த நாடுகளில் நிரந்தரமாகத் தங்கிவிட்டனர். இதே போன்ற ஒரு நிலை பற்றியே இன்று ஈழத்தமிழன் இலட்சக்கணக்கில் புலம் பெயர்ந்துள்ளான். இதில் பல்வேறு நாடுகளில் இவர்கள்சிதறிக் கிடக்கின்றனர். ஈழத்தமிழன் மீதான சிங்கள இராணுவ மேலாதிக்கமே அவனை இப்படி ஒரு சூழலுக்குத் தள்ளிவிட்டுள்ளது. ஆயினும் நாளை ஒரு உண்மையான, நிரந்தரமான தீர்வு ஏற்படும் பொழுது, ஒரு சாரார் தமது தாயகத்திற்குத் திரும்புவர். கணிசமான பகுதியினர் அந்தந்த நாடுகளிலேயே நிரந்தரமாகத் தங்கிவிடுவர்.




இவ்வாறு தங்கிவிடும் பகுதியினர் தொடர்ந்தும் பலவேறு பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குறிப்பாகப் பலர் தமது தமிழர் எனும் அடையாளமாக மொழி, கலாச்சாரத்தைப் பேணமுனைவர். அத்தோடு இவர்களின் நிறம், கலாச்சாரம், பழக்கவழக்கம் என்பன இவர்களைத் தாம் வேறு ஒரு இனம் எனும் ஒரு உணர்வை இவர்களிடையே தொடர்ந்தும் ஏற்படுத்தும்.

இவர்கள் இவ்வாறான ஒரு சிறுபான்மையினராக வேற்றுக் கலாச்சாரச் சூழலிற்கு முகம் கொடுப்பது மிகமிகக் கடினமானதுதான். இவ்வாறான சூழலில் இவர்கள் தமது அடையாளங்களைப் பேணுவதாயின், தவிர்க்க முடியாது இவர்கள் ஓரிடத்தில் செறிந்து வாழவேண்டிய ஒரு சூழலிற்குத் தள்ளப்படுவர். அப்படியான ஒரு சூழலில் மட்டுமே இவர்களால் அடையாளங்களைப் பேணவும், பல்வேறுபட்ட சூழலிற்கு முகம் கொடுக்கவும் முடியும். இதனால் நீண்ட காலப் போக்கில் கனடாவைப் பொறுத்தவரை மொன்றியல் நகரங்களும், இங்கிலாந்தில் லண்டன் நகரமும், சுவிஸ் நாட்டில் பேரின், சூரிச் நகரங்களும், பிரான்ஸ் நாட்டில் பாரிஸ் நகரமும், இத்தாலியில் ரோம் நகரமும், நோர்வேயில் ஒஸ்லோ, பேர்கன் நகரங்களும் குறிப்பிடப்படலாம்.

ஜேர்மனி நாட்டில் தற்போதய நிலையில் தமிழர்கள் இருபது ஆயிரம் வரையில் இருந்த போதும் சிறு சிறு கிராமங்களாகச் சிதறிக்கிடக்கின்றனர். இதே போன்ற ஒரு நிலையில் தான் டென்மார்க் (5000 தமிழர்கள்), நெதர்லாந்து, சுவீடன் (நூற்றுக்கணக்கானவர்கள் மட்டுமே) போன்ற நாடுகளிலும் வாழுகின்றனர். இத்தகைய நாடுகளிலேயே எதிர்வரும் காலங்களில் தமிழர்கள் இன அடையாளங்களைப் பேணுவதில் சிரமங்களையும் நீண்ட காலப் போக்கில் பலத்த சிரமங்களையும் எதிர்கொள்ள வேண்டி இருக்கும். இது பற்றித் தமிழர்கள் சிந்திக்க வேண்டும். இது ஒரு மேலோட்டமான கணிப்பே. இது ஒரு முற்றுமுழுதான ஆய்வல்ல, இது பற்றி வாதங்களைத் தொடர்ந்தும் ஆய்வாளர்கள், சிந்தனையாளர்களிடமிருந்து எதிர் பார்க்கிறேன்.

அத்தோடு ஒரு விடயத்தை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மொாசிய தீவில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் வாழுகின்றனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழ் மொழி தெரியாத ஒரு சூழலிலேயே வாழ்ந்து வருகின்றனர். இது வருந்தத் தக்கது. ஆயினும் சில கலாச்சார அடையாளங்களை மதத்தினூடாகவே (இந்து மதம்) பாதுகாத்து வருகின்றனர். (அல்லது அதன் மூலமே அடையாளப் படுத்துகின்றனர்.) இத்தகைய ஒரு சூழல் தென்னாபிரிக்காவில் வாழும் தமிழர்களிடையேயும் காணப்படுகின்றது. இத்தகைய ஒரு சூழல் புதிதாக இடம் பெயர்ந்த தமிழர்களிடையேயும் வருமா என்பது தெரியாது.

## பகைவளர்ப்போர் நாணுக!

மாணிக்க கங்கையெனும்
மா நதியின் மருங்கினிலே
பேணித் துதிக்கின்ற
பெருந்தலமாம் கதிர்காமம்
கோணிக் குலையாது
குழுமி நிற்கும் மும்மதத்தார்
நாணித் தலைகுனிவர்
நம்மினத்துள் பகைவளர்ப்போர்

புத்தளம் ஷாஜஹான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




● சங்கிலியன்

# தேசத்தின் குறிப்புகள்

> விடுதலைப் புலிகளுக்கும் சந்திரிகாவின் அரசுக்குமிடையிலான எட்டு மாதப் பேச்சு வார்த்தைகள் முறியடைந்து ஏப்ரல் மாதத்தில் போர் தொடங்கியுள்ளது.
>
> பேச்சுவார்த்தை மூலம் யார் யார் என்ன சாதித்தார்கள் யாருக்கு லாபம் என்பன பற்றி எடைபோட வேண்டியது இத் தருணத்தில் அவசியமானதும் கூட

இம்முறை முன்னர் நடைபெற்ற பேச்சுவார்த்தைச் சூழல்கள் போல் இருக்கவில்லை

முன்னர் நடைபெற்ற மூன்றுதடவைப் பேச்சுவார்த்தைகளும் ஐ.தே.க அரசுடனேயே நடைபெற்றன. இம்முறை மக்கள் முன்னணியுடனேயே பேச்சு நடைபெற்றது. ஐ.தே.க. ஒரு தனிக்கட்சியும் தீவிர வலது சாரிகள், இனவாதிகள், அமெரிக்க ஆதரவு நலனும் கொண்ட ஒரு கட்சியாகும்.

மக்கள் முன்னணியில் (சிறிலங்கா சுதந்திரக் கட்சி, பல இடது சாரிகள் முஸ்லீம் காங்கிரஸ், மலையகத்தில் புதிய அரசியல் கட்சியுமான மலையக முன்னணி இவற்றைக் கொண்ட) பல கட்சிக் கூட்டு அரசு ஆகும் இது அடிப்படையில் பலமும் பலவீனத்தையும் கொண்டது

பழைய ஐ.தே.க. அரசுபோல் போதிய பாராளுமன்றப் பெரும்பான்மை மக்கள் முன்னணிக்கு இல்லை. அத்தோடு தமிழ்க் கட்சிகள் பல வெளிப்படையாக மக்கள் முன்னணிக்கு பாராளுமன்றத்தில் ஆதரவு தருகின்றன. இந்த நிலமைகள் ஐ.தே.க. அரசுக்கு இருக்கவில்லை

மக்கள் முன்னணியின் தலைவராக உள்ள சந்திரிகாவிற்கு அரசியல் அனுபவமும், அரசை நிருவகிக்கும் அனுபவமும் இல்லவே இல்லை. இவரது மந்திரி சபையில் உள்ள பெரும்பாலானவர்களுக்கும் இதே நிலமை தான். ஆனால் ஐ.தே.க. அரசில் அனேகமானவர்களுக்கு அரசை நிர்வகித்த அனுபவமும், ஜே.ஆர்., பிரேமதாஸா ஆகியோருக்கு (பிழையான வழிமுறைகள், மக்கள் விரோதச் செயல்கள் கொண்டிருந்த போதும்) நீண்ட அனுபவம் கொண்ட தலைமைத்துவமும் உடையவர்கள்.

அத்துடன் இனவாதத்தையே கக்கி 77ம் ஆண்டு முதல் ஒவ்வொரு தேர்தலிலும் நவீன வாக்குகளைச் சுவீகரித்துத் தனது ஆட்சியை நிலைநிறுத்தி வந்தது ஐ.தே.க அரசு. வழமையான நேரத்திலும் அவ்வப்போது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புலி எதிர்ப்பு எனும் போர்வையில் பச்சை இனவாதத்தைக் கக்கி வந்தது. தேர்தல் காலத்தில் சொல்லவே தேவையில்லை.
ஆனால் மக்கள் முன்னணி அரசு கடந்த பாராளுமன்றத் தேர்தலில் சமாதானம், தீர்வு எனும் கோரிக்கையை முன்னிறுத்தியே பதவிக்கு வந்தது. இதையடுத்து நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும்/ ஷைய/ /உபய/இதே கோஷங்களை வைத்து அமோக ஆதரவு பெற்றது. இதில் குறிப்பிட வேண்டிய முக்கிய விடயங்களாவன ஜே.ஆரோ பிரேமதாசாவோ ஜனாதிபதித் தேர்தலில் போதியளவு ஆட்சிக்கட்சியில் இருந்ததால் அரச இயந்திரங்களைத் தமது செல்வாக்கிற்காகப் பயன்படுத்திக் கொண்டனர். அத்துடன் திட்டமிட்ட பல போலி மக்கள் உதவிகளை நடைமுறைப் படுத்தி தமது செல்வாக்கை நிலை நிறுத்தி இருந்தனர். ஆனால் சந்திரிக்காவிற்கு அந்த நிலை இருக்கவில்லை என்பது உண்மை. ஆயினும் ஜே.ஆர். பிரேமதாசா போன்றவர்களால் 51% வாக்குகளே பெறமுடிந்தது. அதேவேளை சந்திரிகா 62% வாக்குகளைப் பெற்றார். இதில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது தமிழ், முஸ்லீம் இடது சாரிக் கட்சிகள் சந்திரிகாவை ஆதரித்தும் கிழக்கில் சில இடங்களில் (முஸ்லீம் தமிழ் இடங்கள்) சந்திரிகாவிற்கு 99%மான வாக்குகள் வீழ்ந்தமையாகும் இந்நிலை ஒரு போதும் ஐ.தே.க. அமைப்பிற்கு இருக்கவில்லை.
மறுபுறத்தில் சந்திரிகாவிற்கு இணையான ஒரு பலமான தலைமையை ஐ.தே.கட்சியினால் முன்னிலைப்படுத்த முடியவில்லை. காமினியின் திடீர்க் கொலையும் ஐ.தே.கட்சியின் உள் முரண்பாடுகளும் கட்சியை பலவீனமான நிலைக்குத் தள்ளியமை உண்மையே.
காமினியின் படு கொலையைப் பச்சை இன வாதமாக்கி வாக்கு வேட்டையில் ஐ.தே.க ஈடுபட்ட போதும் அது படு தோல்வி கண்டது.
இதன் மூலம் அனுமானிக்கக் கூடியது. தெற்கில் இனவாதக் கருத்துக்கள் கீழ் நிலைக்குச் சென்று கொண்டிருந்ததும், தெற்கில் பல அறிஞர்கள், ஜனநாயக வாதிகள், இடதுசாரிகள் சமாதானத்திற்குச் சாதகமான பலமான பிரச்சாரத்தைக் கட்சி சார்பில்லாமல் கிராமம் கிராமமாக ஈடுபட்டதுமாகும். மக்களும் ஆர்வத்துடன் இவர்களின் கருத்துக்களைத் திரளாக வந்து கேட்டுச் சென்றதை நேரில் பார்த்த தமிழர்கள் ஆதாரப் படுத்தியுள்ளனர். மறுபுறத்தில் பலகீனமான உட்கட்சிப் பூசலில் சீரழிந்தும் ஆளுமையான தலைமைத்துவத்தையும் இழந்த நிலையில் ஐ.தே.கட்சியால் மீண்டும் ஒரு உடனடியான பெரிய அளவில் இனவாத எழுச்சியை ஏற்படுத்தி சந்திரிகா ஆட்சிக்கு அச்சுறுத்தலாகவோ அல்லது ஆட்சியைக் கைப்பற்றும் சூழலோ இருக்கவில்லை.
எனவே இந்தச் சூழல் முன்னெப்போதும் இருந்ததில்லை. சரியான இச்சூழலில் தமிழர்களின் பிரச்சனையை நல்ல முறையில் (முதலாளித்துவ அமைப்பு என்ற போதிலும்) தீர்வு காணக் கூடிய ஒரு சூழல் தெற்கில் அதிகளவே இருந்தது.
இது இவ்வாறு இருக்க சந்திரிக்கா அரசு பேச்சுவார்த்தைக்கு முக்கியம் கொடுப்பதாகவும் இதன் மூலம் ஒரு முடிவை எட்ட முடியும் எனும் பாங்கில் பத்திரிகை, தொலைக்காட்சிச் செய்திகள் அதிகமாக வெளிவந்தன. இது பலரிடம் ஒரு நம்பகத் தன்மையையும் நம்பிக்கையையும் விதைத்தது.
ஆனால் நடைமுறையில் யதார்த்தம் வேறு விதமாகவே இருந்தது. அரசு புதிய ஆயுத தளபாடம் வாங்குவதும் இராணுவத்தைப் பலப்படுத்துவதும் (குறிப்பாகக் கிழக்குப் பகுதிகளில்) நடைபெற்று வந்துள்ளது. மறுபுறத்தில் புலிகளுக்கு இரண்டு ஆயுதக்கப்பலில் ஆயுதங்கள் வந்ததாகவும் கிழக்கில் புலிகள் நிதி, ஆள் சேர்ப்பில் ஈடுபட்டனர்.
பேச்சுவார்த்தைகளின் போது விடுதலைப்புலிகள் வடக்கின் பொருளாதாரத் தடையையும் பாதைத் திறப்பையுமே முதன்மைக் கோரிக்கையாக வைத்தனர். பேச்சுக்கள் தொடர்பாக இரு தரப்பினருக்கும் அவசியமான போர் நிறுத்தம் பற்றி பேசப்பட்டது. இறுதியில் வழமைக்கு மாறான ஒரு போர் நிறுத்தம் உருவானது. இதனைப் போர்த் தவிர்ப்பு என்றே அரசு கூறி வந்தது. ஆயினும் புலிகள் நீண்ட அல்லது நிரந்தரக் கோரிக்கையை வலுவாக அரசிடம் விடுத்தனர். ஆயினும் அரச தரப்பு அதனைக் கருத்தில் கொள்ளவில்லை. உண்மையில் நிரந்தர சமாதானத்திற்கு நீண்ட கால அல்லது நிரந்தரப் போர் நிறுத்தம் அவசியமானது. அப்படி ஒரு நிரந்தரப் போர் நிறுத்த ஒப்பந்தம் வந்திருப்பின் இரு தரப்பினருக்கும் இடையிலான பரஸ்பர நம்பிக்கை அதிகரித்திருக்கும். சமாதானப் பேச்சுக்கு இது அடித்தளமான விதிகளை இட்டிருக்கும். இந்த வகையில் அரசு பெரிய பிழையை விட்டிருந்தது.
இரண்டாவதாக இருவரும் போர்த் தவிர்ப்பு




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உடன்பாட்டைக் கண்காணிக்க மூன்று வெளிநாட்டுப் பிரதிநிதிகளை அழைப்பது பற்றியது. வெளிநாட்டுப் பிரதிநிதிகள் இலங்கைக்கு வந்த போதும் அவர்களைத் தகுந்த பிரதேசத்தில் போர்த் தவிர்ப்பைக் கண்காணிக்கும் பகுதியில் நிலை கொள்ள விடவில்லை. இதற்கான தடங்கலை அரசே மேற் கொண்டு வந்தது. அரசு ஏன் வெளிநாட்டுப் பிரதிநிதிகளைக் கடமையில் ஈடுபட விடவில்லை என்றதற்கான காரணத்தைத் தெளிவுபடுத்தவில்லை. இதை அரசு நடைமுறைப்படுத்தி இருந்தால் போர்த் தவிர்ப்பு ஒப்பந்தத்தினைப்புலிகள் முறிப்பது பற்றிதயக்கம் கொண்டிருக்க ஏதுவாக இருந்திருக்கும் (ஆனால் அரசு தனது நலன் காரணமாகத் தவிர்த்திருந்தது.)

விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தையின்போது இப்பிரதிநிதிகளைக் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்த வேண்டும் என்பதைப் பிரதானப்படுத்தியிருக்க வேண்டும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அழைப்பானது ஒரு வகையில்சர்வதேச அரங்கில் எமது பிரச்சினையை (கீழ்நிலை ராஜதந்திரிகள மட்டமாயினும்) ஓரளவு முன்னிலைப்படுத்தி உள்ளது.



புலிகள் பேச்சுவார்த்தையில் வைத்த கோரிக்கையில்;

* பொருளாதாரத் தடை நீக்கம், கடல் வலயத் தடை எடுத்தல், பூநகரி முகாம் எடுத்தல், அதனோடு சம்பந்தப் படுத்தி பூநகரிப் பாதை திறத்தல் என்பன அடங்கின. ஆனால் அரசோ கணிசமான அளவு பொருளாதாரத் தடையை எடுப்பதாகவும் கடல் வலயத் தடைச் சட்டத்தை நீக்குவதாயும் சொல்லியது: ஆனால் நடைமுறைப்படுத்தவில்லை.

இக் கோரிக்கைகள் யாயும் நியாயபூர்வமானவை தான். ஆயினும் பாதை திறப்பில் புலிகள் பூநகரி முகாம் அகற்றும் கோரிக்கை பற்றிப் பல விமர்சனங்கள் உண்டு. இதில் பிரதானமானது: அரசியல் கோரிக்கைகளில் இராணுவக் கோரிக்கையைச் சேர்த்திருப்பது நடைமுறைச் சாத்தியமற்றது என்பதும் அரசை உடனடியாக ஒரு பெரிய இராணுவ முகாமை அகற்றும்படி கேட்பது சந்தேகம் கொள்ள வைக்கும் என்பதுமாகும்.

பாதை திறப்பில் புலிகள் அரசினை அம்பலப் படுத்தும் முயற்சியாக அரசியல் ரீதியான காய் நகர்த்தலில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பதே அரசியல் அவதானிகளின் விமர்சனமாகும். இதன்படி பூநகரிப் பாதையில் இருந்து இராணுவ முகாமை ஆயிரம்மீட்டர் எடுக்க வைத்திருக்கலாம் அத்தோடு மக்கள் எத்தகைய இராணுவத் தொல்லைகள் இன்றிச் சென்று வருவதாகவும் இருந்திருக்க வேண்டும். இப்பிரதேசத்தில் வெளிநாட்டுப் பிரதிநிகள் கண்காணிப்பாளராகச் செயற்பட அரசை [illegible] நடைமுறைப் படுத்தப்பட்டிருந்தால் ஒரு சில நாட்களிலேயே அரசும் இராணுவமும் இந்த நடைமுறையைக் கட்டாயம் மீறி இருக்கும் இதன் மூலம் இவர்களைச் சர்வதேச ரீதியாக அம்பலப் படுத்தியிருக்க முடியும் அப்போது இராணுவ முகாம் அகற்றும் கோரிக்கையை புலிகள் முன்னிறுத்தி இருப்பின் அது அரசியல் சாணக்கியமானதும் குறிக்கோளை அடையக் கூடியதுமாக இருந்திருக்கும் என எதிர் கூறப்படுகிறது.

அடிப்படை இனப்பிரச்சனை தீர்க்கப்படும் போது இராணுவ முகாம்கள் அனைத்தும் அகற்றப்பட வேண்டும் என்பது கட்டாயம் ஆகும். அதற்கு முன்னர் இராணுவ விடயங்கள் பற்றிப் பேசுவது இரு தரப்புக்கும் ஒத்துக் கொள்ளாது.

அரசு கூடப் பூநகரி முகாம் அகற்றுவது ஒன்றும் திடமான காரியம் அல்ல. மீண்டும் போர் தொடங்கினால் கூட அரசு உடனடியாகப் பூநகரி முகாம் அமைப்பது பெரிய கஷ்டமான விடயமும அல்ல.

ஆயினும் அரசின் நோக்கு வேறு வகையானதாகவே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்துள்ளது.

1. இராணுவ மட்டங்களில் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு எதிர்ப்பு நிலை இருந்து வந்துள்ளது. இதனால் இராணுவத்தைத் திருப்திப் படுத்த வேண்டிய நிலை சந்திரிகாவிற்கு இருந்தது. (ஆயினும் உண்மையான தீர்வு பற்றிச் சந்திரிகாவிற்கு அக்கறை இருந்திருப்பின் சிறந்த முறையில் இராணுவத்தின் இறுக்கமான நிலையைத் தவிர்த்து அவர்களைப் படிமுறையாகத் தனது அரசியல் வழிக்குக் கொண்டு வந்திருக்க முடியும்.) இந்த நிலையில் ஒரு பிரதான இராணுவ முகாமை அகற்ற உடன்படின் இராணுவ மட்டத்தில் பலமான பிரச்சனைகளைச் சந்திக்க வேண்டி வரும் என சந்திரிக்கா நினைத்திருந்தார். மறு புறத்தில் இராணுவ நிலை அகற்றும் புலிகளின் கோரிக்கை மூலம் முன்னர் பிரேமதாசாவின் நிலை தனக்கும் வரலாம் என சந்திரிகா நினைத்தது. அதாவது சில விடயங்களில் பிரேமதாசா உடன்பட்ட போதும் பின்னர் புலிகள் போரைத் தொடங்கியதால் அவரால் பதில் சொல்ல முடியாத நிலை ஏற்பட்டது. இப்படி நடப்பின் அது தெற்கில் தனது அரசியல் ஸ்திரத்தைப் பாதிக்கும் என நினைத்தார்.

2. பேச்சுவார்த்தைக் காலத்தில் அல்லது போர்த் தவிர்ப்புக் காலத்தில் புலிகளை எந்த அளவு தம்மைப் பலப்படுத்தியுள்ளனர் என்பதைக் கணிப்பிடச் சந்திரிகா அரசு முனைந்தது.

3. சரியான தீர்வுத் திட்டத்தைக் கொண்டிராத சந்திகா அரசு புலிகள் வெறுமனவே பொருளாதாரப் பிரச்சனைகளை மட்டும் பேசுவதால் இலாபம் அடைந்திருந்தது. ஆயினும் இடையிடையே புலிகளைப் பரிசோதிப்பதற்காக சந்திரிகா அரசு ஒவ்வொரு தடவைப் பேச்சுவார்த்தைக் கால கட்டங்களிலும் அரசியல் தீர்வுத் திட்டம் பற்றிப் பேசுவோம் என அறிக்கைகள் விட்டன. ஆனால் அரசின் தந்திரோபாயம் பற்றிப் புரிந்து கொள்ளாத புலிகள் பொருளாதாரப் பிரச்சனையே முதல் என்று வலியுறுத்தி வந்தனர். இதனைச் சாதகமாக்கிய அரசு புலிகளை இறுக்கமான ஒரு நிலைக்குத் தள்ளிவிட முனைந்தது. இதற்கு ஏற்ற வகையில் அமைந்தது தான் பூநகரி இராணுவ முகாம் அகற்றப்பட வேண்டும் என்ற புலிகளின் கோரிக்கை. இதைச் சாதகமாக அரசு பயன்படுத்தி ஒரு இறுகல் நிலைக்குப் புலிகளைக் கொண்டு வந்து நிறுத்தியது.

மறு புறத்தில் போர்த் தவிர்ப்பைக் கண்காணிக்க மூன்று நாட்டுப் பிரதிநிதிகளுக்கும் புலிகளும் அரசும் உடன்பட்டது பற்றி இந்தியாவிற்கு விசனத்தை ஏற்படுத்தி இருந்தது. அதில் தனது நாட்டு மத்தியஸ்த்தக் கோரிக்கை இல்லாததும் புலிகளுடன் அரசு பேச்சுக்குச் சென்றதுமே இந்திய அரசின் கோவத்திற்குக் காரணமாகும்.

பேச்சுவார்த்தைக் காலத்தில் சந்திரிகா அரசு இந்தியாவிற்கு நல்லெண்ண விஜயத்தை மேற் கொண்டிருந்தது. அங்கு சந்திரிகாவினால், புலிகளுடனான பேச்சு வார்த்தை இலங்கைப் பிரச்சனையில் ஏனைய நாடுகள் சம்பந்தப் படவில்லை எனும் கருத்துப் படக் கூறியதாகக் கூறப்படுகிறது. இதுவும் இந்தியாவிற்குச் சினத்தைக் கொடுத்திருந்தது. மாதம் புலிகளுக்கு ஒரு ஆயுதக் கப்பல் வந்ததாகக் கூறப்படுகிறது. இது பற்றித் தெரிவதாவது ஆயுதங்கள் புலிகளுக்குக் கிடைப்பதை இந்திய அரசு தடுக்க முனையவில்லை. மாறாக அது ஆயுதங்கள் கிடைப்பதையே விரும்பியுள்ளது. இதுபற்றிக் கடைசியாகக் கிடைத்த தகவலின் படி இந்திய அரசே பங்களாதேஷிற்கு அனுப்பி பங்களாதேஷ் துறைமுகத்தில் இருந்து இன்னொரு கப்பலில் புலிகளுக்கு அனுப்பப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இதன் மூலம் இந்தியா இலங்கை அரசுக்கு ஒரு மறைமுகப் பாடம் கற்பிக்க நினைத்திருக்கலாம். மறு புறத்தில் புலிகளுக்கு ஆயுதம் கிடைப்பின் அவர்கள் இனி எமக்கு ஆயுதங்கள் கிடைப்பதில் தடங்கல் இருக்காது என்றும், இந்தியா இதை அனுமதிக்கிறது, தொடர்ந்தும் அனுமதிக்கலாம் எனும் எண்ணம் புலிகளுக்குத் தோன்ற வேண்டும் என்றும் இந்தியா நினைத்திருக்கலாம். இதன் மூலம் புலிகளைப் போருக்கு ஆசை காட்டித் தள்ளிவிடும் உத்தியாகும்.

சுட்டு வீழ்த்தப்பட்டதாக சகல செய்தி ஸ்தாபனங்களும் தெரிவித்தன. புலிகளின் தாக்குதல் ஏவுகணைத் தாக்குதல் என்றே நம்பப்படுகிறது. (ஆனால் தாம் சுட்டு வீழ்த்தியதாகவே புலிகள் கூறி வருகின்றனர்). இந்நிகழ்வானது 12 வருடப் போரில் ஒரு பாய்ச்சலாகவே கணிக்கப் படுகிறது. இதன் மூலம் போர்ச் சமநிலையில் ஒரு மாறுதல் உருவாகியுள்ளது உண்மையே. இதுபற்றி இந்தியப் பிரதமர்கூடத் தமது பயத்தை வெளியிட்டிருந்தார்.

விமான எதிர்ப்பு ஏவுகணைகள் பொதுவாகப் போராடும் அமைப்புகளிடம் கிடைத்துவிடக்கூடாது என்பதில் அமெரிக்காவும், மேற்கு நாடுகளும், ஏனைய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆயுத உற்பத்தி நாடுகளும் கவனமாகவே இருந்து வருகின்றன. காரணம் இவை 'கண்டவன் கையில் அகப்பட்டால் அரச இராணுவ விமானங்கள் மட்டுமன்றிப் பயணிகள் விமானங்களும் ஆபத்துக்கு உள்ளாகலாம் என்பதை உணர்ந்திருந்தன.

ஈழப் போராட்டத்திலும் இதே நிலைதான். ஆயினும் இலங்கை அரசைவிட இந்திய அரசே ஆரம்ப காலம் முதல் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் (ஏவுகணைகள்) ஈழப் போராளிகள் கையில் கிடைத்துவிடக் கூடாது என்பதில் அதிக கவனம் செலுத்தி வந்தது. இதன் காரணம் இந்தியாவைப் பொறுத்தவரை இலங்கை அரசைத் தன் 'கட்டுப்பாட்டு□க்குள் வைத்திருக்கவே ஈழப் போராளிகளைக் கையாள நினைத்தது. இதனால் எந்த ஒரு பகுதியினரதும் (இலங்கை அரசோ, போராட்ட அமைப்போ) கை ஓங்குவதை இந்தியா விரும்பவில்லை. காரணம் தமது பிடி இளகிவிடும் என்பதை இந்தியா நன்கு உணர்ந்திருந்தது. விமான எதிர்ப்பு ஆயுதம் போராளிகளிடம் கிடைப்பது போராளிகளின் கையை ஓங்க வைக்கும் என்பதில் இந்தியா தெளிவாக இருந்தமையால் போராளிகள் ஏவுகணையைப் பெற்றுவிடாமல் தகுந்த கவனத்தோடு இருந்தது.

ஆனால் திடீர் நிகழ்வாக சோவியத் யூனியன் சிதறியமை, கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் மாற்றம் என்பன சில தளம்பல் நிலைமைகளை ஏற்படுத்தின. அதில் முக்கியமானது ஆயுத விற்பனைக் கட்டுப்பாடும் கைமாற்றமும் ஆகும்.

சோவியத் யூனியன் பல நாடுகளாக உடைந்தபின் அந்தந்த நாடுகள் தமது வருமானத்திற்காக ஆயுதங்களைப் போட்டா போட்டியிட்டு விற்றன. குறிப்பாக உக்ரேனியா போன்ற நாடுகள் அதிகளவில் ஆயுத விற்பனையில் ஈடுபட்டன. இவர்கள் ஆயுத விற்பனையில் சர்வதேச ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்கவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டது.

இந்தத் தருணத்தில் குறிப்பிட வேண்டிய ஒரு விடயம் உண்டு. புலிகள் விமானங்களைச் சுட்டு வீழ்த்திய பின் இந்தியா இது தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் புலிகளுக்கு உக்ரேனியாவில் இருந்தே ஆயுதங்கள் வந்தன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் இந்தியா மறைமுகமாக வெளிப்படுத்திய செய்தி, தான் புலிகளுக்கு ஆயுதங்கள் வழங்கவில்லை என்பதை இலங்கைக்கும் வெளியுலகிற்கும் காட்டுவதாகும்.

புலிகளுக்கு ஏவுகணைகள் கிடைப்பதில் இந்தியாவுக்கு இன்னொரு சிக்கல் உண்டு. அது, இன்னொரு காலத்தில் தான் படைகளை அனுப்ப நேர்ந்தால், அப்போது விமானங்களைப் பாவிக்க முடியாது போகலாம் என்பதாகும்.

போர்த் தவிர்ப்பு முறிவடைந்ததால் புலிகள் விமான எதிர்ப்பு ஏவுகணை வைத்திருப்பதும் ஏனைய இராணுவ நடவடிக்கைகளும் புலிகள் பலமான நிலையிலேயே இருப்பதை நிரூபித்துள்ளது. ஆனால் போர்த் தவிர்ப்பு முறியும் நிலையில் புலிகள் முக்கியமான இரு விடயங்களைக் கவனத்தில் கொள்ளவில்லை.

1. சந்திரிகாவின் முகம்: சந்திரிகா கடந்தகால

சுவடுகள்

தமிழ் மாத இதழ் நோர்வே

ஏழாண்டு நிறைவிதழ்

1988ன் பிற்பகுதியிலிருந்து மாத இதழாகத் தொடர்ந்து வெளிவரும் சுவடுகள் தனது ஏழாண்டு நிறைவையொட்டி சிறப்பு மலரொன்றை வெளியிட உத்தேசித்துள்ளது. இவ்விதழில் புலம்பெயர்ந்தோர் இலக்கியத்துக்கு இதுவரை பங்களித்த அனைவரது எல்லாவித படைப்புக்களும் இடம்பெற வேண்டுமென விரும்புகிறோம். படைப்புக்கள் தாளின் இருபக்கங்களிலும் எழுதப்படலாம். தயாரிப்புக் காலத்தைக் கணக்கில்கொண்டு, படைப்புக்களை விரைவில் அனுப்பி உதவுங்கள். மலர் சிறப்புறப் படைப்பாளிகளினதும், வாசகர்களினதும் ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன. "மலருக்கான படைப்பு" என கடிதவுறையில் குறிப்பிடுங்கள்

SUVADUGAL,
HERSLEBS GT 43, 0578 OSLO,
NORWAY

SP Design



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜனாதிபதி போல் குறிப்பாக பிரேமதாஸா போல் மனித உரிமைகளை மிக மோசமாக மீறுபவர் என்ற தோற்றப்பாட்டைக் கொண்டவரல்லர். மாறாக இவர் ஒரு சமாதானப் புறாவாகவும் ஜனநாயகத்தை நிலைநாட்ட வந்தவராகவும் தன்னை இலங்கை அரசியலிலும் சர்வதேச ரீதியிலும் நிலைப்படுத்திய தோற்றத்தைக் கொண்டவர்.

2. சந்திரிகாவிடம் இனப் பிரச்சனைக்குச் சரியான அரசியற் தீர்வு இல்லை என்பதைப் புலிகள் சரியான நேரத்தில் அம்பலப்படுத்தத் தவறியிருந்தனர். பேச்சுவார்த்தைகளின் போது புலிகள் கட்டாயம் நிரந்தர அரசியற் தீர்வுத் திட்டம் பற்றிப் பேச அரசை நிர்ப்பந்தம் செய்திருக்க வேண்டும். ஆனால் புலிகள் அதைச் செய்யவில்லை.

இவை சந்திரிகாவிற்கு இலங்கையில் மட்டுமல்ல உலக ரீதியாகவும் நல்ல தோற்றத்தை ஏற்படுத்தி இருந்தன. அதிலும் குறிப்பாக புலிகள் போரைத் தொடங்கியதால் அரசுக்குத் தன்னை நியாயப்படுத்த இலகுவான நிலை ஏற்பட்டுள்ளதை மறுப்பதற்கில்லை. கனடா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய சமூக நாடுகள் புலிகள் போர் தொடங்கியதையும், வன்முறையைக் கைவிடும்படியும் கண்டித்திருந்தன.

நிலைமையைச் சந்திரிகா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி ஆயுத தளபாடங்கள் வாங்குவதில் தற்காலிகமாகவேனும் வெற்றி பெற்றுள்ளார்.

தற்போதைய நிலையில் வெளிப்படையாக இந்தியா மறுத்த போதும் இரண்டு கப்பல்களில் இந்தியா ஆயுதங்கள் அனுப்பியுள்ளமையும் சர்வதேச நிலைமைகள் தமிழருக்குச் சாதகமாக இல்லை என்பதையே காட்டுகின்றன.

போர் தொடங்கிய பின் இந்தியாவுக்கு அவசர அவசரமாக சந்திரிகா விஜயம் செய்தார். அங்கு 'இன்டியா டுடே' சஞ்சிகைக்கு அவர் வழங்கிய பேட்டியில் புலிகளுக்கு எதிரான கடும் போக்கை வெளிப்படுத்தியிருந்தார். இந்தப் பேட்டி பற்றிப் பலரும், சந்திரிகா அரசியல் முதிர்ச்சியற்றவர் என்றே கருத்துத் தெரிவித்திருந்தனர். ஆயினும் இதில் ஒரு விடயம் கவனிக்கப்பட வேண்டியது. விடுதலைப் புலிகளைப் பற்றிக் கடுமையான கருத்துத் தெரிவித்த அவர், ஜேஆர், பிரேமதாசா பற்றியும் ஏன் மோசமானவர்கள் எனக் கருத்துத் தெரிவிக்க வேண்டும் என்ற கேள்வி எழுகிறது. இதன் மூலம், ஜேஆர், பிரேமதாஸா இந்திய எதிர்ப்பாளர்களாக இருந்தனர் என்று கூறித் தனது இந்திய விசுவாசத்தை வெளிப்படுத்தியிருக்கிறார் என்பதே உண்மை. இதன் மூலம் இந்தியாவிடம் இருந்து அதிக உதவிகளை அவர் எதிர்பார்க்கிறார் என்பதை யாரும் உணரலாம்.

சந்திரிகாவின் விஜயத்தையடுத்துப் பாக்கு நீரிணையில் இந்தியா - இலங்கை கூட்டு ரோந்துக்கு இந்தியா உடன்பட்டதாக அறியப்படுகிறது. ஆயினும் தமிழகத்தில் அதிமுக தவிர்ந்த ஏனைய கட்சிகளும் அமைப்புகளும் கண்டித்ததை அடுத்து இந்தியா இது தனது வழமையான ரோந்து நடவடிக்கை என அறிவிக்க வேண்டி நேரிட்டது.

சந்திரிகாவின் விஜயத்தின் பின்னர் எந்த ஆயுத உதவியும் இலங்கைக்கு வழங்க இந்தியா உடன்படவில்லை என அறிவித்தபோதும், இரண்டு கப்பல் நிறைய ஆயுதங்கள் கொழும்புக்கு வந்ததாகக் கூறப்படுகிறது. அத்துடன் தனது முக்கிய படைப்பிரிவைத் தெற்கு நோக்கி இந்தியா நகர்த்தியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இத்துடன் முன்னர் வெறும் அரசியல்வாதிகள் மட்டத்தில் விட்டுவிட்டு ஒலித்த 'ராஜீவின் கொலைக்குக் காரணமான பிரபாகரனை நாடுகடத்த வேண்டும்' என்ற கோரிக்கை தற்போது அரச அதிகாரிகள் மட்டத்தில் ஒலித்திருக்கிறது. இது இந்தியாவின் 'பொறுத்த நேரத்தில் சரியான காய் நகர்த்தல்' என வர்ணிக்கப்படுகிறது. தமிழர்களுக்குப் பாதகமான இந்த நிலைப்பாட்டை இதுவரை காலம் தாமதித்தே வந்தது இந்தியா. இதன் மூலம் உலக அரங்கில் புலிகளைத் தனிமைப்படுத்துவதே இந்தியாவின் நோக்கமாக இருக்கக் கூடும்.

உள்நாட்டில் ராணுவ ரீதியில் புலிகள் பலமான நிலையில் உள்ளனர். ஆயினும் சர்வதேச ரீதியில் பலமிழந்தே உள்ளனர்.

சரியான அரசியற் தீர்வு முன்வைக்கப்படாத வரையில் வெளிநாட்டு ராணுவ ஆலோசகர்களோ, ஆயுதங்களோ புலிகளை அழிக்க முடியும் என யாராவது நம்பினால் அது கருத்தற்ற ஒன்றாகவே இருக்கும்.

'இன்டியா டுடே' பேட்டியும் அதனையடுத்த சந்திரிகாவின் கடும் போக்கும், இராஜதந்திரமற்ற நடவடிக்கைகளாகும். இதன் மூலம் புலிகள் சந்திரிகா அரசுடன் சமாதானப் பேச்சுகளில் ஈடுபடக்கூடிய சாத்தியங்கள் குறைந்துவிட்டன என்றே கூறவேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

● சமுத்திரன்

# ஐரோப்பாவில் நிறவாதம்

## அதன் அடிப்படைகளும் அவதாரங்களும் - ஒரு வரலாற்றுக் குறிப்பு.

நாம் ஒரு இனத்துவ மையவாத நிறவாதத்தில் இருந்து ஒரு ஐரோப்பிய மையவாத நிறவாதத்தை நோக்கி, வேறுபட்ட அங்கத்துவ தேசங்களின் தனித்தனி நிறவாதங்களில் இருந்து ஒரு பொதுவான சந்தை நிறவாதத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றோம். - அ.சிவானந்தன் (1991)



சிவானந்தனின் மேற்கோள் ஒன்றுடன் இந்தக் கட்டுரையை ஆரம்பிப்பது சாலப்பொருந்தும். அவர் ஐரோப்பாவில் பிரபல்யம் வாய்ந்த நிறவாத எதிர்ப்புச் சிந்தனையாளரும் செயல் வீரரும். முப்பத்தைந்து வருடங்களாக இலண்டனில் அமைந்துள்ள Institute of Race Relation ஐ மையமாகக் கொண்டு சர்வதேச ரீதியில் இயங்கி வரும் சிவானந்தன் மேற்கின் நிறவாதத்தின் மாறிவரும் கோலங்கள் பற்றியும் அவற்றை எதிர்க்கும் வழிவகைகள் பற்றியும் தொடர்ச்சியாக எழுதி வருகிறார். சிவானந்தன் கூறுவது போல் இன்றைய ஐரோப்பாவில் தன் இனங்களின் இனத்துவ மையவாதத்திற்குப் பதிலாக அவற்றை எல்லாம் பலமாக ஊடறுத்துச் செல்லும் ஐரோப்பிய மையவாதக் கருத்தமைவு ஸ்தாபன மயமாகிவருகிறது. இன்றைய ஐரோப்பிய ஒன்றியத்தில் சில நாடுகள் இன்னமும் சேரவில்லை. குறிப்பாக நோர்வேயும் சுவிற்சலாந்தும் சேராதிருப்பது ஒன்றியத்தின் அங்கத்தவர்களுக்கு அதிருப்தியைக் கொடுத்துள்ளது. நோர்வேயும் சுவிற்சலாந்தும் ஐரோப்பிய ஒன்றியத்தின் சம்பிரதாய பூர்வமான அங்கத்தவர்கள் இல்லாதிருக்கலாம். ஆனால் அது இவ்விரு நாடுகளையும் பரவிவரும் ஐரோப்பிய மையவாதத்திலிருந்து தப்ப வைக்கவில்லை. உண்மையில் நோர்வேயிலும் சுவிற்சலாந்திலும் இனத்துவ மையத்தில் இருந்து பிறக்கும் நிறவாதத்துடன் ஐரோப்பிய மையவாத நிறவாதமும் இணைந்திருப்பதைக் காணலாம். அதாவது இலத் தேசியவாதத்தினதும் ஐரோப்பிய மையவாதத்தினதும் மோசமான தன்மைகள் இணைவதை நடைமுறையில் காணலாம்.

இந்தக் கட்டுரையின் நோக்கம் ஐரோப்பாவில் நிலவும் நிறவாதத்தின் வரலாற்றுப் பின்னணியின் சில அம்சங்களை விளக்குவதாகும். நிறவாதம் எனும் தமிழ்ச் சொல் Racism எனும் ஆங்கிலச் சொல் பிரதிபலிக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அர்த்தங்களை முழுமையாகப் பிரதிபலிக்கிறது என்று சொல்ல முடியாது. ஆயினும் இங்கு நிறவாதம் Racism எனும் சொல்லின் தமிழ்ப் பிரயோகமாகவே பயன்படுத்தப் படுகிறது. இதே அர்த்தத்தில் நிறப்பிரிவு எனும் சொல் Race எனும் சொல்லின் தமிழ்ப் பதமாகிறது.

சமீபத்தில் எனது ஐரோப்பிய நண்பர் ஒருவர் தனக்கும் எண்பது வயதைத் தாண்டிவிட்ட இன்னொரு ஐரோப்பியருக்கும் இடையே ஏற்பட்ட ஒரு விவாதம் பற்றிக் கூறியது இங்கே நினைவு வருகிறது. இவர்கள் இருவருமே வெள்ளையர். எனது நண்பர் நிறவாத எதிர்ப்புள்ள ஒரு பெண். அவருடன் வாதித்த வயோதிபர் ஒரு ஆண். அந்த வயோதிபர் மேற்கு ஐரோப்பியரின் நிறத்துவ மேன்மை பற்றி எனது நண்பருக்குக் கூறியவை, வெள்ளை நிறவாதத்தின் அடிப்படைகளின் தன்மைகளையும், இந்த நிறவாதம் எவ்வாறு ஒரு வெள்ளை மனிதனின் உலகப் பார்வையை நிர்ணயிக்கிறது என்பதையும் அறிந்து கொள்ள உதவக் கூடியன. அந்த வயோதிபரின் வாதம் பின்வருமாறு சென்றதென எனது நண்பர் கூறினார்.

நவீன உலகின் விஞ்ஞானத் தொழில் நுட்பக் கண்டு பிடிப்புக்களை எல்லாம் செய்தவர்கள் மேற்கு ஐரோப்பியர்கள். இவர்களே தொழில் புரட்சியைச் செய்தவர்கள். இந்த நிறப்பிரிவினரே இன்றைய உலகைத் தொழில் நுட்ப - பொருளாதார - கலாச்சார ரீதியில் இணைத்தவர்கள். உலக ரீதியில் பலவேறு இனங்களையும் நாகரீகங்களையும் தமது இயற்கையான உயர்நிலை மூளைத்திறனால் வெற்றி கொண்டவர்கள். இவர்கள் மற்றைய நிறப்பிரிவினரையும் கட்டுப்படுத்த வல்ல சமூக அமைப்புக்களை உருவாக்கினர் என்றால் இவர்களால் உருவாக்கப்பட்ட ஸ்தாபனங்களை மற்றைய இனத்தவர் பாவனை செய்து தமது ஸ்தாபனங்களை உருவாக்கினார்கள் என்றால் அதை இந்த வெள்ளை நிறப்பிரிவிடம் இருக்கும் இயற்கையான ஆற்றல்களின் நிரூபணம் என்றே கொள்ள வேண்டும். மனித குலம் கடவுளின் படைப்பு என்றால் தூய வெள்ளை நிறப்பிரிவிற்கே அவர் இயற்கையான அதி உயர்நிலைத் தன்மைகளைக் கொடுத்து விட்டார். மனித குலம் கடவுளின் படைப்பில்லை எனில் இந்த நிறப்பிரிவினர் உலகளாவிய போட்டிக்கு ஊடாகத் தமது இயற்கையான மேம்பாட்டை நிரூபித்துள்ளனர்.

எப்படி இருக்கிது இந்த வாதம்?

ஒரு வயோதிபர் சாலையில் தனியாக வாழும் சராசரி வெள்ளைத் தனி மனிதனின் கருத்துக்கள் இவை. நவீன மேற்கத்திய நிறவாதத்தின் அடிப்படைகள் இந்த மனிதர் மிகவும் தெளிவாக முன்வைத்துள்ள கருத்துக்களில் உறைந்திருக்கின்றன. அப்படியாயின் இத்தகைய நிறவாதத்தின் அடிப்படை வரைவிலக்கணம் என்ன?

நிறவாதத்திற்கு சமூக விஞ்ஞானிகள் வழங்கும் பொதுவான வரைவிலக்கணத்தைப் பின்வருமாறு கூறலாம்.

நிறப்பிரிவின் அடிப்படையில் உயிரியல் ரீதியில் பிதுரார்ஜிதமான (பரம்பரையாக) பெறப்படும் தன்மைகளும் (traits) மனிதரின் ஆளுமை, புத்தித் திறன், கலாச்சாரம் போன்றவற்றின் தன்மைகளுக்குமிடையே காரண ரீதியான தொடர்பு (causal link) இருப்பதாலேயே சில நிறப்பிரிவுகள் மற்றவற்றை விட இயல்பாகவே மேம்பட்ட நிலையைப் பெறுகின்றன எனும் வாதமே நிறவாதம்.

இந்த வாதத்தின் போக்கிலேயே ஒரு குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலில் வெள்ளை ஐரோப்பிர் முதல் தர நிறப்பிரிவினர் எனும் கருத்தமைவு வகுக்கப்பட்டது. எனது நண்பருடன் வாதித்த அந்த வெள்ளை வயோதிபர் வெளிப்படுத்திய கருத்துக்களின் அடியில் வெள்ளை நிறப்பிரிவு உயிரியல் ரீதியில் உயர்வானது எனும் கருத்தமைவு ஒரு மத நம்பிக்கை போல் பதிந்திருக்கிறது. நவீன உலக நாகரீகம் என ஒன்றைக் குறிப்பிட முடியுமாயின் அது முதலாளித்துவத்தின் சர்வதேச ரீதியான வளர்ச்சியுடனும் பரவலுடனும் சம்பந்தப்பட்டு இருப்பதைத் தவிர்க்க முடியாது. இன்று தொழில் மயப்படுத்தப்பட்ட (அதாவது முதலாளித்துவ விருத்தி பெற்ற) நாடு பின்னடைந்து நாட்டிற்கு அதன் எதிர் கால பிம்பத்தைக் காட்டும் கண்ணாடி போல் அமைந்துள்ளது என மார்க்ஸ் 19ம் நூற்றாண்டில் எழுதினார். அவர் அப்படி எழுதக் காரணமாயிருந்தது அவரது வரலாற்றுப் பொருள் முதல்வாத அணுகு முறையாகும். அவரது வரலாற்றுப் பார்வையில் உயிரியல் நிர்ணயிப்பு வாதத்திற்கு இடமே இல்லை. ஆனால் முதலாளித்துவ உற்பத்தி அமைப்பையும் அதன் உந்து சக்திகளில் ஒன்றாகிய தொழிற் புரட்சியையும் உலகிற்கு ஆக்கிக் கொடுத்தவர்கள் மேற்கத்தியரே என்றும் இதை அவர்கள் சாதித்தமைக்கான காரணம் அவர்களிடமிருந்த இயற்கையான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இயல்புகளே என்றும் இந்த இயற்கையான இயல்புகள் நிறப்பிரிவு சார்ந்தது என்றும் வாதிடுவது வரலாற்றின் நகர்ச்சிக்கு உயிரியல் ரீதியான காரணிகளை அடிப்படை ஆக்குவதாகும். இதையே நிறவாதம் செய்கிறது.

நவீன மேற்கத்திய நிறவாதம் 15ம் நூற்றாண்டளவில் உருப்பெற ஆரம்பித்த போதும் 19ம் நூற்றாண்டிலேயே பூரணமான கருத்தமைவு வடிவத்தைப் பெற்றதெனலாம். இந்தக் கருத்தமைவின் வரலாற்று ரீதியான உருவாக்கம் மேற்கத்திய காலனித்துவ - முதலாளித்துவ - ஏகாதிபத்திய எழுச்சிப் போக்குகளுடன் இணைந்திருக்கிறது. ஜேர்மனிய நாஸிசத்தின் வளர்ச்சியும் அதன் கருத்தமைவு ரீதியான மேலாட்சி நிலையும் நவீன மேற்கத்திய நிறவாதத்தின் தன்மைகளை நிர்ணயிப்பதில் முக்கிய தன்மை வகித்தன.

முதலில் சற்றுப் பின்னோக்கிப் பார்ப்போம். 15ம் நூற்றாண்டு, சரியாகச் சொன்னால் 1492 கொலம்பஸ் யுகத்தின் ஆரம்பம் இதுவே மேற்கத்திய நிறவாதத்தின் ஆரம்பம் எனக் கூறுகிறார் பிரபல வரலாற்றாசிரியரும் தலை சிறந்த ஏகாதிபத்திய எதிர்ப்புச் சிந்தனையாளருமான பசில் டேவிட்சன் (Basil Davidson). இப்படிச் சொல்வது இந்தக் காலகட்டத்திற்கு முன்னர் ஒரு குழுவைச் சார்ந்தவர் மற்றைய குழுவைப்பற்றி சந்தேகங்கள், வெறுப்புணர்வுகள் கொண்டிருக்கும் போக்குகள் இருக்கவில்லை என்பதல்ல. இன நிற அடிப்படையில் தப்பெண்ணங்களும் எதிர்ப்புணர்வுகளும் உயர்வு-தாழ்வுச் சிக்கல்களும் ஆதிகாலம் தொட்டே இருந்து வருகின்றன. ஆனால் நிறவாதம் - Racism - என இன்று கருதப்படும் கருத்தமைவின் தோற்றத்தை கொலம்பஸ் பிரதிநிதித்துவம் வகித்த குறிப்பான ஆக்கிரமிப்புத் திட்டங்களின் காலகட்டத்திலேயே இனம் காண்கிறார் டேவிட்சன். கொலம்பஸின் பிரயாணங்களிற்கு முன்னரே போர்த்துக்கீசர் ஆபிரிக்கர்களை அடிமைகளாகப் பிடித்து வரும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். பிறிதொரு நிறப்பிரிவினரை - அதாவது கறுப்பர்களைத் தம்மைப் போன்ற மனிதர்களல்ல, உண்மையில் பூரண மனித அந்தஸ்த்திற்குத் தகுதியற்றவர்கள் எனும் கருத்தின் அடிப்படையில் அவர்களை வாங்கவும் விற்கவும் கூடிய பண்டங்கள் போல் அடிமைகளாக்குவதை நியாயப்படுத்த நிறவாதம் பயன்பட்டது. இங்கு நிற ரீதியான அடிமைத் தனத்தை ஸ்தாபன ரீதியாக்கும்



– Ohoi, kaptein . . . De står på grunn!

கருவியாக நிறவாதம் பயன்பட்டது.

கத்தோலிக்க இராச்சியங்களாயிருந்த அன்றைய போர்த்துக்கல்லிலும் ஸ்பெயினிலும் ஆபிரிக்கர்கள் அடிமைகளாக ஏல விற்பனை செய்யப்பட்டனர். இதற்கு ஆரம்பத்தில் இந்நாடுகளின் பொது மக்களிடம் இருந்து எதிர்ப்பு எழாமல் இல்லை. ஆயினும் அதை ஊதாசீனம் செய்து விட்டு நிறவாத அடிமையாக்கல் தொடர்ந்தது. அடிமையாக்கப்பட்ட கறுப்பர்கள் பூரண மனிதர்கள் இல்லையாதலால் அவர்களுக்குச் சுதந்திரத்தின் பயன்பாடு பற்றித் தெரிந்து கொள்ளும் ஆற்றல் கிடையாது என்றும் இத்தகையோரைக் கிறிஸ்துவத்திற்கு அனுமதித்து அடிமைகளாக்குவது அவர்களுக்குச் செய்யும் நற்பணி என்றும் ஆளும் வர்க்கங்களின் சார்பில் நியாயப்பாடுகள் வழங்கப்பட்டன. அன்றைய போர்த்துக்கல்லிலும் ஸ்பெயினிலும் (Davidson 1992) இந்தப் பின்னணியின் விளைவான கொலம்பஸ் எத்தகைய பணியினைச் செய்தார் என்பது இப்போ வரலாறாகி விட்டது. நவீன காலனித்துவத்தின் வரலாறு நிறவாதத்தினதும், அதற்குத் துணை போகும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வகையில் திரிக்கப்பட்ட கிறிஸ்துவத்தினதும் வரலாறாகவும் அமைகின்றது என்றால்மிகையாகாது. இந்த நிறவாதம் குறிப்பிட்ட குறிப்பிட்ட இனத்துவ மையவாதங்களுடனும் இணைந்திருந்தது - உதாரணமாக ஸ்பெயின், போர்த்துக்கல்.

இந்தியாவைத் தேடிச் சென்ற கொலம்பஸ் வழிதவறிப் போய் அமெரிக்காவை புதிய உலகைக் கண்டு பிடித்தார். 18ம் நூற்றாண்டில் பிரித்தானியாவில் வாழ்ந்தவரும் நவீன பொருளியலின் தந்தை எனப்படுபவரும் மாபெரும் அரசியல் பொருளியலாளருமான அடம்ஸ்மித் (Adam Smith) கூறினார் நன்னம்பிக்கை முனையைச் சுற்ற முடிந்ததும் அமெரிக்காவைக் கண்டு பிடித்ததும் வரலாற்றின் இரு பெரும் சம்பவங்களென. இவை சர்வதேச வர்க்கத்திற்கும் காலணித்துவத்திற்கும் கிடைத்த வரப்பிரசாதங்கள். இவற்றினால் மிகப் பெரிய இலாபத்தைப் பெற்றது பின்னர் வந்த பிரிட்டிஷ. காலணித்துவ ஏகாதிபத்தியம் - இது அடிமை வர்க்கத்தை உச்சக் கட்டத்திற்கு எடுத்துச் சென்றது. பிரிட்டிஷ காலணித்துவ - ஏகாதிபத்திய கால கட்டம் நிறவாதத்திற்குப் பலமூட்டியது என்றும சொல்லலாம். தொழிற் புரட்சியைக் காணாது பின்தங்கி நின்ற ஸ்பானிய, போர்த்துக்கீசியக் காலணித்துவங்களால் தொழில் புரட்சியினதும், விபரல் வாதத்தினதும் பிறப்பிடமான பிரித்தானியாவுடன்போட்டி போட முடியவில்லை.

பிரித்தானியாவின் உலகளாவிய ஆதிக்கம் வெள்ளை நிறவாதத்தின் தர்க்கங்களின் நிரூபணம் போல் அமைந்தது. அதே நேரம பிரித்தான்யா வெள்ளை நாடுகளின் மத்தியில் ஒரு விஷேடமான நாடு எனும் கருத்தும் - அதாவது பிரிட்டிஷ இனத்துவ மையவாதம் - வலுப்பெற்றது. பிரிட்டிஷ தேசியவாதம் ஸ்பெயினையும் போர்த்துக்கல்லையும் அவற்றின் இனத்துவ தேசியவாதங்களையும் பார்த்து எள்ளி நகையாடியது. இந் நாடுகள் நாகரீகப் பின்னடைவில் தத்தளிப்பவையாய்க் காட்சியளித்தன. நவீன காலணித்துவத்தையும் நிறவாதத்தையும் உருவாக்கிய போர்த்துக்கல்லுக்கும் ஸ்பெயினுக்கும் இந்தக் கதி! சமூக டார்வினிச வாதங்கள் இப்போ பிரித்தானியரின் உயர்வு மனப்பாங்கிற்குத் தீனி போட்டன. வெள்ளை நிறப்பிரிவினர் மத்தியிலும் உள்ளார்ந்த இயற்கையான வேறுபாடுகள் இருப்பது மட்டுமல்ல இங்கிலாந்தின் உயர் வர்க்கத்தின் ஆண்களிடமே புத்தித் திறனும் ஆற்றலும் இயற்கையாகச் செறிந்திருந்தன எனும் கருத்தும் வலுப் பெற்றது. அதாவது வர்க்க ரீதியான மேலாதிக்கத்திற்குப் பரம்பரை ரீதியான விளக்கம் கொடுக்கப்பட்டது. நிறவாதமும் இனவாதமும் ஆணாதிக்க வாதத்திற்கு மிகவும் சாதகமா?.....

நிறவாதமும் இனவாதமும் ஆணாதிக்க வாதத்திற்கு மிகவும் அடிப்படையான சேவைகளைச் செய்பவை. ஆக்கிரமிப்பிற்கு ஊடாகக் குறிப்பிட்ட நிறப்பிரிவின் ஆளும் வர்க்கம் மற்றய மக்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதற்குப் பயன்படும் பிரதான கருவிகளான இராணுவம், நிர்வாக அமைப்புக்கள் ஆண்களின் பிரத்தியேகப் பகுதிகளாக இருக்கும் போது பால் ரீதியில் அவர்களிடம் இயற்கையான சிறப்பியல்புகள் - அதாவது பெண்களிடம் இல்லாத சிறப்புகள் - இருப்பதால் தான் அவர்கள் வீரத்தின் உறைவிடமாக விளங்குகிறார்கள் எனும் வாதத்திற்கு காலனித்துவ நிறவாதம் மிகவும் அடிப்படையாகின்றது. இது போன்றே ஆக்கிரமிப்புத் தன்மை கொண்ட இனவாதமும் ஆணாதிக்க வாதத்திற்கு உதவுகின்றது. ஆனால் வெள்ளை நிறவாதத்தின் அதி சிறப்பான அவதாரத்தை உற்பத்தி செய்யும் ஆற்றலை பிரித்தானிய தேசிய-நிறவாதிகள் அல்ல ஜேர்மனிய நாஸிகளே கொண்டிருந்தனர். நாஸிசத்தின் கருத்தமைவு ரீதியாக முன்னோடியாக விளங்கியவர்கொபினோ ( Gobineau) என்பவர் எனலாம். இவர் 19ம் நூற்றாண்டில் நிறப்பிரிவுகளின் அசமத்துவம் பற்றி ஒரு கட்டுரை (An essay on Inequality of Human Races) எனும் நூலை வெளியிட்டார். வெள்ளை நிறப்பிரிவின் மேன்மை பற்றியும் அதன் ஆரியத் தன்மை பற்றியும் இவர் விரிவுரைகள் ஆற்றினார். சகல நிறப்பிரிவுகள் மத்தியில் வெள்ளை நிறப்பிரிவு உயர்வானது எனவும் வெள்ளை நிறப்பிரிவினர்களுக்குள் ஆரியர்கள் அதி உயர்வானவர்கள் எனவும் கொபினோ விளக்கங்கள் கொடுத்தார். தூய ஆரியர்களைத் தேடினர் கொபினோவின் சீடர்கள். இவர்கள் உயரமானவராய் தூய வெள்ளையராய் நீண்ட தலையமைப்பைக் கொண்டவரான நோர்டிக் விதத்தினர் ( Nordic type) எனும் முடிவுக்கு வந்தனர். 20ம் நூற்றாண்டின் நாஸிசத்தின் பெருந் தலைவனான ஹிட்லர் இந்த மாதிரிக்குள் அடங்கவில்லை என்பது பற்றி இங்கு ஆராயத் தேவையில்லை. வெள்ளை நிறவாதிகள் தேடிய தூய வெள்ளை நிற உப கூட்டத்தை உயிரியல் ரீதியில் இனங் காண்பதில் வெற்றி பெற்று விட்டனர் என்பதே பிரதான செய்தி!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**தங்கா**

## என் தலையில்!...

கொலைக் குண்டிற்குத் தப்பி
குளிர்ச்சிறையினுள் வீழ்ந்த போதும்
மாற்றம் வந்ததாக மகிழ்ந்தேன்.
என் வயதில் எல்லோரும்
சுதந்திரமாய் பறந்து வரும்
நிஜம் கண்டு
நான், நான் ஆனதாக ஓர் கனவு
கனவு கலைய
நாழிகையாகியும்,
விளையாடப் போன தம்பியும்,
சினிமா அரங்கிலோ, டிஸ்க்கோவிலோ
தன்னைத் தொலைத்த அண்ணாவும்
வீடு வந்ததாய் இல்லை
வழமை போன்றே அம்மாவும் அப்பாவும்
ஓடி ஓடி காதல் புரியும்
தமிழ் சினிமாவின்
நாயகன் நாயகியை வியந்தபடி
நானோ
இந்த ஐரோப்பிய அறையினுள்
தமிழ் கலாச்சாரம் காக்கும்
தமிழ்ப் பெண்ணாக.....

*நிறவாதத்தின் இயக்கப்பாட்டிற்கு இனத்துவ மையவாதத்தில் எழும் அதசிய வஏதங்கள் இன்றியமையாதிருந்தன என்பதை இங்கு வலியுறுத்த வேண்டும். உதாரணமாக ஸ்பானியர்கள், போர்த்துக்கீசர்கள், ஆங்கிலேயர்கள், ஜேமனியர்கள் பிரான்சியர்கள் போன்ற தேசியப் பிரிவுகளுக்குள்ளே முதலாளித்துவத்தின் அரசியல் பொருளாதார கலாச்சார எழுச்சிக்கு முந்திய வரலாற்றுக் கால கட்டங்களில் சீன, இந்திய, எகிப்திய, எதியோப்பிய போன்ற வடக்கத்திய நாகரீகங்கள் உயர்நிலைகளைப் பெற்றிருந்த போது இச் சமூகங்களின் ஆளும் வர்க்கங்களின் கருத்தமைவுப் பார்வைகளும் விழுமியங்களும் மற்றய சமூகங்களைக் காட்டுமிராண்டிகளாகப் பார்த்தன. இங்கு நமது கவனத்தை ஈர்ப்பது முதலாளித்துவத்தின் சமூகப் புவியியல் ரீதியான விருத்திப் போக்குகளே.*

*ஸ்பானிய போர்த்துக்கீசிய காலனித்துவங்கள் நவீன முதலாளித்துவத்தின் வரலாற்றிற்கு உடனடியாக முந்திய காலச் சட்டத்தைச் சார்ந்தவை. இந் நாடுகளின் சமூக அமைப்புக்களில் முதலாளித்துவம் வளர உதவக் கூடிய சக்திகள் மிகவும் பலம் மிகுந்திருந்தன. நிலவுடமையினதும் வைதீகக் கதோலிக்க மதவாதத்தினதும் பிரதிநிதிகளிடமே அதிகாரம் இருந்தது. இவர்கள் தொழில்மயமாக்கலை நிராகரித்த அதே வேளை யுத்தங்களை விரும்பினர். ஸ்பானிய காலனித்துவத்தின் பொற்காலம் 15ம் நூற்றாண்டில் ஆரம்பிக்கிறது. இந்தக் காலத்திலே தான் ஸ்பெயினில் ஸ்பானிய - கத்தோலிக்க ஆட்சியாளரின் பூரண ஆதிக்கம் நிலை பெற்றது. இதற்கு முன்னர் ஏறக் குறைய எட்டு நூற்றாண்டுகள் அராபிய - ஆபிரிக்க முஸ்லீம் ஆதிக்கம் ஸ்பெயினின் கணிசமான பகுதிகளை ஆட்கொண்டிருந்தது. முஸ்லீம் ஸ்பெயின் விவசாயத்திலும் கலாச்சாரத்திலும் அறிவியற் துறைகளிலும் கிறிஸ்துவ ஸ்பெயினையும் விட மேலோங்கி இருந்தது என்பது வரலாற்று ஆய்வாளரின் கருத்து. ஆயினும் 15ம் நூற்றாண்டில் வெள்ளை-கத்தோலிக் ஆட்சி வெற்றி பெற்ற பின் இதற்கு - முந்தய குறிப்பாக முஸ்லீம் காலத்திய ஸ்பெயினின் வளர்ச்சி நிலை பற்றிய வரலாற்று உண்மைகள் நசுக்கப்பட்டன. ஐரோப்பிய நிறவாதம் வரலாற்றை இருட்டடிக்கும் கைங்கரியத்தை இங்கு தான் முதன் முதலில் கற்றுக் கொண்டது போலும்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அன்றய கத்தோலிக்கப் பிற்போக்காளர் மட்டுமல்ல அவர்களுக்குப் பின்னரும் - இன்றைய காலத்திலும் 15ம் நூற்றாட்டிற்கு முந்திய ஸ்பெயினின் வரலாறு பல மேற்கத்திய வரலாற்று ஆசிரியர்களால் நிறவாத நோக்கிலேயே அணுகப் படுவதை பல ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

ஆகவே ஐரோப்பிய நிறவாதத்தின் எழுச்சி கொலம்பஸ் யுகத்துடன் ஆரம்பிக்கிறது எனும் போது - இந்த ஆரம்ப வரலாற்றை ஐரோப்பிய மையவாத நோக்கில் எழுதும் நிறவாத மரபினதும் ஆரம்பம் என்பதை மறந்து விடக் கூடாது. ஐரோப்பியர்கள் பூகோளத்தின் மற்றைய பகுதிகளைக் கைப்பற்றுவது ஐரோப்பியரின் வரலாற்றுக் கடன் என்ற கர்வம்மிகுந்த நம்பிக்கையும் கைப்பற்றப்படும் பிரதேசங்களின் மக்களுக்கு ஐரோப்பியரின் வருகை நாகரீகத்தின் வருகையாகவும் வரலாற்றின் ஆரம்பமாகவும் அமைகின்றது என்ற ஏகாதிக்கக் கருத்தும் ஐரோப்பிய நிறவாதத்தின் அடிப்படை அலகுகளாகும். ஆனால் இந்த நவீன வரலாற்றை ஆரம்பித்து வைத்த ஸ்பெயினிடம் அதைத் தொடரும் உள்ளார்ந்த சக்தி இருக்கவில்லை. ஏனெனில் உலகின் வரலாறு முதலாளித்துவத்தின் தொழில் (உற்பத்தி) மூலதனத்தின் வரலாறு.

ஸ்பெயின் இதைச் சாதிக்கும் உள்ளார்ந்த நிலமைகளைக் கொண்டிருக்கவில்லை. ஸ்பெயின், போர்த்துக்கல், ஒல்லாந்து போன்ற நாடுகள் ஆரம்பித்த இந்த வரலாற்றைத் தொடரும் பிரதான சக்தியாகப் பிரித்தானியா பரிணமித்தது. இங்கிலாந்திலேயே முதலாளித்துவம் பிறந்து துரிதமாக வளரக் கூடிய நிலமைகள் இருந்தன. அங்கேயே முதலாளித்துவத்தின் முன் வரலாற்றுக் கருவியாயிருந்த வர்த்தக மூலதனத்தை நவீன உற்பத்தி மூலதனமாக - தொழில் மயமாக்கலின் மூலதனமாக மாற்றக் கூடிய ஸ்தாபன அமைப்புக்கள் தோன்றக் கூடிய நிலமைகள் இருந்தன. பிரிட்டிஷ முதலாளித்துவம் வளர்வதற்கு அந்த நாட்டின் உள்ளார்ந்த சமூக சக்திகள் எப்படி தொழிற் புரட்சியை உருவாக்க உதவினவோ அதே போல் அந்த முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாக வளர்வதற்கு பிரித்தானிய காலனித்துவமும் பழைய கிழக்கு இந்திய கம்பெனியும் உதவின.

இப்போ ஐரோப்பிய நிறவாதத்தின் மையம் இங்கிலாந்திற்கு மாறுகிறது. பூகோளத்தின் மற்றைய இனங்களுக்கு நாகரீகத்தை அறிமுகம் செய்யும் வெள்ளை மனிதனின் சுமை ஆங்கிலேய ஆணின்



சுமையாகின்றது. கொலம்பஸை நினைவு கூர இன்னும் ஸ்பெயினில் "Day of the Race" கொண்டாடப்படுகிறது.

ஆனால் கொலம்பஸின் ஏகாதிபத்திய நிறவாத ஆவியை பிரித்தானியா தனதாக்கிக் கொண்டது. ஆங்கில இனத்துவ மையவாதத்தின் வெற்றிக் கொடி இரண்டாவது உலக யுத்தம் வரை பெருமையுடன் பறந்த போதும் அதற்குப் புதிய சவால்கள் தோன்றிய வண்ணம் இருந்தன. இனத் தேசிய வாதங்கள் மேற்கு ஐரோப்பாவின் முக்கிய தன்மைகளில் ஒன்றாகிய போதும் இவை எல்லாமே வெள்ளை நிறவாதத்திற்குத் தொடர்ந்து தீனி போட்டன, போடுகின்றன. ஆகவே நிறவாதம் தொடர்கிறது. நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல் எழுச்சி பெறும் ஆக்கிரமிப்புத் தன்மை கொண்ட இனத் தேசியவாதம் நிறவாதத்தை ஒதுக்காது அதையும் தனதாக்கித் தனக்கே உரிய தூய்மைத் தன்மையை நிறவாதத்திற்குக் கொடுக்கிறது. ஜேர்மனிய மற்றய நாற்சிச வாதம் இத்தகையதே. இது வெள்ளை நிறவாதத்திற்கு ஒரு அதி நிறவாதத்தன்மையைக் கொடுக்கிறது.

இந்த வரலாற்றுக் குறிப்பு சமகால ஐரோப்பிய நிறவாதத்தின் பின்னணியைப் புரிந்து கொள்ள உதவலாம். நாற்சிசம் பற்றியும் இன்றய ஐரோப்பிய நிறவாதம் பற்றியும் பிறிதொரு கட்டுரையில் பார்ப்போம். அத்துடன் இன்னொரு அம்சமும் முக்கியத்துவம் அடைகிறது. அதாவது முதலாளித்துவத்தின் தொடர்ச்சி நிறவாதம் அவசியமா? நிறவாதமற்ற முதலாளித்துவ அமைப்பு சாத்தியமில்லையா? முதலாளித்துவ ஜனநாயகத்தின் தத்துவமாகிய தாராள வாதம் (லிபரலிசம்) நிறவாதத்தை ஆபூரிக்க முடியுமா? தனிமனிதனின் உரிமைகளை அடிப்படையாகக் கொண்டுள்ள தாராளவாதம் நிறவாதத்தை எதிர்க்கப் பயன்படவில்லையா? இத்தகைய கேள்விகளையும் ஆராய்தல் அவசியம்.

www.tamilarangam.net

**இங்கு ஏற்பட்டு வரும் நிறவாத அதிகரிப்பை எதிர்கொள்ளஇங்குள்ள அமைப்புகள் என்ன நடவடிக்கை மேற்கொள்கின்றன என்பதை அறியும் வகையில் ங்குள்ள சில அமைப்புகளைத் தொடர்பு கொண்டோம்.இங்கு அவர்களது பதில்கள் டம் பெறுகின்றன.**

## நோர்வே தமிழ்ச்சங்கம்

நோர்வே தமிழ்ச்சங்கம்

தமிழ் மக்களின் மொழி,கலை,கலாச்சார பாரம்பரிய பண்பாடுகளை பேணிப்பா துகாப்பதையும் புலம்பெயர்ந்து இங்கு வாழும் தமிழ் மக்களின் ஏனைய அன்றாட நடைமுறைப்பிரச்சனைகளை சமூகமாகத்தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதுடன்,இது போன்ற பிரச்சனைகள் எதிர்காலத்தில் ஏற்படாமல் இருப்பதற்காக செயல்பட்டு வருகிறது. இந்த வகையில் இங்கு வாழும் மக்களுக்கு நிறவாதப் பிரச்சனை ஒரு முக்கிய அச்சுறுத்தல் என்பதை நாம் அறிவோம். எனினும் நிறவாதப் பிரச்சனையில் எம்மைப் போன்ற வெளிநாட்டவர் அமைப்புக்கள் இங்குள்ள நிறவாதத்திற்கு எதிரான அமைப்புக்களுடன் இணைந்து வேலை செய்வதன் மூலமும், அவர்களின் நடவடிக்கைகளில் எமது மக்களை திரளாகப் பங்கு கொள்ளச் செய்வதன் மூலம் எமது பங்களிப்பினைச் செய்து வருகிறோம்.

அதே வேளை இங்குள்ள நிறவாதப் பிரச்சனையை முற்றாகப் புரிந்து செயற்படுவதற்கு இங்குள்ள அரசியல் கட்சிகளின் கொள்கை, கோட்பாடுகளை பூரணமாகத் தெரிந்திருத்தல் அவசியம் என நாம் கருதுகிறோம். ஏனெனில் இங்குள்ள எம்மவரில் பெரும்பான்மையோருக்கு வாக்குரிமை இருப்பதும் நகரசபைத் தேர்தல்களில் தாம் போடும் வாக்குகள் தமக்குப் பாதகமான விளைவுகளை உருவாக்காத வண்ணம் தேர்தல்களின் போது விழிப்புடன் நடந்துகொள்ளவேண்டும் என்பதையும் புரிந்து கொள்ளல் அவசியம். இதை நோக்கமாகக் கொண்டு தமிழ்ச்சங்கம், உள்ளூர் அரசியற் கட்சிகளின் கொள்கைகளை எம் மக்களிற்குத் தெளிவுபடுத்தி அதன் மூலம் நிறவாதப் பிரச்சனையில் கட்சிகளின் நிலைப்பாட்டையும் தெளிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக எமது மக்களின் பிரச்சனைகளிற்கு நியாயமான, சுதந்திரமான ஒரு தீர்வுக்காக நடைபெற்றுக் கொண்டிருக்கும் நடவடிக்கைகளுக்கு எமது பூரண பங்களிப்பை வழங்குவது ஒவ்வொரு தமிழரினதும் தார்மீகக் கடமையென நாம கருதுகின்றோம். அதே வேளை இந்நாட்டில் நிறவாதத்திற்கு எதிராக நாம் தொடுக்கும் எந்தவொரு போராட்டமும் இப்பிரச்சனைக்கு ஒரு நிரந்தரத் தீர்வைத் தரப் போவதில்லை. இதற்மாறாக எமது மக்களுக்கு இது போன்ற பிரச்சனையற்ற வாழ்க்கை, எமது சொந்த மண்ணில் மட்டுமே அமைய முடியும் என்பது எமது எண்ணம். எனவே இந் நிறவாதப் போராட்டத்தில் நாம் எமது முழுச்சக்தியையும் செலவிடாமல், இதற்கென இங்கு இயங்கும் ஏனைய நோர்வேஜிய அமைப்புக்களுக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்கிக் கொண்டு எமது மண்ணின் விடிவுக்கு உதவக் கூடிய நடவடிக்கைகளில் பங்கெடுத்துக் கொள்ளும் அதே நேரம், எமது மொழி, கலை, கலாச்சாரப் பாரம்பரியப் பண்பாடுகளைப் பேணுவதில் கூடிய கவனமெடுத்தல் அவசியமென நம்புகினிறோம்.

*-குகன் யோகராஜா.*
*-செயலாளர்-*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நோர்வே இந்து கலாசார மன்றம்:

தங்களது கடிதம் கிடைத்தது. இந்நாட்டில் வெகுவாகப் பரவிவரும் நிறவாதத்திற்கெதிரான எதிர்கொள்வுகளில் இந்து கலாசார மன்றம் பூரண ஒத்துழைப்பை வழங்கும். எனினும் எமது மன்றம் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாலும் சில ஒழுங்குமுறைகளை நடைமுறைப் படுத்துவதில் கால அவகாசம் தேவைப்படுவதாலும் தங்களின் வேண்டுகோளின்படி சுவடுகளில் பிரசுரிக்கக்கூடிய வகையில் ஆக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமைக்கு வருந்துகிறோம்.

தலைவர், அஜேய் விமலநாதன்

## கத்தோலிக்க தமிழ் இளைஞர் ஒன்றியம், நோர்வே

தமிழ் சமூகம் முகம்கொடுக்கும் நிறவாதம்

1965ஆம் ஆண்டின் ஐ.நா. பிரகடனத்தில் எந்த ஒரு குறிப்பிட்ட இனத்தினதும் மேலாண்மை கண்டிக்கப் பட்டிருப்பதுடன் அது அநீதியானதும் விஞ்ஞான ரீதியில் பிழையானதும் ஆபத்தானதும் என விதந்துரைக்கப்பட்டுள்ளது. இரண்டாம் உலகமகா யுத்தத்தின் 50ம் ஆண்டை நினைவுகூரும் இந்நாட்களில், இம்மகா யுத்தத்திற்கும், முன்னைய மகாயுத்தத்திற்கும் இனவாதமே மூலைக் கல்லாக அமைந்ததென்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். ஐரோப்பாவில் எங்கோ காணப்பட்ட நிறவாதம் இன்று மூலைமுடுக்கெல்லாம் பரவிவிட்டது. நோர்வே நாட்டிலும் நிறவாதத்தின் கோரப் பற்கள் இன்று மிக வேகமாக வளர்ந்து வருகின்றன.

அண்மையில் நோர்வே நாட்டுத் தேர்தல் ஆய்வாளர் ஒருவரது கருத்தில், வரவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்களில் ( Kommunevalg ) நிறவாதமே முக்கிய கருப்பொருளாக இருக்கும் என ஆருடம் கூறியுள்ளார். இன்னொரு ஆய்வானது நோர்வேஜியர்கள் நான்கு பேரில் ஒருவர் நிறபேதம் உள்ளவராக அல்லது வெளிநாட்டவரை வெறுப்பவராகக் காணப்படுவதாகக் கூறப்படுகிறது. சில வாரங்களுக்கு முன் 'முன்னேற்றக் கட்சி (Fremskritsparti ) என்ற நோர்வேஜிய இனவாத அரசியல் கட்சி ஒன்று 'இரண்டு பிள்ளைகளுக்கு மேல் பெறும் நோர்வே குடியுரிமை உடைய எந்த வெளிநாட்டுப் பிரசைக்கும், உண்மையான நோர்வேக் குடிமகன் வேலை வழங்கக் கூடாது' எனக் கூறியிருப்பது நோர்வே மண்ணில் நிறவாதத்தின் ஆழ, அகலங்களையும் அதன் உண்மைத் தோற்றத்தையும் தெளிவாகக் காட்டுகிறது. மூன்றாம் மண்டல நாடுகளில் இருந்து புலம்பெயர்ந்து வருவோர் கொள்ளைக்காரர், பயங்கரவாதிகள், நோய் காவிகள், சட்டங்களை மதிக்காதவர்கள் எற்று பரப்பப்படும் குற்றச்சாட்டுகள் நிறவாத நோக்கம் கொண்டவையே. இன்று நிறவாதமானது நோர்வேயில் குடியேறி உள்ளவர்களையும் புகலிடம் தேடியவர்களையும் பாதிக்கும் முக்கிய பிரச்சனையாகக் கொள்ளப்படுகிறது. இந்த வகையில் தமிழர்கள் இதற்கு விதிவிலக்கானவர்களல்லர். மாறாக, அண்மைக் காலங்களில் வட நோர்வேயிலும், மத்திய நோர்வேயிலும் சில குடும்பங்கள் நிறவெறியாளர்களின் தாக்குதலுக்கு உள்ளானதைக் குறிப்பிடலாம். மேலும் தமிழர்கள் நிறவாதத்தினால் பாதிக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்புச் சாதனங்களில் வெளிவந்ததைவிட, பல சம்பவங்கள் வெளிக் கொண்டுவராமலே புகைந்த நிலையிலும் எரிந்த நிலையிலும் உள்ளன. சில அரச அலுவலகங்களில்கூட இனவாதக் கெடுபிடிகள் தளிர்க்கத் தொடங்கியுள்ளன. குறிப்பாகக் காவல் துறையினர் தம்மை நாகரிகமான முறையில் நடாத்துவதில்லை என்ற குறைபாடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெருமளவு தமிழர்களின் வாயில் இருந்து உதிர்ந்துள்ளது. தொடர்புச் சாதனங்களைப் பொறுத்தவரையில்கூட யாரோ ஒரு 'காளிமுத்து' ஏதோ செய்து விட்டார் என்றால் அதைத் தமிழர் ஒருவர் செய்துவிட்டதாகப் பிரசாரமு செய்து எல்லாத் தமிழர்களையும் சந்தேகக் கண்ணோடு பார்க்க வைக்கும் (கொழும்பு நிலைபோல்) ஒரு ஆரோக்கியமற்ற சூழ்நிலையை உருவாக்குகின்றனர்.

நோர்வேயைப் பொறுத்தவரை நிறவாதக் கருத்துகளும் அதற்குரிய உந்தல்களும் ஒத்தாசைகளும் அண்டை நாடுகளில் இருந்தே மிக இலகுவில் வந்தடைகின்றன. ஒழுங்குபடுத்தப்பட்ட நிறவாதத்தை நசுக்க வேண்டின், அதனை மேலும் வளரவிடாது தடுக்க வேண்டின், மனித நேயத்திற்காக உழைக்கும் நிறுவனங்கள் யாவற்றையும் ஒன்றிணைக்க வேண்டும். பொதுக் கொள்கைத் திட்டம் ஒன்றின் கீழ் மேற்கூறிய நிறுவனங்களை ஒன்றிணைத்து, அதன் அடிப்படையில் நிறவாத எதிர்ப்புத் திட்டங்களை வகுத்தல் வேண்டும். இவ்வாறு வகுத்துக் கொண்டபின் நிறவாதத்திற்கு எதிரான பிரச்சாரங்களைத் திட்டமிட்ட ரீதியில் நிறுவன ரீதியில் மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக நிறவாதத்திற்கு எதிரான பிரசாரங்களை சிறுவர் பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழகம் வரை எடுத்துச் செல்ல வேண்டும். இளைஞர்கள் நிறவாதம் சம்பந்துமான சரியான கருத்துகளையும் நிலைப்பாடுகளையும் பெறும்பொருட்டு அதற்கான வழிமுறைகளையும் வாய்ப்புகயையும் ஏற்படுத்த வேண்டும். இப்பாரிய பொறுப்பானது மனித நேயம் கொண்ட அனைத்து நிறுவனங்களையுமே சாரும். மற்றும் சமூகத்தின் சகல கூறுகளிலும் நிறவாதம் சம்பந்துமான சரியான நிலைப்பாடுகள் நிலவ மேற்படி நிறுவணங்கள் உழைக்க முன்வர வேண்டும்.

தொடர்புச் சாதனங்களை மேற்படி நிறுவணங்கள் உச்ச ரீதியில் பயன்படுத்த வேண்டும். பாடசாலைகளைப் பொறுத்தவரை சமூகக் கல்வியில் மனிதநேயம், சமத்துவம், சகோதரத்துவம் போன்ற கருத்துகள் சரியான முறையில் அணுகப்பட்டு எதிர்கால சந்ததியினரான மாணவர்கள் மத்தியில் ஒரு தெளிவான நிலையை அவர்கள் கொண்டிருக்க வழிசெய்ய வேண்டும்.

அரசியல் தலைவர்களையும் கட்சிகளையும் இவ்வமைப்புகள் சந்தித்துக் கலந்துரையாடி நிறவாதத்தை முளையிலேயே கிள்ளி எறிய சட்ட நடவடிக்கைகளுக்கு வழிசெய்ய வேண்டும். நாசிசத்தின் உண்மைத் தோற்றங்களில் ஒன்றான நிறவாதத்தை வெற்றி பெற்றே ஆகவேண்டும். வெற்றி பெற்றால் மட்டுமே அவனியில் மனிதகுலம் உண்மையான சமாதானத்தில் வாழ முடியும்.

**மீதி அடுத்த இதழில்**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுவடுகள்

நாங்கள் என்ன பாவம் செய்து விட்டோம்? ஜுலை மாதமென்றால் தமிழ் மக்களுக்கு கலவரத்தைக் கொண்டுவரும் மாதம் என்றாகிவிட்டது. சமாதானம், யுத்தநிறுத்தம் என்றெல்லாம் வாய்நிறையப் பேசி வந்த சந்திரிகா அரசு முதல் தடவையாக தமிழ் மக்கள் மீது பாரிய யுத்தமொன்றை ஏவி விட்டுள்ளது. கடந்த சில வருடங்களாகவே தமிழ், சிங்கள, முஸ்லிம், மலையக இன மக்களுக்கு சமாதானத்தின் அவசியம் அதிகமாகவே, இருந்ததுடன் இருந்தும் வருகின்றது. இதை உணர்ந்த ஆளும் வர்க்கப் பிரதிநிதிகள் சமாதானம் என்னும் முகமூடியை அணிந்து இந்தச் சூழலை சாமர்த்தியமாக அறுவடை செய்து கொண்டனர்.

ஆயினும் ஆளும் வர்க்கத்தின் நலன், மக்கள் நலன் இரண்டுமே வேறு வேறு என்பதன் அடிப்படையில் மக்கள் சமாதானத்தை விரும்பிய போதும், ஆளும் வர்க்கம் போர் வெறியை மீண்டும் தூக்கிப் பிடிக்கின்றது. இதற்கு அது கூறும் காரணம் புலிகளிடமிருந்து தமிழ் மக்களை விடுவிப்பதற்காகவே என்று முதலைக் கண்ணீர் வடிக்கின்றது. தமிழ் மக்களையும், அவர்களின் நலன்களையும் சாராத எவருமே இதைச் சொல்வதற்கு தகுதியற்றவர்கள். ஏனெனில் இவர்கள், எல்லாத் தேசிய இனங்களின் உரிமைகளையும் உண்டு ஏப்பம் விடுவதிலேயே தமது இருப்புக்களைக் காப்பாற்றிக் கொள்கின்றனர். சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு புலிகளிடமே பேசவேண்டும் என்று சொல்லி வந்த சந்திரிகாவும், அவரைச் சார்ந்தவர்களும், போர் மூண்டவுடன் புலிகளிடமிருந்து தமிழ் மக்களை மீட்க வேண்டுமென கூறுவதாவது, அரசானது புனிதமானது என்னும் அடிப்படையில் வேண்டியபோது சமாதானம் பேசலாம், வேண்டியபோது போரை நடாத்தலாம் எனக்கருதுகின்றது. ஆனால் அடிமைப்பட்டு அல்லல்படும் இனம் எப்போதும் பேச்சுக்கள் மூலம் மட்டுமே அணுகவேண்டும் எனும் அரச ஓற்றைப் புனிதக் கோட்பாட்டை வலியுறுத்துகின்றது. மறுபுறத்தில் சிங்களப் பேரினவாதத்தின் ஒடுக்குதலுக்கு துணைபோவது போல் சில கொழும்புசார் புத்திஜீவிகள் அரசிடம் மனிதாபிமான போரை நடாத்தும்படி கோருகின்றனர். இதுவுங்கூட மேலே சொன்ன புனிதக்கோட்பாட்டையே வலியுறுத்துகின்றது.


ஆகவே நாம் அழுத்தம் திருத்தமாக சொல்லுகின்றோம்: நாம் சமாதானத்தை விரும்புகின்றோம். இச் சமாதானமானது இலங்கையில் வாழும் அனைத்து மக்களின் சுயத்தையும், கௌரவத்தையும், சமத்துவத்தையும் அங்கீகரிப்பதன் மூலம் மட்டுமே நிரந்தர சமாதானத்தை எட்டமுடியும். யுத்தத்தினால் அல்ல.

சுவடுகள் 67
வைகாசி'95



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பாலஸ்தீனம் ஒரு நீறுபூத்த நெருப்பு

-செவ்வந்தி-

[illegible]

(முன்தொடர்)

உலகின் மிகவும் பழமை வாய்ந்த நாகரிகங்களில் ஒன்றைக் கொண்ட பாலஸ்தீனத்தில் சுமார் 50 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மனிதர்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் வரலாற்று ஆய்வாளர்களால் முன்வைக்கப்பட்டுள்ளன. பூகோள ரீதியில் மிகவும் முக்கியம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ள பாலஸ்தீனத்துக்கு, அதுவே பலமும் பலவீனமும் எனலாம்.

ஆசிய, ஆபிரிக்க, ஐரோப்பியக் கண்டங்களின் சந்திப்பு முனையில் அமைந்துள்ள பாலஸ்தீனம் சுமார் 27 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் பரப்பளவைமட்டுமே கொண்ட சிறிய நாடு. மலைத் தொடர்களையும், சமவெளிகளையும், கடற்கரைகளையும், பள்ளத்தாக்குகளையும் (உலகின் மிகப் பிரபலமான ரிப்ட் பள்ளத்தாக்கு இங்குதான் உள்ளது) கொண்ட பாலஸ்தீனம் மண்வளங்களையும், மனித வளங்களையும் கொண்ட பிரதேசமாகும். பாலஸ்தீனத்தின் வடக்கு கிழக்கு எல்லைகளில் சிரியா, லெபனான், ஜோர்டான் ஆகிய நாடுகளும் தெற்கு மேற்குப் பகுதிகளில் முறையே செங்கடலும் மத்தியதரைக் கடலும் உள்ளன.

வரலாற்றுப் பெருமை மிக்க பாலஸ்தீனத்தின் கடந்த ஐயாயிரம் ஆண்டு வரலாற்றில் கிறிஸ்தவ, யூத, இஸ்லாம் ஆகிய மூன்று முக்கிய மதங்களும் ஆதிக்கம் செலுத்தியுள்ளன. கிடைக்கக்கூடிய நம்பிக்கையான தகவல்களின் அடிப்படையில் கி.மு.4000 ஆண்டுகளுக்கு முன் பாலஸ்தீனத்தில் குடியேறியவர்கள் அமோரியர்கள ( Amorits) அராமியர்கள் ( Araits ) ஆவர். அராபிய இனக்குழுவைச் சேர்ந்த இவர்களைத் தொடர்ந்து சுமார் 500 ஆண்டுகள் கழித்து அராபியத் தீபகற்பத்தில் இருந்து வந்த கானானியர்கள் ( Cananits ) பாலஸ்தீனத்தில் குடியேறினார்கள். விவசாயத்தையும் வர்த்தகத்தையும் தமது பொருளாதாரப் பின்னணியாகக் கொண்டிருந்த கானானியர்கள் வளர்ச்சியுற்ற நாகரிகக் கலாசாரத்தைக் கொண்டிருந்தனர். பைபிளின் பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள அமோணியர்களும் கானானியர்களும் மேற்கூறப்பட்டவர்களே. தொடர்ந்து வந்த காலங்களில் கானானியர்களின் வழித்தோன்றல்களான ஜெபூசியர்கள் (Jebusits) தங்களது அரசரான சலேம் (Salem) என்பவரது பெயரில் ஜெருசலேம் நகரை உருவாக்கினார்கள்.

கி.மு.1250ம் ஆண்டளவில் இல்லிரியா நாட்டைச் சேர்ந்த பிலிஸ்தீனியர்கள் ( Philistines ) கானானிய நாட்டின் தெற்குக் கிழக்குப் பகுதிகளைக் கைப்பற்றி கானானிய நாட்டிற்குப் பிலிஸ்தீனியம் எனப் பெயரிட்டனர். இப்பெயர் காலப்போக்கில் பாலஸ்தீனம் என மருவியது. காலப்போக்கில் கானானியர்களுக்கும், பிலிஸ்தீனியர்களுக்கும் திருமண, சமூக பொருளாதார உறவுகளும் விருத்தி அடைந்தது. கானானியர்களும், பிலிஸ்தீனியர்களும் இணைந்து பாலஸ்தீன இனமாக உருப்பெற்றனர். பாலஸ்தீனமும் செல்வம் கொழிக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பூமியாக விருத்தி அடைந்தது.

## யூதர்களின் வரலாறு

யூதர்களின் தோற்றம் பரம்பல் பற்றி ஆதாரபூர்வமாகத் தகவல்கள் முழுமையாக இல்லாவிடினும் கி.மு.1800ஆம் ஆண்டளவில் 'மெஸப்தேமிய நாட்டின் (பண்டைய மெசப்தேமியா என்பது இன்றைய ஈராக் நாட்டையே குறிக்கும்) 'சால்டியா பிரதேசத்தில் இருந்து ஆபிரஹாமும் அவரது இனக்குழுவான ஹீப்ரூக்கள் எனப்படும் இஸ்ரேலியர்கள் ஒவ்வொரு இடமாக அலைந்து கொண்டிருந்தனர். பண்டைய யூத கதைகளும் இதிகாசங்களும் இஸ்ரேலியர்களின் கடவுளான 'யாஹோவா (Yahweh) என்பவர் இஸ்ரேலியர்களைப் பாலும் தேனும் கொண்ட ஒரு வளம்மிக்க பூமிக்கு அழைத்துச் செல்வதாக வாக்களித்திருந்தார் எனக் கூறுகின்றன. இவ்வாறான நீண்ட அலைச்சலின் பின்பு ஆபிரஹாமும் அவரது இனக்குழுவும் ஜெருசலேம் நகருக்கு வந்தனர். ஆபிரஹாமிற்கு இரு பிள்ளைகள் இருந்தனர் எனவும் மூத்த மகனின் பெயர் இஸ்மாயில் எனவும் இளைய மகனது பெயர் ஈசாக் எனவும் 'வாரிசு உரிமைப் பிரச்சனையில் ஏற்பட்ட சிக்கல்களால் ஆபிரஹாமுக்கும் பணிப்பெண்ணுக்கும் பிறந்த அவரது மூத்த மகனான இஸ்மாயிலைத் தாயுடன் ஆபிரஹாமின் மனைவி துரத்தியதாக யூதக் கதைகள் கூறுகின்றன. (இவ்விவரங்கள் பைபிளின் பழைய ஏற்பாட்டிலும் உள்ளன)

ஆபிரஹாமும் அவரது இனக்குழுவும் ஜெருசலேம் வந்தபோது ஜெபூசியர்களின் மன்னனான 'மல்கி சாதக் ஆபிரஹாமிற்கும் அவரது இனக்குழுவான இஸ்ரேலியர்களுக்கும் ஹெப்ரூன் ( Hebron ) என்ற இடத்தில் தங்க அனுமதி அளித்தான். (இதே ஹெப்ரூனில்தான், 1994 ஒஸ்லோ ஒப்பந்தத்தின் பின் பாஸிச யூத இனவெறியன் ஒருவன் நூற்றுக்கணக்கான அப்பாவிப் பலஸ்தீன மக்களைச் சுட்டுக்காயப்படுத்தினான்) ஹெப்ரூன் என்ற இடத்தில் குடியேறிய இஸ்ரேலியர்கள் ஆடுமாடுகளை மேய்த்தும் வேட்டையாடியும் வாழ்ந்து வந்தார்கள். ஆபிரஹாமின் மரணத்தைத் தொடர்ந்து ஜெருசலேம் நகரில் ஏற்பட்ட குழப்ப நிலை காரணமாக ஹீப்ரூக்கள் (இஸ்ரேலியர்) எகிப்துக்குக் குடிபெயர்ந்தனர். எகிப்தில் பரோஹா மன்னர்களால் அடிமைகளாக்கப்பட்டனர். இவ்வடிமைத்தனம் 400 ஆண்டுகளுக்கு நீடித்தது. கி.மு.1250ம் ஆண்டளவில் மோஸஸ் (Mozes) என்பவரின் தலைமையில் எகிப்தில் இருந்து தப்பி வந்த இஸ்ரேலியர்கள் சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாகப் பாலஸ்தீனத்தில் சுற்றித் திரிந்தனர். இக்காலத்திலேயே மோஸஸிற்கு இஸ்ரேலியர்களின் கடவுளான யாஹோவா பத்துக் கட்டளைகளைப் பிறப்பித்தாரென்றும் (சினாய் மலையில் வைத்து) இஸ்ரேலிய மக்களுக்குரிய சட்ட ஒழுங்கு விதிகளை மோஸஸே உருவாக்கியதாகவும் யூத மரபுவாதிகளும் யூத இதிகாசங்களும் கூறுகின்றன.

மோஸஸின் மரணத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட பிணக்குகள் காரணமாக இஸ்ரேலியர்கள் 12 கோத்திரங்களாகப் பிரிந்திருந்தனர். எனினும் யோசுவா என்ற தலைவரின் கீழ்ப் பிரிந்திருந்த 12 கோத்திரங்களும் ஒன்றிணைந்தன. ஒன்றுபட்ட இவர்கள் நிகழ்த்திய முதலாவது தாக்குதல் பாலஸ்தீனத்தின் கிழக்குப் பகுதி மீதாகும். பெரும் உயிர்ச் சேதங்களை ஏற்படுத்தி இரத்தம் ஆறாக ஓடவைத்த இக் கோர யுத்தத்தில் இஸ்ரேலியர் வரலாற்றுப் பெருமை மிக்க ஜெரிக்கோ நகரம் உள்ளடங்கலாகப் பல கிராமங்களையும் நகரங்களையும் நரபலி வேட்டை ஆடினர். இப்பன்னிரு கோத்திரங்களும் ஒன்றிணைந்து 'சவூல் என்ற மன்னரின் கீழ் தமது முதலாவது அரசை நிறுவினர். சவூல் பிலிஸ்தீனியர்களால் கொலையுண்டான். தொடர்ந்து தாவீது (David) மன்னனானான். கி.மு.1000ம் ஆண்டளவில் ஜெபூசியர்களிடம் இருந்து ஜெருசலேம் நகரைக் கைப்பற்றிய தாவீது மன்னன் அதையே தலைநகராக்கிக் கொண்டான். கி.மு.970இல் தாவீது மரணம் அடைந்ததைத் தொடர்ந்து சாலமன் (Solaman) கி.மு.932வரை ஆண்டான். இதன் போது பாலஸ்தீன நாடு இரு பிரிவானது. நாட்டின் வடக்குப் பிரதேசம் இஸ்ரேல் என்றும் தென்பகுதி யூத நாடு என்றும் பிளவுபட்டது. தொடர்ந்து கி.மு.721ல் அஸ்ரியர்கள் யூத, இஸ்ரேல் நாடுகளை அழித்துக் கைப்பற்றினர். கி.மு.587ல் பபிலோனியர்கள் (மெசப்தேமியா, பபிலோனியா இரண்டும் இன்றைய ஈராக்கையே குறிக்கும்) பாலஸ்தீன நாட்டை (யூத, இஸ்ரேல்) அஸ்ரியர்களிடம் இருந்து கைப்பற்றி சாலமன் கட்டிய கோயிலையும் எரித்தனர். ஆயிரக் கணக்கான யூதர்கள் சிறைப் பிடிக்கப்பட்டு பபிலோனியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். கி.மு.538ல் பேர்சிய நாட்டு மன்னன் சைப்ரஸ் பாலஸ்தீனத்தைக் கைப்பற்றினான். இவன் யூதப் பெண்ணைத் திருமணம் முடித்தமையால் பாலஸ்தீனத்தில் யூதர்கள் சரிசமமாக நடத்தப்படவும், உரிமைகள் பெறவும் வழிவகுத்தான். இதனைத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடர்ந்து கி.மு.332ல் கிரேக்க மன்னன் அலெக்ஸாண்டர் பாலஸ்தீனத்தை அடிமைப் படுத்தினான். கி.மு.63ல் ரோமாபுரிப் படைத்தளபதி பும்பே (Pompay) தலைமையிலான படை பலஸ்தீனத்தைக் கைப்பற்றியது. இக் காலகட்டத்தில் கிறிஸ்துவின் பிறப்பு இடம்பெற்றது. பாலஸ்தீனத்தின்மீது மேற்கொண்ட தாக்குதல்களை எதிர்த்து மெக்காபியர்கள் எனும் யூத 'பூசாரி குடும்பத்தினர் யுத்தம் செய்து வென்றனர்.

## கிறிஸ்து பிறப்பின் பின்னான சம்பவங்கள்

கி.பி.70ல் ரோமப் பேரரசன் டைடஸ் ஜெருசலேம் நகரைக் கைப்பற்றி உழைக்கும் திறன் கொண்ட யூதர்களைப் பிடித்துவந்து ரோம் நகரில் அடிமைகளாக விற்றான். கி.பி135ல் ரோமானியப் படைத்தளபதி ஹெட்ரியன் (Hetrian) பாலஸ்தீனத்தை மீளவும் தாக்கி யூதர்களை ஏனைய நாடுகளுக்குத் துரத்தியடித்தான். இதைத் தொடர்ந்து மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்ட அரசியல்மாற்றங்கள் பாலஸ்தீனத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இஸ்லாமிய மத ஆதிக்கம் மத்திய கிழக்கில் ஏற்படுத்திய தாக்கம் பாலஸ்தீனத்தில் ரோமாபுரி மன்னரின் ஆட்சிக்கு முடிவு கட்டியது. கி.மு.638ல் கலிப் ஒமார் (Caliph Omar) என்பவரின் தலைமையிலான படை பாலஸ்தீனத்தை ரோமானியர்களிடம் இருந்து கைப்பற்றியது. இதைத் தொடர்ந்து அங்கு இஸ்லாமிய அரசு ஆட்சி உருவாகியது. இதனால் யூதர்கள் பாரிய தொல்லைகட்கு உள்ளாகவில்லை. யூதர்களும் முஸ்லிம்களும் பெருமளவு சமத்துவமாகவே நடாத்தப் பட்டதாக வரலாறு கூறுகிறது. இதைத் தொடர்ந்து கி.பி.1099ல் ஐரோப்பிய கிறிஸ்தவப் படையான சிலுவைப்படை பாலஸ்தீனத்தை லத்தீன் மன்னராட்சிக்கு உட்படுத்தியது. கி.பி1187ல் சலாவுதீன் என்பவரின் தலைமையின்கீழ் மீளவும் அரபு ஆட்சி ஏற்பட்டது. 1492ல்ஸ்பானிய நாட்டில் இருந்தும் 1495க்குப் பின் போர்த்துக்கே நாட்டில் இருந்தும் யூதர்கள் துரத்தியடிக்கப் பட்டனர். இதையடுத்து 1517ல் துருக்கியைச் சேர்ந்த ஒட்டோமான் பேரரசர் பாலஸ்தீனத்தைக் கைப்பற்றினார். 400 ஆண்டுகால துருக்கியின் ஆட்சிக்குப் பிறகு 1917ல் இங்கிலாந்து பாலஸ்தீனத்தைக் கைப்பற்றியது. அன்று தொடங்கிய பாலஸ்தீன மக்களது துயரம் இன்றுவரை தொடர்கிறது.

(வரும்)

## அவமானப்படுத்தப்பட்டவள்

உங்களுடைய வரையறைகளின்
சாளரத்திற்குப் பின்னால்
என்னைத் தள்ளமுடியாது.
இதுவரை காலமும்,
நிரந்தரமாக்கப்பட்ட சகதிக்குள் கிடந்து
வெளியே எடுத்து வரப்பட்ட
ஒரு சிறிய கல்லைப்போன்று
நான்
என்னைக் கண்டெடுத்துள்ளேன்.

என்னுடைய நாட்களை நீங்கள்
பறித்துக்கொள்ள முடியாது.
கண்களைப் பொத்திக் கொள்ளும்
உங்கள் விரல்களிடையே
தன்னைக் கீழிறக்கிக் கொள்ளும்
ஒரு குட்டி நட்சத்திரம் போன்று
எனது இருத்தல்
உறுதி பெற்றது.

நிராகரிக்கப்பட முடியாதவள் நான்.

இனியும் என்ன
தூக்கியெறியப்பட முடியாத கேள்வியாய்
நான் பிரசன்னமாயுள்ளேன்
என்னை
அவமானங்களாலும்
அநாகரிக வார்த்தைகளாலும் போர்த்துங்கள்.

ஆனால்,
உங்கள் எல்லோரினதும்
நாகரிகம் வாய்ந்த கனவுகளின் மீது
ஒரு அழுக்குக் குவியலாய்
பளிச்சிடும் உங்கள் சப்பாத்துகளை
அசுத்தம் செய்கிறேன்.

என்னுடைய நியாயங்கள்
நிராகரிக்கப்படும்வரை
உங்களின் எல்லாப் பாதைகளும்
அழுக்குப் படிந்தவையே.


● சிவரமணி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நாற் சந்தி



அன்புடையீர்,

சுவடுகள் கடைசி இதழ் கிடைக்கப் பெற்றேன். மிக்க நன்றி. கடல்கடந்து தமிழ் இலக்கியத்துக்காய் சுவடுகள் புரிந்துவரும் தியாகத்தை மனதார வாழ்த்துகிறேன். இலங்கையின் வட - கிழக்கில் மீண்டும் போர் மூண்டுள்ளது. குண்டுச் சத்தங்களும், ஷெல் அடிகளும் நாளாந்தம் ஒலித்துக் கொண்டேயிருக்கின்றன. கொஞ்ச நாட்கள் எம்மோடு ஒட்டிக் கொண்டிருந்த நிம்மதி மீண்டும் எங்கோ மறைந்துவிட்டது. சிங்கள ராணுவம் முஸ்லீம்களையும் புலிகள் என்றே தற்போது கருதிக் கொள்கிறார்கள். காரணம் புரியவில்லை. இதற்கு உதாரணமாக அண்மையில் எனதூர் கல்முனையில் சுற்றி வளைப்பு என்ற அதன் வழமையான தோரணையில் தொப்பி அணிந்த வயது முதிர்ந்த மூன்று ஹாஜிமார்களை நடுவெயிலில் வைத்து அவர்களுக்கு அடித்துக் கண்மூடித் தனமாக நடத்தியுள்ளார்கள். இதை எல்லாத் தமிழ் பேசும் மக்களும் கண்டிக்க வேண்டும். சுவடுகளுக்கும் இதைத் தெரியப்படுத்த வேண்டும் என்ற நோக்கிலேயே இதை எழுதுகிறேன். முஸ்லிம்களின் உதவியுடனேயே கிழக்கில் சிங்கள ராணுவம் ஓரளவு கால் வைத்துள்ளது. இதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். மீண்டும் இப்படியான செயல் நடந்தால் கிழக்கையும் கைவிட வேண்டிய நிலை அரசுக்கு ஏற்படும். அடுத்து, சுவடுகளில் பிரசுரமான சோலைக்கிளியின் கவிதை வித்தியாசமாக அமைந்துள்ளது. சுவடுகளில் கவிதைகளை அதிகரியுங்கள்.

முகமட் அபார்,
இலங்கை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆசிரியர்,
சுவடுகள்

பெண்கள் சிறப்பிதழ் கிடைத்தது. கூடவே உங்கள் கடிதமும் கிடைத்தது. நிறைய அழுத்தங்களை எதிர்நோக்கி, வாசகர்களாகிய எங்களுக்குச் சுவடுகளை இலவசமாகக் கிடைக்கச் செய்யும் தங்களின் இலக்கிய சேவை வெறும் நன்றி என்ற ஒற்றைச் சொல்லினால் மட்டுப்படுத்த இயலாதது என்றே கருதுகிறேன். பெண்கள் சிறப்பிதழின் ஆக்கங்கள் ஒவ்வொன்றும் சத்தானதாய் அமையப் பெற்றதுதான் அதன் சிறப்பு. எனினும் மண்மனம் தொடர்கதைக்குச் சற்றுப் பக்கங்களை அதிகரிக்க முடியாதோ? மேலும் சுவடுகளை இதுவரை படித்தவரை ஏதோ ஒருவகையில் சிலர் இஸ்லாமியக் கொள்கைகள்மீது கரிபூசி கீறி வருவதை அவதானிக்கிறேன். சர்வதேச மட்டத்தில் இஸ்லாத்திற்கெதிரான மீடியாக்களின் பங்களிப்பு இன்று முக்கியம் பெறுகிறது. எடுத்தற்கெல்லாம் அடிப்படைவாதம், மதவாதம், மதவெறியர்கள் என்ற சொற்களைப் பயன்படுத்திப் பயமுறுத்துவதையும் காண முடிகிறது.

ஓர் இனம் பயங்கரவாதத்திற்கெதிராகப் போராடுகையில் அதற்குப் பயங்கரவாதச் சாயம் பூசுவதும், ஓர் இஸ்லாமியர் தான் சார்ந்த மத அனுஷடானங்களைப் பின்பற்றி ஒழுகும் பட்சத்தில் அவனுக்கு அடிப்படைவாதப் பெயரிடுவதும் அதனை நசுக்குகிறோம் என்ற ரீதியில் அட்டூழியங்களைக் கட்டவிழ்த்து விடுவதும் மேற்குலகுக்கு ஒன்றும் புதிதல்ல. காழ்ப்புணர்வைத் தூண்டித் தன் எரிச்சலைக் கொட்டித் தீர்க்க சுவடுகள் களமமைத்துக் கொடுக்காது என்று நம்புகிறேன். சென்ற இதழில் எட்வர்ட் சைத் எழுதிய பயங்கரவாதமும் அடிப்படைவாதமும் குறிப்பில் பத்வா என்பதற்கு இஸ்லாமிய இறையதிகாரம் என அடிக் குறிப்பிடப் பட்டுள்ளது. இறையதிகாரம் குர்ஆனில் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது. மனிதனால் இறையதிகாரத்தில் கையாடவோ அல்லது மேலதிகச் சிந்தனைகளைச் செருகவோ இயலாது. பத்வா என்பதற்கு இஸ்லாமிய மார்க்கத் தீர்ப்பு என்பதே பொருத்தமானது. இஸ்லாமிய ஷரிஆவைத் துறைபோகக் கற்ற அறிஞர்கள் கூடி ஒரு பிரச்சனைக்குக் குர்ஆனில் இருந்தும், நபி வழியில் இருந்தும் தீர்வினை வெளியிடுவதற்கே இச்சொல் பிரயோகிக்கப் படுவதுண்டு.

இஸ்லாமியக் கருத்துகளை மாற்று மத சகோதரர்கள் விமர்சிக்கும் போது, சில சொற்களுக்கு தான்தோன்றித் தனமாய் மொழிபெயர்ப்பதையும் அந்த மதத்தின் அனுஷடானச் சொற்களைச் சரிவரப் புரிந்துகொள்ளாததும் காரணம் ஆகும். இதனால்தான் சிலர் நெல்லால் எறிந்து கல்லால் அடிபட்டுக் கொள்கின்றனர். இவ்வாறான சமய மோசடிகளைத் தவிர்த்துக் கொள்வது எல்லோர்க்கும் பயன்தரும்.

அறபாத்,
வாளைச்சேனை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நீங்கள் 11ம் திகதி பு
# வாக்களிக்க விரும்பு

புரட்டாதி மாதம் 11ம் திகதி திங்கட்கிழமை நகராட்சிமன்ற மற்று

- வெளிநாட்டுப் பிரஜாவுரிமை உள்ளவர்கள் கூட வாக்களிக்கலாம். வாக்களிக்கலாம். வாக்களிப்பதற்கு கடந்த 3 வருடகாலம், ஆகட மாதத்திலிருந்து நீங்கள் ஆள்ப்பதிவுக் காரியாலயத்தில் (folkeregist 31.12.95 இற்குள் நீங்கள் 18 வயதை அடையவேண்டும்.
- நீங்கள் ஓர்நகரசபையிலிருந்து வேறொன்றிற்கு இடம்பெயர்ந்திருந் இடமாற்றத்தை ஆள்ப்பதிவுக்காரியாலயத்திற்கு அறிவிக்கவேண் வசிக்கும் நகரசபையில் வாக்களிக்கலாம்.
- நீங்கள் இடமாற்றத்தை அறிவிக்காவிடின் தேர்தல் தினத்திலன்று வாக்களித்தல்வேண்டும்.
- முன்கூட்டி வாக்களிப்பதை நீங்கள் விரும்பிய நகரசபையில் நிலை

தேர்தல் தினத்திலன்று வாக்களிப்பதற்கு வாய்ப்புக்கிடைக்காவிடின் நீங் முன்கூட்டியே வாக்களிக்கலாம். நீங்கள் எங்கு, எப்போது மற்றும் எவ் முன்கூட்டி வாக்களிப்பது எனபதை நகரசபைக்கட்டடத்தில் தெரிந்துகொ வாக்களிக்கும்பட்சம் எவ்வாறு செயற்படவேண்டும் என்பதுபற்றிய தக 15 மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளது. கீழுள்ள விண்ணப்பத்தை அ இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

**மேலதிக விபரங்களிற்கு நகரசபைநிர்வாகத்து**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ட்டாதி மாதம் ீர்களா?

ாகாண ஆட்சிமன்றத் தேர்தலாகும்.

ஆண்களும் பெண்களும்
ுதியது 9ம் திகதி புரட்டாதி
பதியப்பட்டிருத்தல் வேண்டும்.

ம் ஆனி மாதம் 1ம் திகதிக்குள்
இப்படியானால் நீங்கள் இப்போது

ங்களது முன்நாள் நகரசபையில்

வற்றிக்கொள்ளலாம்.

ர
று
லாம்.
பி

VALG '95 KOMMUNESTYRE- OG FYLKESTINGSVALG

ன் தொடர்புகொள்ளவும்!!!

TIL
UTLENDINGSDIREKTORATET
POSTBOKS 8108 DEP
0032 OSLO
FAKS 67 12 52 72

## JA, JEG BESTILLER VALGBROSJYREN TIL UDI!

Norsk-----------------eks.
Engelsk --------------eks.
Fransk----------------eks.
Spansk ---------------eks.
Urdu------------------eks.
Arabisk --------------eks.

Somali----------------eks.
Serbo-kroatisk--------eks.
Tamil ----------------eks.
Persisk---------------eks.
Punjabi --------------eks.
Finsk-----------------eks.

Polsk ----------------eks.
Vietnamesisk----------eks.
Tyrkisk --------------eks.

VALGPLAKAT -----EKS.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

● சஞ்சயன்

# வெட்ட வெளிச்சமாகும் நோர்வேயின் வெளிவேடம்

அண்மையில் நோர்வேயில் இடம் பெற்ற சம்பவம் இங்கு வாழும் வெளிநாட்டவர்களை மட்டுமல்ல இந்நாட்டு மக்களில் பலரையும் நிலை குலைய வைத்துள்ளது. அகதி அந்தஸ்துக் கோரிய பாகிஸ்த்தானைச் சேர்ந்த அப்ராப் ( Aftab ) என்பவரும், மரணத்தை எதிர் நோக்கியுள்ள அவரின் மூன்று பிள்ளைகள் உட்பட நான்கு பிள்ளைகளும், கடுமையான மன நோய்க்குள்ளாகி மனநல மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த அவரின் மனைவியும் பொலிசாரால் பலாத்காரமாகத் திருப்பி அனுப்பப்பட்டு உள்ளனர். மனித நேயமோ மனிதாபிமானமோ சிறிதுமற்ற இச்சம்பவம் தொடர்பு சாதனங்களினால் கடுமையான விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய சம்பவம் மனிதாபிமானம் மனிதவுரிமைகள் ஜனநாயகம் சமாதானம் என வேடமிட்டு வரும் நோர்வே அரசின் முகமூடியை அறிந்து கொள்வதற்கு ஒரு நல்ல உதாரணமாகும். உலகில் ஒற்றுமைக்காவும் சமாதானத்திற்காகவும் பாடுபடுவதாகக் கூறிக் கொள்ளும் நோர்வே வருடா வருடம் நோபல் சமாதானப் பரிசை வழங்கித் தனது போலி வேடத்தைத் தக்க வைத்துக் கொள்ளுகிறது. (நோபல் சமாதானப் பரிசு பெற்றவர்களின் பட்டியலை ஆராய்ந்தாலே அதிலுள்ள சுய அரசியல் இலாபங்களை விளங்கிக் கொள்ளலாம்.) வெளிநாட்டு அகதிகள் விடயத்தில் தன்னை ஒரு மிதவாதியாகக் காட்டி வரும் நோர்வே அரசு உண்மையில் வெளிநாட்டு அகதிகளுக்கு எதிரான ஒரு கொள்கையையே கடைப்பிடித்து வருகின்றது. தற்போது அப்ராப் குடும்பத்தினருக்கு நடைபெற்றுள்ள சம்பவம் இதற்கு நல்ல எடுத்துக்காட்டு.

அப்ராப் குடும்பம் வெளியேற்றப்பட்டதை விட வெளியேற்றிய விதமும் இவ்விடயத்தில் நீதி அமைச்சர் கிறேத்த பாறமூ ( Grete Faremo) கூறிய பொய்களும் பத்திரிகைகள் உட்பட ஏனைய தொடர்பு சாதனங்களினாலும் பாராளுமன்றத்திலுள்ள சகல எதிர்க் கட்சிகளாலும் (இனவாதக் கட்சியான முன்றேற்றக் கட்சி தவிர்ந்த) கடுமையான விமர்சனத்திற்குள்ளாகியுள்ளன.

அராப் குடும்பத்தினரின் இரு பிள்ளைகளும் கடுமையான நோய்க்குள்ளாகி மரணம் நிச்சயிக்கப்பட்ட நிலையிலுள்ள அங்கவீனமான பிள்ளைகளாவார். கடைசிப் பிள்ளையான நான்காவது குழந்தையிலும் இனி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நோய்க்கான அறிகுறி காணப் படுவதாக டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். முதல் இரண்டு பிள்ளைகளும் நான்கு சக்கர நாற்காலிகளிலேயே தமது வாழ்நாட்களைக் கழித்து வருகின்றனர். நடக்க முடியாத இவர்கள் மற்றவர்களின் உதவியின்றி செயல்பட முடியாதவர்கள். குடும்பத்தின் இந்தத் துக்ககரமான சம்பவங்களால் கடுமையான மனப்பாதிப்புக்கு உள்ளாகிய இவர்களின் தாயார் ஒருமுறை தற்கொலை முயற்சியில் ஈடுபட்டவர். மனநல மருத்துவமனையில் இருந்து வந்த இவர் வார விடுமுறைக்காகக் கணவர் பிள்ளைகளிடம் வந்த போதே பொலிசாரால் பலாத்காரமாக வெளியேற்றப்பட்டார். அங்கயீனமான இரு பிள்ளைகளையும் பொலிசார் பலாத்காரமாகத் தூக்கிக் கொண்டு வந்த காட்சியைக் கண்ட பலர் பொலிசாரின் அணுகு முறையையிட்டு நிலை குலைந்து போயினர். மனநல மருத்துவமனையின் பொறுப்பதிகாரி இது பற்றித் தொலைக்காட்சியில் கருத்துத் தெரிவிக்கையில் இப்படிப்பட்ட மோசமான ஒரு சம்பவத்தைத் தனது வைத்திய தொழிலில் தான் ஒரு போதும் அனுபவித்ததில்லை எனக் கூறியுள்ளார். வைத்திய பராமரிப்பில் இருக்கும் ஒருவர் மீது மேற்கொள்ழப்பட்ட இந்த நடவடிக்கையைத் தன்னால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை எனவும் கூறியுள்ளார். இக்குடும்பத்தினருக்காக வழக்காடிய வழக்கறிஞர் தொலைக்காட்சியில் கருத்துக் கூறுகையில், இச்சம்பவம் 1995ல் ஐரோப்பாவில் நடந்துள்ளது என்பதை நாம் கவனத்திற் கொள்ள வேண்டுமென்றதுடன் மனிதாபிமானம் என்ற சொல்லையே குழி தோண்டிப் புதைத்துள்ளது இச்சம்பவம் எனவும் கூறியுள்ளார்.

அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரை தீவிர இனவாதக் கட்சியான முன்னேற்றக் கட்சி (FrP) தவிர்ந்த ஏனைய கட்சிகள் யாவுமே இச் சம்பவத்தைக் கண்டித்துள்ளன. கிறிஸ்த்தவ மக்கள் கட்சியின் முன்னாள் தலைவரும் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவருமான ஷெல் மங்ன பொண்டவிக் (Kjell Mange Bondvik ) இச் சம்பவத்தையிட்டு அதிர்ச்சியும் கண்டனமும் தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக நீதியமைச்சுடன் தான் பலமுறை தொடர்பு கொண்டதாகக் கூறிய அவர் நீதியமைச்சின் இத்திடீர் முடிவு அகதிகள் விடயத்தில் நாம் மோசமான ஒரு கொள்கையையே பின்பற்றுகின்றோம் என்பதையே பலப்படுத்துவதாக கூறியுள்ள அவர் கோடைகால விடுமுறையைத் தொடர்ந்து இடம் பெறும் பாராளுமன்ற கூட்டத்தொடரில் இவ்விடையத்தையிட்டு கேள்வி எழுப்பியதாகக்கூறியுள்ளார். தீவிர வலதுசாரக் கட்சியான வலது (Høyre) கட்சியும் இச்சம்பவத்தைக் கண்டித்திருப்பது ஆளும் தொழிற் கட்சி எதிர்பாராதது.

இவ்விடயம் தொடர்பாக ஆரம்பத்தில் கருத்து தொவித்த நீதியமைச்சர் கிறேத்த பாறமூ தான் இதுபற்றிக் கருத்து எதுவும் கூறமுடியாது எனவும் ஏனெனில் அராப் குடும்பத்தினரின் அகதி விண்ணப்பம் பற்றித் தனக்கு எதுவும் தெரியாது எனவும் கூறியிருந்தார். இது பற்றிக் கருத்துத் தெரிவித்த சோசலிச இடதுசாரிக் கட்சியைச் (sv) சேர்ந்த Lisbeth Holand (லிஸ்பெத் ஹொலண்ட்) என்பவர் இது ஒரு அப்பட்டமான பொய் என்றும் உண்மையை மூடி மறைத்து நடந்த சம்பவத்தை நியாயப்படுத்தவே நீதியமைச்சு முயல்வதாகவும் கடுமையாகக் குற்றம் சாட்டியுள்ளார். இதே கருத்தையே நோர்வே வாழ் அகதிகளிற்கான அமைப்பான நோவாஸ் (NOAS) மற்றும் அகதிகள் கவுன்ஸில் (Flyktning råd ) ஆகியவற்றைச் சேர்ந்த முறையே பியாற்ற வாண்ட்விக் (Bjarte Vandvik) மற்றும் குன்னார் அன்டர்ஸன் ( Gunnar andersen ) ஆகியோரும் கூறியுள்ளனர். இவ்விடயம் தொடர்பாகப் பாராளுமன்றத்திலும் தனிப்பட்ட ரீதியிலும் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் பொது ஸ்தாபனங்கள் நீதியமைச்சுடன் தொடர்பு கொண்டிருந்த நிலையில் நீதியமைச்சு உண்மையை மூடி மறைத்திருப்பது பல பத்திரிகைகளின் கோபத்தைக் கிளறியுள்ளது. அல்பானிய அகதிகள் விடயத்தில் மூக்குடைபட்ட நீதியமைச்சை முன்பொரு முறை வன்மையாகக் கண்டித்திருந்த நோர்வேயின் பிரபல பத்திரிகைகளில் ஒன்றான டாக்பிளாத (Dagbladet) அண்மையில் இவ்விடயம் பற்றி எழுதுகையில் நீதியமைச்சு தனக்கு வரும் கடிதங்களைப் படிப்பதில்லையோ எனக் கேள்வி எழுப்பியுள்ளது. இவ்விடயம் பற்றி நிருபர் நீதியமைச்சுடன் தொடர்பு கொள்ள இரவு பகலாக முயன்ற போதும் நீதியமைச்சு மறுத்தே வந்தது எனவும் ஆனால் தனது கட்சிப் பத்திரிகையான அர்பைதபிளாத (Arbeiderblad) பத்திரிகைக்கு மட்டும் இரகசியமாகப் பேட்டி வழங்கியுள்ளதாகவும் கூறிக் கடுமையாகக் கண்டித்துள்ளது. இதே செய்தியில் நீதியமைச்சிடம் பத்துக் கேள்விகள் எனக் கூறிப் பின்வரும் கேள்விகளையும் டாக்பிளாத எழுப்பியுள்ளது. இக் கேள்விகள் அகதிகள் விடயத்தில் நோர்வேயின் இரட்டை வேடத்தைப் புலப்படுத்துகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கேள்விகளின் சுருக்கம் வருமாறு:

1. நீதியமைச்சின் விசாரணையில் இருக்கும் ஒரு விடயத்தில் பொலிசார் அத்து மீறி நடந்து கொண்டதை நீதியமைச்சு ஆதரிக்கிறதா?

2. எத்தகைய சமுதாய விளைவுகளிற்காக அப்ராப் விடயத்தில் கடுமையாக நடந்து கொண்டனர்?

3. சாதாரண மக்கள் மீது இவ்வளவு மோசமாக நடந்து கொள்வதை நீதியமைச்சு எற்றுக் கொள்ளுகிறதா?

4. அராப் குடும்பத்தினர் பாகிஸ்தானில் பாதுகாப்பாக இருக்க நீதியமைச்சு என்ன செய்துள்ளது?

5. மனித நேயம் என்பதற்கான நீதியமைச்சின் வரைவிலக்கணம் யாது?

6. அங்கவீனர்களிற்கான பராமரிப்பு நோர்வேயுடன் ஒப்பிடும் போது பாகிஸ்தானில் திருப்திகரமாக உள்ளதா?



7. அகதிகள் விடயத்தில நோர்வே 1980களில் இருந்ததைப் போன்றே தற்போதும் நெகிழ்ச்சிப் போக்கைக் கடைப்பிடிப்பதாக நீதியமைச்சுக் கூறியுள்ளது. அப்படியானால் 1988இல் அகதிகள் விண்ணப்பத்தில் 78% ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் 1993இல் 10% மட்டுமே ஏற்றுக் கொள்ழப்பட்டது ஏன்? (1994 இல் 30% என்றாலும் இதில் ஏனைய ஐரோப்பிய நாடுகளுடன் சேர்ந்து பொஸ்னிய அகதிகளைக் கட்டாயமாக நோர்வே பொறுப்பேற்க வேண்டியிருந்தமை எண்ணிக்கை அதிகரிக்கக் காரணம்)

8. பத்திரிகை நிருபர்களைச் சந்திக் நீதியமைச்சிற்குப் பயமாக உள்ளதா?

9. எந்த அடிப்படையில்/தகுதியில் தொழிற் கட்சி (AP) இனவாத/நிறவாதக் கட்சியான முன்னேற்றக் கட்சியை (Frp) அகதிகள்/ வெளிநாட்டவர் விடயத்தில் கண்டிக்கத் தகுதி பெற்றுள்ளது?

10. இவ்விடயம் தொடர்பாக எப்போது எங்களோடு கதைக்கவுள்ளாய்?

பத்திரிகைகள் மட்டுமன்றி தொலைக்காட்சிச் சேவைகளும் நீதியமைச்சு அதிகாரிகளை ஒரு பிடிபிடித்தன. செய்தியாளரின் கேள்வி ஒன்றிற்குப் பதிலளித்த நீதியமைச்சு அதிகாரி ஒய்ஸ்ரெய்ன் மாலாண்ட் (Øystein M'land) நீதிமன்றமே இவர்களின் வழக்கை நிராகரித்ததாகக் கூறினார். உடனடியாகச் செய்தியாளர் தீர்ப்பின் சில பகுதிகளை வாசித்துக் காட்டிய போது அதிகாரி திக்குமுக்காடிப்போனார். அதே போல் பல பொய்யான தகவல்களை வழங்குவதிலும் ஒய்ஸ்ரய்ன் வல்லவராகவே உள்ளார். தொலைக்காட்சிச் செய்தியாளரின் கேள்விக்குப் பதிலளித்த ஒய்ஸ்ரய்ன் இவ்வாறான அங்கயீனமான குழந்தைகள் பாகிஸ்தானில் பத்து லட்சத்துக்கு மேல் இருப்பதாகக் கூறினார். இத்தகவலை நீங்கள் எங்கே பெற்றீர்கள் என்று கேட்ட போது பாக்கிஸ்தானிலேயே இத் தகவல்களைத் திரட்டியதாகக் கூறினார். எனினும் மறுநாள் தான் கூறியது தவறான புள்ளிவிபரம் எனப் பத்திரிகைகள் வாயிலாக ஒத்துக் கொண்டார்.

ஆளும் தொழிற் கட்சியின் இவ் அணுகுமுறை பலராலும் கடுமையாகக் கண்டிக்கப் பட்டுள்ளது. ஆளும் கட்சியின் இளைஞர் அமைப்பு ஊற்ஒய்யா (Utoya) என்ற இடத்தில் நடாத்திய கருத்தரங்கில் கட்சியின் தலைவர் தூர்பியோன் யாக்லாண்ட் (Thorbjøm Jageland) கடுமையான கண்டனத்திற்குள்ளானார். நிர்வாக விடயங்களில் தலையிட விருப்பம் இல்லையெனச் சாதுார்யமாகப் பதிலளித்த கட்சித் தலைவர், நோர்வேயின் பல கலாச்சார (பல்லின நாடு) கொள்கைக்குத் தான் சார்பானவர் என்றும் இதைக் கட்டியெழுப்ப நாம் பாடுபட வேண்டுமெனவும் கூறியுள்ளார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

• மாலா

# வெளிநாட்டவனே வெளியேறு!




நோர்வேயில் முன்னெப்போதும் இல்லாத அளவு வெளிநாட்டவருக்கு எதிரான உணர்வு அதிகரித்து வருகிறது. ஏனைய நாடுகள் சிலவற்றுடன் ஒப்பிடுகையில் இது மிகவும் குறைவுதான். ஆனால் அது கணிசமான அளவு என்பது குறிப்பிடத் தக்கது. வெளிநாட்டவருக்கு எதிரான கருத்துகளைப் பரப்புதிலும் வெளிநாட்டவரை வெளியேற்றும் நடவடிக்கைகளிலும் பல கட்சிகளும் இரகசிய அமைப்புகளும் இயங்கி வருகின்றன.

முற்றுமுழுதான வெளிநாட்டவருக்கு எதிரான கொள்கையை முன்னிறுத்தி வெளிப்படையாக வேலை செய்யும் கட்சிகள்:

1. தந்தையர் தேசக் கட்சி (*Fedrelands partitml*)

2. நோர்வே தேசபக்த முன்னணி (*Norges Patrotisk Enhetsparti*)

தேசிய ஜனநாயகவாதிகள் (*Nasjonal Demokratene*)

4. வெளிநாட்டவரை நிறுத்து கட்சி (*Stopp innvandring*)

**இரகசியமாக வேலை செய்யும் கட்சிகள், அமைப்புகள்:**

1. வெளிநாட்டவருக்கு எதிரான நோர்வே (Norge mot innvandring)

1991ல் இதன் வருடாந்தக் கூட்டத்துடன் ஆரம்பிக்கப் பட்டது. தலைவர் ஆண மிர்டால் (*Arne Myrdal*). கடும் வலதுசாரிப் போக்குடைய இவரது பிரச்சாரங்கள் பல உண்மைக்குப் புறம்பானவை. முன்பு வேறொரு அமைப்பிற்குத் (*Brumundal Slaget*) தலைமை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாங்கியவர்.

2.வெளிநாட்டாருக்கு எதிரான மக்கள் இயக்கம். (Folkebevegelsen mot innvandring/ FMI/)

1987ல் ஹௌகசுண்ட் எனும் இடத்தில் முதலாவது வருடாந்தக் கூட்டத்தை நடாத்தியது. 1988ல் ஆண மிர்டால் இந்த அமைப்பில் இருந்து நீக்கப்பட்டார். இதன் பின்னர் மீண்டும் இந்த அமைப்பு நிமிர்ந்து நிற்கக் கடுமையாக உழைத்து வருவதுடன் தந்தையர் கட்சி, வெளிநாட்டவரை நிறுத்து கட்சிகளுடன் இணைந்து தேர்தலில் நிற்பதுண்டு.

3. நோர்வேஜிய முன்னணி ( Den Norsk4e Forening )

முன்பு எப்எம்ஐயின் நிர்வாக உறுப்பினராயிருந்த தோர்பின் ஹயான்ஸ்விக் இதன் தலைவர். இதன் அடிப்படைக் கொள்கையானது நோர்வே மக்களின் நலன்களை முன்னெடுப்பதாகக் கூறப்படுகிறது. வெளிநாட்டவரது அரசியல், பாடசாலை, குற்றச்செயல்கள், மக்கள் தொகை என்பன இதன் பிரச்சாரத்தில் முக்கிய இடம்பெறுகின்றன.

4. பகுதி 88 (Zone88)

இந்த அமைப்பின் கருத்தானது 'ஹெய்ல் ஹிட்லர் என்பதன் சங்கேத பாஷைதான். அதாவது ஆங்கில எழுத்தான எச், எழுத்துகளில் எட்டாவது இடத்தில் வருகிறது. ஆகவே 88 என்பது எச்எச் என வரும் (Heil Hitler). ராணுவ மயப்படுத்தப்பட்ட ஆண்களைச் சிந்தனையியலில் ஈடுபடுத்தும் இந்த அமைப்பின் தலைவர் எறிக் றூண ஹன்சன் ( Erik Rune Hansen ). இநத் அமைப்பில் பழைய என்எஸ் உறுப்பினர்களும் உள்ளனர்.

அடுத்த கட்டமாக இளைஞர் அணிகள் பல இயங்குகின்றன. இந்த அணிகளைப் பல அமைப்புகள் பின்னணியில் இயக்குவதாகக் கூறப்படுகிறது. வெளிநாட்டவர்கள் உடல் ரீதியாகத் தாக்கப்பட இந்த இளைஞர் அணிகளே பெரும்பாலும் காரணமாக உள்ளதாக நம்பப்படுகிறது.

இளைஞர் முன்னணியாக (Ung Front) இணைந்துள்ள இவ்வமைப்பில் மூன்று முக்கிய அணிகள் உள்ளன.

1. நோர்வேஜிய இளைஞர் ( Norsk Ungdom )

இதன் தபாற்பெட்டி இலக்கம் நூர்ஷிஷா ( Nordkisa ) என்றுள்ளது. இது ஒரு குடையமைப்பு ஆகும். தலைவரற்ற மென்மையான அமைப்பாக உள்ள இதனைத் தொடக்கியவர் மெக்கல் க்னுட்சன் ( Michael Knutsen ) என நம்பப்படுகிறது.

2. தந்தையர் தேசக் கட்சியின் இளைஞர் அணி (Federalands partiets ungdom ).

இது கட்சி ஆரம்பிக்கப்பட்ட போதே ஆரம்பிக்கப்பட்டது.

3. தேசிய மாணவர் ஒன்றியம் ( Nasjonal student union - Blinder )

கடந்த இலையுதிர்காலத்தில் ஒஸ்லோ பல்கலைக்கழக வட்டாரத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதனை 21வயது உடைய ஒருவரே ஆரம்பித்ததாகக் கூறப்படுகிறது. இவரே 'வீகிங் மைப்பையும் நிறுவியதில் பங்கெடுத்தாகக் கூறப்படுகிறது.

இம் மூன்று இளைஞர் அணிகளின் கீழ் சிறு குழுக்களாகப் பல குழுக்கள் இயங்குகின்றன.

அ) தேசபக்த இளைஞர் ( Patritisk Ungdom )

ஆது ஆறெண்டால் என்ற இடத்தில் 1989ல் உருவானது. வெளிப்பாட்டுக்கு வன்முறை அற்ற அமைப்பிது. ஆயினும் ஆண மிர்டாலின் நம்பிக்கைக்கு உரிய, செயற்பாடு குறைவான அமைப்பு இது.

ஆ) பூட் போய்ஸ் ( Boot Boys )

மிக மும்முரமாகச் செயற்படும் வழுக்கைத் தலையர்கள். இவர்களே மிக மோசமாக வன்முறையில் ஈடுபடுவதாகக் கூறப்படுகிறது. இதன் தலைவர் ஊலா க்றோக்ஸ்ராட்

இ) ஆரிய சகோதரர்கள் ( Ariske Brodre )

இதன் செயற்பாடு தொன்ஸ்பெர்க் பகுதியில் உள்ளது. மிக நம்பிக்கைக்கு உரியவர்களை மட்டும் வகுப்புகள் வைத்துத் திரட்டும் இவ்வமைப்பு 'நிறவாத எதிர்ப்பாளர்கள் நடத்தும் ஊர்வலங்களைக் குழப்புவது, கலகம் விளைவிப்பது போன்வற்றில் ஈடுபடுகிறது.

ஈ) வீக்கிங்

இதன் செயற்பாடு ஒஸ்லோ நகரப் பகுதிகளில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




உள்ளது. இதுவும் அபாயகரமான அமைப்பு வானொலி மூலம் தொடர்பு ஏற்படுத்தி ஆள் திரட்டல் நிகழ்கிறது. போதைப்பொருள் பாவனையை வெளிப்படையாக எதிர்க்கும் இவ் அமைப்பு பல பகுதிகளில் ஆட்களைத் திரட்டுவதில் ஈடுபடுகிறது.

உ) வார்க் ( Varg )

கடந்த வருடம் உருவாக்கப்பட்ட இது நோர்வே சுவீடன் எல்லையோரங்களில் இயங்குகிறது. பிரதானமாக மொட்டந்தலையர்களே அங்கம் வகிக்கின்றனர்.

ஊ) அலாபா ( Alafa )

பாசிச எதிர்ப்பாளர்களைத் தாக்கும் இது வெள்ளை ஆரியர்களே உயர்வானவர்கள் எனும் கருத்தைக் கொண்டது. ஐரோப்பா முழுவதும் செயற்பாடுகளையும், தொடர்புகளையும் கொண்டது. நிறவாத எதிர்ப்பாளர்களைக் கண்காணிப்பதில், தாக்குவதில் ஈடுபடுகிறது.

எ) யேர்வ் ( Djerv )

இதன் செயற்பாடு தூரண்ணியம் பகுதிகளில் உள்ளது. நோர்வேஜிய மண்ணின் மைந்தர்கள் கொள்கையை முன்வைக்கிறது. சிறுபான்மையினர் இந்த மண்ணில் இருக்கவே கூடாது என்ன கொள்கையை உரக்கக் கூவுகிறது. இவர்களும் தமக்கு எதிரானவர்களைப் பற்றிய பட்டியல் தயாரிப்பவர்கள்.

நிறவாதக் கொள்கைகளைப் பரப்புவதில் பல சஞ்சிகைகளும் துண்டுப் பிரசுரங்களும்முக்கிய பங்கு வகிக்கின்றன.

றாக்னாறொக் Ragnarock )

இதில் முக்கியமானது. பூட்ஸ் போய்ஸினால் வெளியிடப்பட்ட போதிலும் வார்க், வீகிங் அமைப்பினரும் இணைந்து செயற்படுகின்றனர். இன்னொரு முக்கிய சஞ்சிகை 'யல்லர்ஹோர்ண் (Gjallarhorn ). இது பகுதி88ஆல் வெளியிடப்படுகிறது. இனத்தூய்மை பற்றி இது முக்கியமாகப் பேசுகிறது.

## நிறவாதப் பெண்கள் அமைப்பு

நிறவாத செயற்பாடுகளில் பொதுவாகப் பெண்கள் பங்கெடுப்பதில்லை. தமது காதலர் அல்லது கணவர் இத்தகைய அமைப்புகளிலோ ஈடுபாடு உடையவர்கள் என அறிந்தால் பெண்கள் அவர்களிடம் இருந்து விலகிவிடுவர்.

இதேவேளை முதல் பெண் நிறவாத அமைப்பாக 'வால்கிரி பெண்கள் அமைப்பு திகழ்கிறது. இதன் தலைவியாக ஊலா க்றூக்ஸ்ராட்டின் காதலி இருக்கிறார். இதற்கு அடுத்த தலைவியாக 'ப்ளிட்ஸின் (நிறவாதத்திற்கு எதிரான அமைப்பு ஒன்று) உளவாளி ஒருவரே உள்ளதாகக் கூறப்படுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


-Rafik Shami
தமிழில் ந.சுசீந்திரன்

# உப்பு எப்படிக் கடலுக்கு வந்தது

ஓங்கி வளர்ந்த புற்களின் மீது கண்களை மூடி. இந்தப் பூண்டுகளினதும், காட்டுப் பூக்களினதும் நறு மணத்தைச் சுவைத்தபடி எனை மறந்து ஏகாந்தமாய் நான் கிடந்தேன். வண்டுகளின் மூசலிலும் வனாந்தரப் பட்சிகளின் இனிய கான மீட்டலிலும் நிரம்பிக் கிடந்தது என்னைச் சூழ நின்ற வசந்த காலத் தென்றல். கார்களும், பிளேன்களும் உறுமும் ஆக்கிரமிப்புச் சத்தமெதுவும் என் ஏகாந்தத்தைப் பறிக்கப் போவதில்லை. திடீரென அந்த மயான அமைதி. பட்சிகளும் தும்பிகளும் தம் வாய் பொத்திவிட்டன.

இந்தச் சூழலுக்கு எதுவிதத்திலும் ஒவ்வாத இத்திடீர் அமைதி மெல்லவே என் அறிவுக்கு எட்டியதும் நான் அதிர்ந்துவிட்டேன். துள்ளி எழுந்து சுற்று முற்றும் பார்த்தேன். சற்று நேரத்திற்கு முன்னர் மேகங்கள் ஓடி ஒளிந்து விட்ட தெளிந்த வானத்தில் தாம் விரும்பியவாறு வட்டமிட்ட பறவைகளும் மறைந்து போய்விட்டன. இன்னும் பள்ளத்தே கொஞ்சம் தள்ளி அந்த பக்கர்ஏரியுங் கூட உறைந்து கண்ணாடியாகி விட்டதுபோல் வானத்தின் நெடுநீல அமைதியை மட்டுமே பிரதிபலித்தபடி சலனமின்றிக் கிடந்தது.
குன்றில், அந்த மேட்டில் வளர்ந்த புற்களின் மீதல்லவா நான் படுத்திருந்தேன்! எப்படி இந்த வெட்டுண்ட பூமியின் விளிம்புக்கு வந்தேன். இவ்விளிம்பின் ஓரத்தில் இருந்து பாதாளத்தில் விழுந்து விடாமல் இருப்பதற்காகச் சற்றுப் பின்னால் நகர்ந்தேன். சில காலடி ஓசைகள். எங்கோ அவசரமாய் விரைந்து கொண்டிருக்கும் அணிவகுப்பின் காலோசைகள் அவை. இந்தச் சத்தம் இன்னும் இன்னும் என்னை நெருங்கி வந்து கொண்டிருந்தது. நம் உள்ளங்கை அளவுகூட இல்லாத வெள்ளை வெளேரென்ற சின்னச் சின்ன மனிதர்கள். அடர்ந்த புற் பற்றைகளுக் கூடாகவெல்லாம் விழுந்தெழும்பி, தலை தெறிக்க இப் புதிய பாதாளத்தை நோக்கியே ஓடிக்கொண்டிருக்கிறார்கள். என்னை அவர்கள்







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கவனித்ததாய்த் தெரியவில்லை. ஆயிரக்கணக்கில் இந்த விசித்திர மனிதர்கள் கற்றைப் புல்லுக்குள் இருந்து பாய்ந்து மேலெழுந்து பெரிய வில் வளைவில் கடலிற் போய் குதித்தார்கள். இவர்களில் ஒருவன் தவறி என் கால்களின் முன்னால் விழுந்தான். அவனால் மீண்டும் எழுந்திருக்க முடியவில்லை. இவனை மிதித்தவாறே ஏனையவர்கள பயத்தில் ஓடிக்கொண்டிருந்தார்கள். அவனுக்கு மீண்டும் எழுந்திருக்கத் திராணி வரப்போவதில்லை.

மிதிபடுவதில் இருந்து அவனை என் கைகளில் எடுத்துக் காப்பாற்றினேன்.

„ என் கால் ஒன்று முறிந்து விட்டது, உன்னால் உதவி செய்ய முடியுமா „ தெளிவான சொற்களில் என்னிடம் கேட்டது இச் சிறிய ஜீவன். அதன் கண்ணாடி ஊனம் சற்று நீலமாய் ஒளிர்ந்தது.

„ யார் நீ ?, நான் எப்படி உனக்கு உதவலாம்?" என்னையறியாமலே கேட்டுவிட்டேன்.
சுற்று முற்றும் பயத்துடன் பார்த்தபடியே

„நான் நிலத்தின் உப்பு„என்றான் அந்த மனிதன்.

„தயவு செய்து அந்தக் கோடுங்கோலர் வருமுன்னே என்னைத் தண்ணீரில் கொண்டு போய்ச் சேர்த்துவிடு„ என்றான்.
நான் கவனமாக எழுந்து சற்றுச் செங்குத்தாகக் கீழிறங்கும் ஒற்றையடிப் பாதையில் பக்கர்ஏரியை நோக்கி நடந்தேன். போகிற வழியில் நம்பமுடியாத தன் கதையைச் சொல்லிச் சென்றான் அந்த மனிதன்.

முன்னொரு காலத்தில் இந்த உலகின் எல்லா நிலத்திலும் எங்கள் இனம் தூவப்பட்டிருந்தது. எல்லைகளையும் முள்வேலிகளையும் நாங்கள் அப்போது அறிந்திருக்கவில்லை. „உப்பு எனும் இருப்பு„ மட்டும் எங்கள் அனைவரையும் ஒன்றெனக் கூட்டி இணைத்திருந்தது. கதிரவன் மேற் எங்களுக்கு ஆசையிருந்தது. ஆனாலும் ஆசை என்பதால் அவனை நாங்கள் எமக்குள் சிறைப்பிடித்துச் சேமித்து வைக்கவில்லை. எங்களினூடாகச் சூரியன் எப்போது வேண்டுமானாலும் போகலாம். எங்களை அவன் சூடாக்கினான். நாங்கள் அவனுக்கு வர்ணங்களைக் கொடுத்தோம். உலகெங்கும் பரந்து திரிந்தமையால், எல்லா உப்பு மனிதர்களும் ஒன்றே என்பதை இலகுவில் கற்றுக் கொண்டோம். இது இப்போது செல்லுபடியாகாதாம். ஒரு கொடுங்கோல் அரசன் பல காலம் எங்கள் நாட்டை ஆண்டான். அவன் கதிரவனை அறவே வெறுத்தான். சூரிய ஒளிக் கதிர்களை அவனாற் சகிக்க முடியவில்லை. சில கால முன்பு இவ்வரசன் தன் கொள்ளைப் படைகளை உலகெங்கும் அனுப்பி மண்ணில் தெரிகிற உப்புகளையெல்லாம் அணிதிரட்ட வேண்டும், பாதாளக் கிடங்கில் அனைத்து உப்புக்களையும் அடைத்து விட வேண்டும், இருளிலேயே உப்புக்கள் வாழவேண்டும் என்று அவர்களுக்குக் கட்டளையிட்டான். கட்டளைப்படியே கொள்ளையர்களும் சிரமேற்கொண்டு இவற்றை அமுலாக்கினர். இரவும் பகலும் என்ன செய்வதென்று யோசித்தோம். சிலர் செய்வதெதுவும் அறியாமல் அரசன் இறக்கும் வரையும் நாம் இதற்குள்ளேயே இருந்து விடுவோம் என்றனர். மற்றும் சிலர் உப்புரசன் ஒருபோதும் இறக்கமாட்டான் என்றும் சொன்னார்கள். இன்னொருவன் எல்லாவற்றையும் அடித்து உடைத்து நாட்டில் எங்காவது தலைமறைவாகி விடுவதாக யோசனை கூறினான். ஒரு உப்புப் பெண் ஒருநாள் கோபத்தில் கத்தினாள்.

„உப்பில்லாத எமது பூமி என்ன பூமி. அது உப்பில்லாத குப்பைப் பண்டமல்லவா, இங்கே ஒரு இடத்தில் குவிந்து கிடக்காமல் நாம் எல்லா இடத்திலும் பரந்து வாழ வேண்டும்." என்றாள் அந்தப் புத்திசாலிப்பெண். அவள் முதியவள். மிகவும் களைத்து திராணி இழந்தவளாக இருந்தாள். திடீரென வியர்வையில் அவளது வடிவம் கரையவே அவள் முகமிழந்து போவதை உணர்ந்தாள். உற்சாகமாக அவள் எழுப்பிய சுலோகத்தில் நாங்கள் சிறைக் கிடங்கின் வாயிலை நிறைத்தோம். காவலரை ஏறிமிதித்து விட்டு கடலைத்தேடி ஓடினோம்.
கீழே பக்கர்ஏரிக்கருகில் நான் அந்த உப்பு மனிதனிடமிருந்து விடைபெற்று அவனைக் ஏரி நீரில் கலக்கவிட்டேன்.

மிகப் பெரிய உபகாரம், நண்பரே என்ற, அந்த ஏரியின் நீரில் கரைந்து கொண்டிருக்கும் உப்பு மனிதனின் வார்த்தைகள் என் செவிகளில் ஒலித்தது. ஏரிக்கரையோரம் குந்தியிருந்து ஆயிரம் ஆயிரம் உப்பு மனிதர்கள் ஏரியில் ஆவலுடன் குதிப்பதைப் பார்த்துக் கொண்டேயிருந்தேன். கரையிடை மோதும் அலைகள் நுரைத்துச் சிதறின. இந்தச்சின்ன சின்ன மனிதர்கள் தண்ணீரைக் கண்ட மாத்திரத்தில் கரைந்து தண்ணீராகவே மறைந்து போயின. நீரில் கலக்கும் இறுதிமனிதன் ஏரிக்கு வந்துசேர சற்றுக் காலம் எடுத்தது. நீர் மீண்டும் அமைதியடைந்து. வானத்திற் பறக்கும் கடற்புறாக்களின் நிழல்கள் அதன் நீரிற் தெறித்தன.
திடீரென ஒரு முரட்டுக்கரம் என் கழுத்துச் சட்டையிற் பிடித்து உலுக்கியது. உப்புக்கள் எங்கே? அந்த அதிகாரி என்னைப் பார்த்து பயங்கரமாக உறுமினான். எனக்குப் பின்னால் நின்றவாறு தன் சப்பாத்துக் காலால் என்னை மிதித்தான். நான் நிலத்தில் சரிந்தேன். தண்ணீரின் உப்பு என் வாயில் கரித்தது. நிமிர்வதற்காக மறுபக்கம் திரும்பினேன்.

„எங்கே அந்த உப்புக்கள்" திரும்பவும் கோபத்துடன் கேட்டான். தன் கைப் பொல்லினால் என் விலாவில் வலிக்குமாறு இடித்தான். அவனுடைய கறுப்புக் கண்ணாடியில் அவனைப் பார்க்கின்ற போது அன்றைய சிலி நாட்டுச் சர்வாதிகாரி பினோசெட் போலத் தோற்றமளித்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

 சிரியா நாட்டின் டமஸ்கஸ் நகரில் 1946 இல் பிறந்த றாபிக் சாமி 1971 இல் இருந்து ஜெர்மனியில் வசித்து வருகிறார். ஒரு இரசாயனவியல் பட்டதாரி. 1982 இல் இருந்து ஜெர்மன் மொழியில் எழுதிவரும் இவரது படைப்புக்கள் பல பரிசுகளையும் பெற்றிருக்கின்றன. இக் கதை „ *Der fliegende Baum* " (MalikVerlag 1991) எனும் நூலில் இருந்து தமிழாக்கப்பட்டது.

தண்ணீரிலிருந்து „பண்டிநாயே" என்று ஒரு குரல் ஜெர்மன் மொழியில் ஒலித்தது. பின்னர் ஸ்பானிய மொழியில், இத்தாலிய மொழியில், துரக்கியில், கிரேக்க மொழியில், மற்றும் எனக்கு விளங்காத இன்னும் வெவ்வேறு மொழிகளிலெலலாம் ஒலித்தது. எதிரே நின்ற அதிகாரியின் முகம் சிவந்து இறுகியது. அவன் முகத்தில் வெடிக்கும் மாற்றத்தில் இருந்து இந்தப் பன்மொழி வார்த்தைகள் மிகமிகச் சூடானவையென்பது தெரிகிறது. அவனது உதடுகள் கோபத்தில் துடித்தன. தண்ணீரிலிருந்து ஒரு கனத்த அரபுக்குரல் ஜெர்மன் மொழியில் பேசியது:

„இதோ நாங்கள் இங்கிருக்கிறோம். நீ அறுபது சூத்திரதாரிகளின் புடம்போட்டெடுத்த பேரனல்லவா! உன்னுடை முப்பாட்டன் போலக் கொடுங்கோலன் உண்டா! „

இதனைக் கேட்டதும் எனக்குச் சிரிப்பு வந்தது. அராபியர்கள் நாங்கள் பல அடுக்கு மொழிகளிலேயே கெட்ட வார்த்தைகளைப் (தூஷணங்களை) பேசிப்பழக்கம். அவற்றின் நிழல்களில் நின்று யோசிக்கின்ற போது, ஜெர்மன் மொழியின் ஒருவார்த்தைத் தூஷணம் மதிப்புடன் கூடிய தாழ்மையான வார்தையாக வெளிப்பட்டதை நினைக்கத்தான் எனக்குச் சிரிப்பு வந்தது.

தண்ணீர் பொங்கி எழுந்தது. நான் நிமிர்ந்தெழுந்து பார்த்தபோது இதுவரை குளமாகக் கிடந்த இந்தத் தண்ணீர் இப்போது அலைகள் பொங்கிக் கிளம்பும் சமுத்திரமாகவல்லவா மாறிவிட்டிருந்தது.

நான் மறுபக்கம் திரும்பிய போது வரிசையில் நின்று பல இராணுவ அதிகாரிகள் தம் சோர்ந்த முகத்துடன் நுரைத்து அலைபுரளும் தண்ணீரைப் பார்த்தபடி நின்றதைத் கண்டபோது மீண்டும் எனக்குச் சிரிப்புத்தான் தோன்றியது. சிலர் கைகளால் தங்கள் முகத்தில் அடித்துக்கொண்டார்கள். அவர்களது கறுப்புக் கண்ணாடிகள் ஒரு காதில் தொங்கியபடி ஊஞ்சலாடின.

„இப்போதென்ன செய்வது! இப்போதென்ன செய்வது" என்று தங்களையே கேட்டபடி உளறினார்கள்.

„நீங்கள் கடலை உறிஞ்சித் தரைமட்டமாக்குங்கள்" என்று அலைகள் மூலம் சீறின உப்புக்கள்.

கார் ஒன்று பாய்ந்து எங்களை நோக்கி வந்தது. இராணுவ அதிகாரிகள் பேந்தப் பேந்த விழித்தனர். „என்னத்தைச் சொல்வது என்னென்று சொல்வது" என்று ஒன்றாய் எல்லோரும் வீணைவாசித்தனர். கார் அண்மையில் வந்ததும் காரின் வெளிப்புறத்து விளம்பரங்களைப் பார்த்து வியப்படைந்தேன். அவை குடிவகைகளுக்கும் சவர்க்காரங்களுக்குமானவை. கார் முழுவதும் ஒட்டப்பட்டிருந்தது.

காரில் இருந்து அரசன் இறங்கினான். ஒரு முதிய மனிதன், ஒரு பெரிய கறுப்புக் கண்ணாடி முகத்தில் இருந்தது. நேரே உலோகத்தில் செய்து நிறுத்திய இராணுவம் போல் அணியாய் நின்ற இராணுவ அதிகாரிகளிடம் போனான். ஒவ்வொருவருக்கும் பின்புறத்தில் பலமாமகக் காலால் உதைத்தான். அவர்கள் தோளில் துலங்கிய நட்சத்திரங்களில் பலதைப் பிடுங்கினான். இந்த அதிஷ்டமிழந்த அதிகாரிகள் ஒவ்வொருவராக முழந்தாழிட்டனர். அழுது கெஞ்சிக் கிரவினர்.

அவன் கொடுத்த உதைகள் ஒன்றுமே இலக்குத் தவறாது குறிவைத்தவாறு குறித்த இடத்தில் பட்டதைப் பார்க்கும் போது அரசன் நன்றாகவே உதைப்பதற்குப் பயின்றிருக்கிறான் என்பது எனக்கு விளங்கியது.

„சேர், இதற்கு நான் பாத்திரவாளி இல்லை, சேர் இது என் தவறல்ல, என் தவறில்லை" என்று முழங்காலில் இருந்தவாறு புலம்பினார்கள் அந்த இராணுவ அதிகாரிகள்.

மெதுவாக இங்கிருந்து நான் அகன்றுவிட முயன்றேன். ஒரு பத்துச் சுவடுகள் தாண்டியிருக்க மாட்டேன் பலத்த குரலொன்று ஒலித்தது.

„கடுங்கள்! கடுங்கள்!, இவனை உயிரோடுவிட்டால் இராணுவத்தை, அதன் அதிகாரிகளை மண்ணின் உப்புக்கள் நகைப்புக்கிடமாக்கியதை வெளியே சொல்லிப்போடுவான்."

பயத்தில் நடுங்கித் தலைதெறிக்க என்னால் முடிந்தவேகத்தில் ஓடினேன். திடீரென வெடிச்சத்தம் கேட்டது. கால்தடக்கிக் கீழே ஓர் குழியில் விழுந்தேன். கைகளை மேலே உயர்த்தி மோதுமிடங்களில் எங்காவது பிடித்து விடலாமா என்று பார்த்தேன், முடியவில்லை. ஆழத்தில் தரையற்ற பாதாளத்தில் நான் விழுந்து கொண்டிருக்கிறேன்.

இது ஒரு கனவா? நான் கடலில் நீந்தும் ஒவ்வொரு தடவையும் கனவிற்கும் [illegible]விற்குமான எல்லையில் எனக்குச் சந்தேகமே வலுக்கிறது.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

-செல்வன்.போஹான்.சண்முகரட்ணம்.-
தமிழில்- வித்யன்.

# எப்படி நிறவாதத்திற்கு எதிராகப் போராடுவது?

*சென்ற முறை நான் எழுதிய கட்டுரையான இளைஞர்களும் நிறவாதமும் வன்முறையும் எனும் கட்டுரையைத் தொடர்ந்து என்னிடம் பல கேள்விகள் எழுப்பப்பட்டன.*



எப்படி நிறவாதத்திற்கு எதிராகப் போராடுவது? எவ்வாறு வெளிநாட்டு இளைஞர்கள் தம்மை நிறவாதத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்வது? என்பன பிரதானமான கேள்விகளாகும். நான் நினைக்கவில்லை இக் கேள்விகளுக்கு நான் பதில் சொல்லியுள்ளேன் என்று. ஆயினும் எனது விடயம் தொடர்பான எனது கருத்தைக் கூற விரும்புகின்றேன்.

சென்ற முறை கட்டுரையில் நான் இளைஞர்களிடையேயான வன்முறை, இளைஞர்களிடம் உள்ள நிறவாதம் குறிப்பாக எனது வயதுள்ளவர்களின் நிலை என்பன பற்றியே குறிப்பிட்டிருந்தேன்.

நிறவாதம் பொதுவாக அந்நியர் பற்றிய பயம் அல்லது வெறுப்பால் வருவதாகும். அத்தோடு அந்நியர் பற்றிய நிச்சயம் இன்மையும் ஒரு காரணமாகும். ஒரு மனிதனோ ஒரு மனிதக் குழுவோ தாம் அந்நியரினால் மிரட்டப்பட்டாலோ (அல்லது பாதிக்கப் பட்டாலோ) அவர்கள் அனேக சந்தர்ப்பங்களில் வன்முறையைப் பாவிக்கின்றனர். (அல்லது பாவிக்க நிர்ப்பந்திக்கப் படுகின்றனர். இது எல்லாக் காலங்களிலும் மனிதர்களினால் மேற் கொள்ளப்பட்டு வந்துள்ளது. தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான வழிமுறையாக வன்முறையே மனிதனின் இயல்பாக (பிறவிக் குணமாக) வெளிப்படுகின்றது. குறிப்பாக எதிர்த்தரப்பினால் வன்முறை பிரயோகிக்கப்படும் போது இதன் முடிவில் சிலர் காயப்படவோ அல்லது இறக்கவோ நேரிடுகிறது. இவ்வாறான நிகழ்வுகள் கற்காலம் தொட்டு தற்போதுவரை நடைபெறுகின்றது. முதலாவது நிகழ்வாக வன்முறையைத் தனது தற்பாதுகாப்பிற்காகப் பிரயோகிப்பது மனித நாகரீகமற்றதாகும். ஆயினும் மனிதன் தான் தாக்கப்படும் போது கைகட்டிச் சிரித்து நிற்க முடியாதுதான். தற்பாதுகாப்பு எனும் சொல்லானது ஒருவர் தமமை எல்லாச் சிறந்த முறையிலும் பாதுகாத்துக் கொள்வதும், எதிரியையோ அல்லது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாக்குபவரையோ அனாவசியமான காயத்திற்கு உட்படுத்துவது அல்ல.
விளையாட்டுக்களில் குறிப்பாக கராட்டி விளையாட்டில் முக்கிய விடயமாக இவ்வாறான நிலைமைகளில் இருந்து தப்பித்துக் கொள்வதே ஆகும்.
இவ்வாறான நிலமைகள வரும் போது, மனிதன் கட்டாயமாக அந்நிலைமையில் இருந்து விடுபடுவதற்குத் தாக்குதல் இல்லாத வழிமுறைகள் உண்டா என முதல் கண்டறிய வேண்டும். இதன் முக்கிய விடயமானது தன்னைத்தானே கட்டாயமாகப் பாதுகாத்துக் கொள்வதற்கும், அத்துடன் வன்முறைப் பிரயோகத்தைத் தவிர்த்துக் கொள்வதற்குமாகும்.
வார்த்தைகளினால் தாக்குதல் என்பது செயல்பாட்டை விட மிகவும் இலகுவானது. ஆயினும் பல சந்தர்ப்பங்களில் இது நடைமுறைக்கு ஒவ்வாததாகின்றது. அத்தோடு உண்மையில் மனிதனால் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வார்த்தைகளை மட்டும் தாக்குதல் நடத்துவதற்கு எதிராகப் பிரயோகிக்க முடியாது.
இவ்வாறு தாக்குபவர்கள் நிற வெறியாளர்கள் ஆவார். நிறவெறியர் மனித நாகரீகமற்ற முறையில் தாக்குவார்கள். இவர்கள் போதிய மனித அறிவு அற்றவர்கள். இவர்கள் பிழையான சூழலில் வளர்ந்தவர்களாவார். அல்லது பெற்றோர்களால் பிழையாக வழி நடத்தப்பட்டவர்களாவார். அநேக சந்தர்ப்பங்களில் இவ்வகையான மனிதர்களிடம் கதைப்பது செளகரியமாக இருப்பதில்லை. ஆனால் எனது சென்ற முறைக் கட்டுரையில் நான் சொன்னது, வெளிநாட்டு இளைஞர் குழுக்கள் பற்றியதும் இவர்கள் நிறவெறியர்கள் மீது வன்முறை பிரயோகிக்க முயல்வதும் பற்றியதுமாகும். இவர்கள் (அல்லது வெளிநாட்டு இளைஞர்கள்) வெள்ளையருக்கு எதிரான வன்முறையும் அந்நியர் பயமும் நிச்சயமின்மையும் என்பவற்றின் அடிப்படையில் எழுவதாகும்.
நிறவாதம் என்பது ஆக ஒரு வெள்ளையர் ஒரு கறுப்பு நிறத்தவரைப் பார்த்து நீக்கிரோ என்று அழைப்பதும் அவரை அடித்து வீழ்த்துவதும் மட்டும் அல்ல. பல வெளிநாட்டவர் ஒதுக்கி வைக்கப்படுகின்றனர். உதாரணமாக நோர்வேயில் இது அரச நிறவாதமாக வெளிப்படுகின்றது. இந்த வடிவ நிறவாதம் மற்றயதிலும் பார்க்கக் குறைந்த அளவு நேரடியானதும் குறைந்த அளவு கிளர்ச்சியூட்டும் தன்மையும் கொண்டது.
எத்தனை வீதமான நோர்வீஜியர்கள், தஞ்சம் கோரி வந்த அகதிகள் திருப்பி சமூகநல நாடான நோர்வேயை விட்டு வெளியேற்றப்படும் போது அக்கறையோ கவலையோ கொள்கின்றனர்? பொதுவாக இவர்கள் வீட்டின் வரவேற்பு அறையில் இருந்தபடி டாக்ஸ்ரிவ்யன் இல் (நோர்வேஜியத் தொலைக்காட்சிச் செய்தி) இச் செய்தியைப் பார்ப்பது சாதாரண நிகழ்வாகும். இது பற்றிப் பலர் பிழையென நினைக்கிறார்கள். நிச்சயமாக இன்னும் பலர் அரசு பிழையான வழியில் கையாள்கிறது, இது ஒரு கவலையான விடயம் என நினைக்கிறார்கள். ஆனால் சிறிது நேரத்தில் செய்தி முடிகிறது. அடுத்து மற்றய கலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின்றன. செய்தி மறக்கப்படுகிறது.
நிறவெறிச் சிந்தனை என்பது கூடப்பிறப்பதில்லை. ஒருவரின் பிறப்பில் உதிப்பதில்லை. நிறவாதச் சிந்தனையும் ஒடுக்குதலும் சிறுவயதில் இருக்கும் போதே அரசிடம் இருந்தும் பெற்றோரிடமிருந்தும் நண்பர்களிடமிருந்தும் அயலில் இருந்தும் அநேகமாகத் தொடர்பு சாதனங்களில் இருந்தும் கற்றுக் கொள்கின்றனர்.
வெவ்வேறு நாட்டைச் சேர்ந்த வெவ்வேறு நிறத்தைச் சேர்ந்த சின்னஞ்சிறு குழந்தைகளை ஒன்றாகக் கூடி விளையாட விடின் அச்சிறு குழந்தைகள் மற்றக் குழந்தைகள் தம்மிலும் வித்தியாசமானவர்கள் என்று ஒருபோதும் நினைப்பதில்லை. இவ்வாறான குறிப்பிட்ட சிந்தனை (அறிவு) இல்லாத குழந்தைகள் ஒருபோதும் மற்றவர்களை ஒதுக்கி வைப்பதில்லை. ஒதுக்கி வைக்கும் சிந்தனையைப் பெற்றோர்களே தோற்ற வைக்கின்றார்கள்.
ஒரு குழந்தை மற்றைய நாட்டு மற்றைய நிறத்தையுடைய குழந்தைகளிடமிருந்து தனிமைப்படுத்தப்பட்டு வளர்க்கப்படின் அது மற்றைய நாட்டுச் சிறுவர்களைச் சந்திக்கும் போது பிரச்சனைக்குரியதாக உணர்கின்றது. இந்தப் பிள்ளைகளே நாளடைவில் நிறவாதிகளாக, குடிவரவாளர்களுக்கு எதிரானவாகளாக மாறுகின்றனர். இந்தநேரத்தில் குடிவரவாளர்கள் தம்மைப் பாதுகாக்க முற்படும் போது வன்முறை பிறக்கின்றது. நிறவாதம் என்பது குடிவரவாளர்களாகிய (வெளிநாட்டவரின்) எமது பிரச்சனை மட்டுமல்ல. எல்லா நோர்வே நாட்டவரும் நிச்சயமாகத் தமது நாட்டைச் சேர்ந்தவர்கள் நிறவாதிகளாக இருப்பதை இட்டுத் தமது விமர்சனத்தை வெளிப்படுத்த வேண்டும்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கேப்பியார்

# கவிஞர் பழமலையுடன் ஒரு உரையாடல்



கவிஞர் பலமலய் அவர்கள் தமிழ்ப் பேராசிரியராக விழுப்புரம் அரசு ஆடவர் கல்லூரியில் பணிபுரிகிறார். அரசியலில் திராவிடர் இயக்கத்தில் இருந்த காலத்தில் இந்தி எதிர்ப்பு, மற்றும் பல போராட்டங்களில் பங்கெடுத்தார். பின்னர் திராவிடர் கழகத்தில் இருந்து அடுத்த பரிணாமமாக மாக்சிய - லெனினிய இயக்கத்தில் இணைந்து அதன் கலை இலக்கியப் பிரிவான புரட்சிப் பண்பாட்டு இயக்கத்திலும் செந்தாரகை, தோழமை முதலிய இதழ்களில் பணியாற்றினார். தொடர்ந்து தனது கலை, இலக்கியப் பணிகளை மக்களின் போராட்டங்களுக்குப் பயன்படுத்தி வருகிறார். கவிஞர் பலமலயின் சனங்களின் கதை 1988ஆம் ஆண்டு வெளிவந்தது. அதுவரை கவிதை, கவிஞன் தன்னைக் கடந்து ஒரு மோன நிலையில் இருந்து வருவதாக ஜபித்து வந்தவர்களின் முகத்தில் அடிப்பது போல சாதாரண ஜனங்களின் வாய்மொழி, வட்டார வழக்கில் எந்தவித கவிதாஜோடனையும் அற்று வெளிவந்தது. ஒரு கூட்டம் மருண்டு மௌனம் காத்தது. ஆனால் உழைக்கும் வர்க்கமோ தனக்கான கவிஞனை இனங்கண்டுகொண்டது. அதுமுதற்கொண்டு சிறுபத்திரிகை முதல் பெரும் பத்திரிகைகள் வரை பாராட்டித தீர்த்தன. 1992ம் ஆண்டு குறோட்டன்களோடு கொஞ்ச நேரம் என்ற இரண்டாவது தொகுப்பு செடிவகைகளை வைத்துக்கொண்டு மனிதநேயத்தை வளர்ப்பது பற்றிப் பேசியது. 1994ம் ஆண்டு இவர்கள் வாழ்ந்தது என்ற மூன்றாவது தொகுப்பைக் கண்டதும் மீண்டும் இருந்தாலும் கவிஞரின் கவிதைகளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

***அலசி ஆராய்ந்தார்கள்: கோ.கேசவன், அ.மார்க்ஸ், தமிழவன், தி.க.சி, இன்குலாப், இந்திரன், அசோகமித்திரன், புதியஜீவா, பஞ்சு, அரங்கநாதன், சுஜாதா, அறிவுமதி, இறைவன், பா.செயப்பிரகாசம், கோவை ஞானி. ஈழத்து விமர்சகர்களின் பார்வை என்ன சொல்ல விரும்புகிறது என்பது அவர் கேள்வி. இந்நேரத்தில் கவிஞரின் வாய்மூலமாகவே அவரைத் தெரிந்துகொள்வதற்கு உதவும் முகமாகவே இங்கு இந்தப் பேட்டி எடுக்கப்பட்டது.***

கேப்பியார்: நீங்கள் எழுத்தாளராக வரக் காரணமாக இருந்தது எது?
பழமலய்: என் தந்தை தெருக்கூத்து ஆடுவார். தாய் நன்றாக ஒப்பாரி வைப்பார். அத்தைக்கு மகனாக வளர்ந்தேன். நன்றாகப் புஞ்சப்பாட்டுப் பாடுவார். மாமா தன் இளமைக்கால அனுபவங்களைச் சொல்லக் கேட்டவைதாம் நான் கேட்ட நல்ல கதைகள். நான் பாட்டிக் கதைகள் கேட்டதில்லை. என் அம்மா ஆயி கருடபுராணம் படிக்கச் சொல்லி என்னைத்தான் கேட்பார்.

கே: எழுத்தாளனாக ஆனதற்காக எப்போதாவது வருத்தப்பட்டதோ சந்தோஷப்பட்டதோ உண்டா?
ப: நான் முழுநேர எழுத்தாளன் இல்லை. என் வருமானம் எழுத்து அல்ல. எழுதுவதில் உள்ள வருத்தமும் சந்தோஷமும்தான் என் அனுபவம்.

கே: கவிதை, பிற படைப்புகள் இவற்றை எவ்வாறு வேறுபடுத்திப் பார்க்கிறீர்கள்?
ப: கடைசி வாசகனை நினைத்துக்கொண்டு சாவது ஒரு கவிதையாக - அய்ருவாக - இருக்கலாம். இது ஒரு மொழியில் நிறையப் படைப்புகளுக்குப் பிறகுதான் சாத்தியப்படுவது. அதாவது பிற படைப்புகள்.

கே: கவிதையிலும்கூட வட்டார வழக்குகளை அப்படியே இடம்பெறச் செய்கிறீர்கள். இது சரியா?
ப: புதிய கவிதை முழுக்கவும் உரைநடையில் - பேச்சு நடையில் - எழுதப்பட வேண்டும் என்பதை நோக்கிய என் முயற்சிதான் அது. கதை, கவிதையில் நடைவேறுபாடு முற்றாக ஒழிக்கப்பட வேண்டியது. அவறுபாடு இல்லை என்பதுதான் இயற்கை. நாம் செய்துகொண்டிருப்பது செயற்கை. இலக்கியம் இனியும் இலக்கண ஆசிரியர்களுடையதாக இருக்க முடியாது. மக்களுடையதாக மாறியாக வேண்டும். அது வட்டார மக்களுடையதாகவும் இருக்கலாம்.

கே: தமிழ்ச் சூழலில் முக்கியமான கவனிப்பை உங்கள் கவிதைகள் பெற்றிருக்கின்றன. இதை எப்படிப் புரிந்துகொள்கிறீர்கள்?
ப: சனங்களின் கதைகளைத்தான் சனங்கள் கேட்க விரும்புகிறார்கள். தனிப்பட்ட அல்லது தனிமைப் பட்டவர்களின் புலம்பல்களை அல்ல.

கே: உங்கள் கவிதைகள் எந்த வகையான பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவை என்று நினைக்கிறீர்கள்?
ப: கவிதை என்று எழுதும் வேலையை எளிதாக்கிவிடும், எளிமைப் படுத்திவிடும் ஆபத்து இருப்பதையும் உணர்கிறேன்.

கே: உங்களுடைய அரசியற் செயற்பாடுகளின் ஒரு பகுதியாகத்தான் கவிதையைக் கருதுகிறீர்களா?
ப: அரசியற் செயல்பாடுகளின் பகுதியாகக் கவிதையையும், கவிதைச் செயல்பாடுகளின் ஒரு பகுதியாக அரசியலையும் கருதுகிறேன். என் வாழ்க்கை என் கவிதை என்கிற நிலையில் சாத்தியமாவது இது.

கே: உங்களுடைய கவிதைகள் சிறுகதைத் தன்மை கொண்டவையாக இருக்கின்றன. இந்தக் குணம் கவிதையின் நுட்பத் தன்மையைச் சிதைத்துவிடுகிறது. கவிதைக்குப் பிரதானமான படிவங்களோ, குறியீடுகளோ எதுவுமற்று அனுபவத்தைத் தட்டையான ஒரு விவரண மொழியில் பதிவு செய்வதாக ஒரு கருத்து உள்ளது. இதுபற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?
ப: கதை என்பது ஒரு நிகழ்வு. கதை இல்லாமல் ஒரு துணுக்கைக்கூடச் சொல்ல முடியாது. கதை இல்லாமல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அனுபவங்களை நான் கவிதை அனுபவங்களாகச் சொல்கிறேன் என்பது சரியாக இருக்கும்.
நுட்பம், படிமம், குறியீடு என்று இன்குலாப்போ நானோ அக்கறையில்லாமல் இருக்கலாம். எங்களின் வாழ்நிலைதான் எங்கள் அழகுணர்ச்சியைத் தீர்மானிக்கிறது. தாகத்தில் தவிப்பவர்களுக்கு வெறும் தண்ணீரே அழகு.

கே: சமூக நெருக்கடிகளும் அது சார்ந்த துக்கங்களும் உங்கள் கவிதையில் தொடர்ந்து பதிவாகிவருகின்றன. ஆனால் படைப்பாளிக்குள் அந்தரங்கமான பகுதிகளும் ஆசாபாசங்களும், அந்தரங்கமான நெருக்கடிகளும் இருக்கின்றன. அவை எழுத அவசியமற்ற பிரதேசங்கள் என்று நினைக்கிறீர்களா?
ப: இவர்கள் வாழ்ந்ததில் அரணையைப் பற்றி ஒரு கவிதை இருக்கிறது. அந்த அனுபவத்தில் உள்ள அந்தரங்கத்தை நான் உணர முடிகிறது. உணர்கிறேன். அதற்காக அதிலேயே மூழ்கிவிட முடியாது. அதற்கு எனக்கோ எங்களுக்கோ நேரம் இல்லை என்பதுதான் உண்மை. நேரம் இருப்பவர்கள் எழுதக்கூடாது என்றெல்லாம் சொல்ல மாட்டேன். இது உரிமை மற்றும் வெளியீட்டுப் பிரச்சனை. இது ஒருவருக்கு ஒருவர் அனுமதிக்க வேண்டியது. குறோட்டன்களோடு கொஞ்ச நேரம் என்று நான் எழுதியுள்ளது ஒரு அந்தரங்கமான நெருக்கடியின் வெளிப்பாடுதான்.

கே: ஒரு நல்ல கவிதைக்கான அம்சங்கள் என்னென்ன?
ப: முதலும் முடிவுமான கூற்று மறக்க முடியாததாய் இருப்பது. இன்றை, தகவல் தொடர்பு நெரிசலில் எந்த ஒரு படைப்புக்கும் இது சாத்தியம் இல்லை என்பதால் படிக்க முடிவதாய் இருப்பது.

கே: தமிழில் தற்காலத்தில் எழுதுகிற கவிஞர்களாக யாரைச் சொல்ல முடியும்?
ப: தரநிர்ணயம் செய்து, குறிப்பிட்டவர்களுக்கு முதல் மூன்று பரிசுகள் என்றும் ஆறுதல் பரிசுகள் என்றும் கொடுப்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. இது ஒரு வகையில் சரியானதும் இல்லை. எக்காலத்திலும் கவிஞர்களில் அல்ல, கவிதைகளிலேயே நாம் தரத்தைத் தேட வேண்டும்.

கே: ஒரு தரமுள்ள கவிதையைச் சொல்ல முடியுமா?
ப: மக்கள் உரிமைக்காகப் போராடி வரும் எங்கள் தோழர், திண்டிவனம் பேராசிரியர், பா.கல்யாணியைச் சொல்ல முடியும். அவரைப் போன்றதொரு அழகும், ஆழமும் கொண்ட கவிதையை நான் படித்ததில்லை. அவர்தான் தரமான கவிதை.

கே: ஒரு கவிதை எழுதும்போது உங்களுக்குப் பிரதானமாகத் தோன்றுவது கருவா, அதன் அமைப்பா?
ப: எங்களுக்கு உழவு. என் மனப்பான்மை சிற்றூர். மேகத்தின் நிறத்தைவிட நீரைத்தான் நாங்கள் நேசிப்பது.

கே: உங்களை மிகவும் பாதித்த எழுத்தாளர்கள் அல்லது எழுத்துகள் பற்றிச் சொல்லுங்கள்?
ப: பெருஞ்சித்திரனார், அவ்வையார்; குறிப்பாகப் புறநானூற்றுப் பாடல்கள்.

கே: பிரமிள், பசுவய்யா, ஞானக்கூத்தன் - இவர்கள் தமிழ்க் கவிதைக்கு ஏதேனும் செய்திருப்பதாக நினைக்கிறீர்களா? அல்லது இந்த எழுத்து வகைகளை நிராகரிப்பதன் மூலமாகத்தான் தமிழ்க் கவிதை ஆரோக்கியமான திசையைக் கண்டடைய முடியும் என நினைக்கிறீர்களா? அப்படியானால் அதற்குரிய காரணங்கள் என்ன? அத்தகைய திசையை உருவாக்கும் தடயங்கள் என்று யாரைக் குறிப்பிட விரும்புகிறீர்கள்?
ப: இவர்களின் பங்களிப்பை யாரும் மறுத்துவிட முடியாது. இவர்கள்தான் பங்களிப்புச் செய்திருக்கிறார்களா - என்பதுதான் கேள்வி. இவர்கள் உண்டு கொழுத்திருப்பவர்களை அறிந்தளவுக்கு இராப்பட்டினி கிடப்பவர்களை அறியாதவர்கள். இதில் ஆரோக்கியமான திசை என்பது உழவையும் தொழிலையும் எழுதுவதாகத்தான் இருக்க முடியும். நகரங்கள் அல்ல, சிற்றூர்கள்தான் எதிர்காலக் கலை இலக்கியச் சுரங்கங்கள். இந்த யதார்த்தங்களை அலட்சியப்படுத்திவிட்டு ஒருவர் இனி எழுத்தாளராக இருக்க முடியாது எனில், உலகத்தரம் பேசுவது வெறும் வாயை மெல்லுவதுதான். அல்லாமலும் இவர்களைப் பற்றிப் பேசுவதிலும் இவர்களிடமிருந்து கற்றுக் கொள்வதிலும்தான் ஒரு மொழியின் இலக்கியம் உலகத்தரத்தை எட்டுவதாக இருக்க முடியும். திசையை உருவாக்கும் தடயங்களில் நான் என்னுடையவற்றில் சிலவற்றைச் சொல்லிக் கொள்ள முடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கவிஞர்களைவிடக் கவிதைகளை நாம் குறிப்பிட முடியும்

கே: இன்றைக்குள்ள அரசியல் சினிமா பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?
ப: சினிமாவில் அரசியல் இருக்கலாம். அரசியலில் சினிமா இருக்கக்கூடாது.

கே: தலித் இலக்கியப் போக்கு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?
ப: இது வாய் பார்த்தவர்களி குரல். கேட்டுக் கொண்டிருந்தவர்கள் பேசத் தொடங்கி இருப்பது.

கே: தமிழ் இலக்கியத்தின் போக்கு வருங்காலத்தில் எவ்வாறு அமையலாமென்று நினைக்கிறீர்கள்?
ப: வருங்காலத்திலும், காலங்களிலும் இது மிகவும் சனநாயகப்படும்.

கே: இலக்கியம் சமூக மாற்றம் செய்ய முடியும் என்று நினைக்கிறீர்களா?
ப: இலக்கியம்தான் சமூக மாற்றத்தைச் செய்ய முடியும்.

கே: விருதுகள் வழங்கப்படுவது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?
ப: யாரால் யாருக்கு வழங்கப்படுகிறது என்பது முக்கியம்

கே:சிறுபத்திரிகைகள் மற்றும் இப்போதைய இலக்கியச் சூழல் எவ்வாறு உள்ளதாகக் கருதுகிறீர்கள்?
ப: சிறுபத்திரிகைகளில் ஆசிரியர் குழுவில் சனநாயகம் இருக்க வேண்டும். சனநாயகம் இருந்தால் சிறுபத்திரிகைகள் இருக்க முடியாது என்பது வேறு! அற்ப வாழ்நாள் உடையவை என்றாலும், கையைச் சுட்டுக்கொள்கிற காரியம் என்றாலும், சிறு பத்திரிகைகள் வரவேற்கப்படவும் ஆதரிக்கப்படவும் வேண்டியவை. சிந்தனைப் பள்ளிகள் உருவாக வேண்டும். மனிதனின் பரிணாமத்திற்கு இவை வேண்டியவை. உதிரிகள் போதுமான அளவுக்கு இயக்கங்களாகவில்லை என்பதுதான் இன்றைய இலக்கியச் சூழல்.

கே: நீங்கள் சிறுபத்திரிகைகளிலும் இதற்கு நேர் எதிரான கொள்கை கொண்ட குமுதம் போன்ற இதழ்களிலும் எழுதுகிறீர்கள்?
ப: நான் ஒன்றை எழுதும்போது குறிப்பிட்ட இதழ்களுக்காக எழுதுவது இல்லை. எழுதியவற்றை அனுப்பி வைக்கும்போது இதழ்களின் தேவையைக் கவனிக்கிறேன். இன்றைக்கு வெகுசனப் பத்திரிகைகள் சிறுபத்திரிகைகளை விழுங்கி வளர்வனவாக இருப்பதையும் நாம் கவனிக்கலாம். எல்லாப் பத்திரிகைகளும், எல்லாப் படைப்புகளையும் வெளியிடும் என்று எதிர்பார்க்க முடியாது. அவர்களுக்கு விற்பனை நோக்கம் இருக்கிறது. இதில் என் சமாதானம் எல்லாம் என் படைப்புகளில் சிலவற்றுக்காவது பரந்த வாசகர் தளம் கிடைக்கிறதே என்பதுதான். எனக்கு வாசகர்கள்தான் பிரதானம் பத்திரிகைகள் அல்ல.

கே: தமிழில் வெளியாகும் குப்பைப் பத்திரிகைகளுக்கு எதிரான இயக்கம் சரியாக இல்லாததன் காரணம் என்ன?
பதுமான பத்திரிகைகள் வெகுமக்கள் பிரச்சினைகளை வெகுமக்கள் புரிந்துகொள்கிற மாதிரி எழுதுகையில் குப்பைப் பத்திரிகைகள் எங்கோ மறைந்துவிடும். இதைச் செய்யாமல் இதற்கு எதிராக இயக்கம் கட்ட முடியாது.

கே: வெகுசன பத்திரிகைகள், தொடர்பு சாதனங்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? அவைகளோடு பங்கெடுப்பதில் உங்களுக்குச் சிரமங்கள் இருக்கிறதா?
ப: இவை பணம் பண்ணுவதாக இருக்கின்றன. முதலாளித்துவ சமுதாயத்தில், இவற்றில் ஒரு கலை இலக்கியவாதி பங்கெடுப்பது என்பது அவன்/ அவள் ஆளுமைக்கு ஒரு சவாலாக இருக்கிறது. இவ்வளவுக்கு இடையிலும் சாதி பார்ப்பவர்கள் இருக்கிறார்கள் என்பதை விடச் சாதனைகள் இருக்கின்றன என்று ஆறுதல் அடையலாம்.
கலை இலக்கிய முயற்சிகளின் கொடுமுடி திரைப்படந்தான் என்று நான் நினைக்கவில்லை - என்பதால் இவை என் ஏக்கங்களாகவோ, இலட்சியங்களாகவோ இல்லை. ஆன்மாவை விற்காமல் தெருமுனைகளில் மக்கள்முன் நின்று ஒரு பாடலைப் பாடுவதையோ ஒரு கவிதையைப் படிப்பதையோ நான் பெரிதாக மதிக்கிறேன்.

கே: தமிழில் இலக்கியமும் சமூக விழிப்புணர்வும் சரியாக இல்லாததறகுக் காரணம் என்று எதனைச் சொல்வீர்கள்?
ப: இலக்கியத்துக்கும் சமூக விழிப்புணர்வுக்கும் ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மிக நவீன ஈழத்துக் கனவு

மூன்று ரயில்வண்டி
ஆமாம் மூன்று ரயில்வண்டி
என் மண்டைக்குள் மோதிப் புரண்டு சிதறின.

அனைத்து வண்டியிலும்
சனங்கள் மிக அதிகம்
என் நெஞ்சுக்குப் போக
வந்தவர்கள் அனைவருமே!

கண்ணருகில் வருவதற்கு
முன்னாலே கோளாறு.
யாரும் உயிர்தப்பி என் மூளையிலே குதித்ததுவாய்
இன்னும் தகவலில்லை,
பெருவிபத்து,
என் மண்டை
இன்று பிணக்காடு.

பல உயிரை உடனடியாய் குடித்த ரயில் விபத்து
நிகழ்ந்த என்னுடைய தலையே!
உன்னைத் தாங்கி
நான் இன்னும் உலவுவது
மெய்தான்; ஆனால் உற்றுப்பார், உன்னை
சுழற்றி அந்த மூலையிலே போட்டுவிட்டு
உயிர் முண்டமாய் திரிவதை

என் நெஞ்சுக்கு வந்தவர்கள்
அகதிகள்
மேற்சொன்ன சம்பவமும், அதன் துயரும்கூட
எங்கள் ஈழத்துக் கனவொன்றே,
மிக நவீன!

**சோலைக்கிளி**

சமூகத்துக்கு முன் நிபந்தனையாக நூறு விழுக்காடு கல்வி அறிவு வேண்டி இருக்கிறது. பிறகுதான் சரியானவற்றைப் பற்றிப் பேச முடியும். இது நிறைவேறாதவரை சரியானவற்றைப் பற்றிக் கனவுதான் கண்டுகொண்டிருக்க முடியும்

கே: இங்குள்ள முற்போக்கு அமைப்புகள் இலக்கியம் பற்றிக் கொண்டுள்ள எண்ணங்கள் பலவீனமானவை என்று உலக இலக்கியப் பரிச்சயமுள்ள தமிழ் வாசகர் பலர் நினைக்கிறார்கள். அவை இலக்கியம் பற்றி ஏற்படுத்தி இருக்கும் எண்ணங்கள் படைப்புகள் எதையும் உருவாக்கியதற்குத் தடயம் எதுவுமில்லை என்று நினைக்கிறார்கள். இதைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

ப: மெய்தான். இப்போது நிலைமை மாறியுள்ளது. இரவுகளும், பகல்களும் கலை இலக்கியங்களுக்கு கொடுக்கப் படுகின்றன. படைப்புகள் எதையும் உருவாக்கி விடவில்லை என்பது மிகவும் குறைத்து மதிப்பிடுவது அல்லது மதிப்பிட்டுக் கொள்வது. பட்டுக்கோட்டை, தணிகைச்செல்வன், இன்குலாப் என்று பலரைச் சொல்ல முடியும். தரம், தரம் என்பது நம்மை நாமே தரம்தாழ்த்திக் கொள்வதற்காக மட்டுமே இருக்க வேண்டியதில்லை

கே: நமது சூழலில் படைப்பில் அழகியல் என்பது உயர்சாதிகளின் தன்மை கொண்டது என்றும் தரவேற்றுமை ஆதிக்க மனோபாவத்தின் இயல்பு என்றும் பேசப்படுகிறது. ஆனால் உலக இலக்கியத்தின் சிறந்த பகுதிகள் எல்லாவற்றிலும் அழகியலும், தரவேற்றுமையும் முக்கியமான விஷயங்களாக இன்றுவரை தொடர்ந்து இருந்து வருகின்றன. அழகியல், தரவேற்றுமை பற்றி உங்கள் பார்வை என்ன?

ப: அழகியல், தரம் என்பவற்றில் ஐயத்திற்கு இடம்

www.tamilarangam.net

இல்லாமல் சாதி, மதம், இனம், வர்க்கம் என்பவற்றின் பின்னணி இருக்கிறது. இந்த அழகில் அழகியல், தரம் என்பவை அகவிருப்பங்கள் ஆகிவிடுகின்றன. அறிவியல் அல்ல. அவரவர்க்கான அழகியலையும் அதனோடு தொடர்புபடும் தரத்தையும் அங்கீகரிக்க வேண்டும். சமத்துவதும் தணப்பதும் இறுதிவரையில் சமத்துவதும் திணிப்பதுமாகவே எஞ்சமுடியும். அல்லாமலும் ஒரு சிலரின் விழைவு ஒட்டுமொத்த சமூகத்தின் விழைவாக இருக்கவேண்டும் என்பதில்லை, இருக்காது. தொடர்ந்து ஒலிக்கும் அவநம்பிக்கைக் குரலை ஒரு எச்சரிக்கையாக எடுத்துக் கொள்ளலாம். அதற்குமேல் அதில் அஞ்ச ஒன்றுமில்லை.

கே: நமது நாட்டில் எந்த மாதிரியான அரசாங்கம் வரவேண்டும் என விரும்புகிறீர்கள்?
ப: சோவியத்துகள் சிதறுண்டு போனதற்கான காரணங்களைத் தவிர்த்த ஒரு அரசாங்கத்தையே நாம் விரும்ப முடியும். அது மொழி, இனம், நாடு என்பவற்றின் சுயவளர்ச்சியை உறுதி செய்வதாக இருக்கும்.

கே: உங்கள் இளமைக்கால வாழ்வு எப்படி இருந்தது?
ப: சிற்றூர் வாழ்வு, பன்முகத் தன்மை கொண்டது.

கே: நீங்கள் இலக்கியத்துக்கு வருவதற்கான பின்புலம் என்ன? எழுதிக் கொண்டிருப்பதற்கான வாழ்க்கைக் காரணங்கள் என்ன என்று யோசித்துப் பார்க்கும்போது உங்களுக்கு என்ன சொல்லத் தோன்றுகிறது?
ப: குறிப்பாக விருத்தாசலம் கிளை நூலகத்தில் புத்தகங்கள் எடுத்துப் படித்தது என்று சொல்லலாம். கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை, பெ.தூரன்.
எங்கள் வாழ்க்கை எத்துணைதான் 'மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தாலும் அதில் உள்ள அழகை நான் கண்டுகொண்டது ஒரு காரணம்.
எழுதிக் கொண்டிருப்பதற்கான வாழ்க்கைக் காரணம் வயிற்றுப் பிழைப்பு அல்ல. ஒரு கட்டத்திற்குப் பிறகு பேரும், புகழும் கூட அல்ல. நாங்கள் கருத்தியல் களத்தில் நிறையக் 'கலகம் செய்ய வேண்டியிருக்கிறது.

கே: மறக்க முடியாத வாசகர்கள் யாராவது....?
ப: அண்மையில் வெளியாகியுள்ள 'இவர்கள் வாழ்ந்தது கவிதை ஒன்றில் 'ரெட்டிச்சி என்று வருகிறது. 'ரெட்டியார் வீட்டு அம்மா என்பதில் சுகம் காணும் ஓர் அம்மையார் நீர் பழம் அல்ல; அழுகல் என்று கடிதம் எழுதியிருக்கிறார். பாராட்டிக் கடிதம் எழுதி இருக்கிறேன்.

கே: உங்களை முந்தைய அரசாங்கங்கள் அடிக்கடி கைது செய்தது பற்றி....
ப: எழுத்தாளர்கள் கைது செய்யப்பட வேண்டும். அப்போதுதான் அவர்கள் எழுதிக் கொண்டிருப்பதாக அர்த்தம். புத்தகங்கள் தடை செய்யப்பட வேண்டும், அப்போதுதான் அது புத்தகம்.

கே: தமிழ்க் கவிதை உலகின் எதிர்காலம் எவ்வாறு இருக்கும்?
ப: சிறுகதை, தொடர்கதை போலக் கவிதையும் பிரபலமாகும். வெகுவாகச் சனநாயகப் படுவதாக அமையும். கவிதை 'திருமந்திரம் அல்லாமல் தெருப்பேச்சாக மாறிவிடும். ●

# ஒரு நாடோடி இசைப்பாடல்

**மஹ்முத் தர்விஷ்**
தமிழில்: **மணி**

தெளிவானதொரு வீதி.
நிலவென்னும் விளக்கேற்றப்
பெண்ணொருத்தி போகின்றாள்
தேசமோ வெகுதொலைவில்
தடயமிலா ஒரு தேசம்.

புளிப்பான ஒரு கனவு.
கல்லினிலே ஒரு இடுப்பைக்
குரலொன்று செதுக்குகிறது.
என் கண்ணின் இமைமீதோ
யாழ் நரம்புகளின் மீதோ
சென்றுவிடு என் அன்பே.

கொன்றுண்ணும் ஒரு நிலவு.
காற்றினையும் மழையினையும்
முறிக்கின்ற மோனமோ
மரம் இழைக்கும் ஊசியாய்
மாநதியை மாற்றிடுது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



● யமுனா ராஜேந்திரன்

# அயலான் அபிப்பிராயங்கள் பற்றி



சினிமாத் திருட்டு விவகாரம், இசைத் திருட்டு விவகாரம், இலக்கியத் திருட்டு விவகாரம் க.நா.சு. காலத்திலிருந்து சுந்தர ராமசாமி காலம்வரை, பாலசந்தர் காலத்திலிருந்து மணிரத்தினம் காலம்வரை எம்.எஸ்.விஸ்வநாதன் காலத்திலிருந்து ஏ.ஆர்.ரகுமான் காலம்வரை நடந்துவரும் விவகாரம்தான்.

தாயகத்தில் (கனடா) இதுமாதிரி பிரச்சனைகள் எழுதப்பட்டுள்ளது. தேவாவின் ஒரு பாடலில் மெட்டு வேறொரு இசைக் கலைஞரின் மெட்டை ஞாபகப் படுத்துவதாக, பம்பாய் படத்தின் Title music, Dancing with the wolves படத்தின் இசையை ஞாபகப் படுத்துவதாக விவகாரங்கள் வந்துள்ளது.

சு.ரா. நாவலின் உள்ளடக்கம், அட்டை வடிவமைப்பு போன்றன பிறிதொரு அமெரிக்க ஆசிரியரின் நூல் உள்ளுறை/ வடிவமைப்பு போன்றன என்ற ரீதியில் ஒப்பீடொன்று வித்யாசம் (தமிழ்நாடு) பத்திரிகையில் வந்துள்ளது.

மகளிர் மட்டும் படம் காட்சிக்குக் காட்சி ஒரு அமெரிக்கப் படத்தின் தழுவல் என்கிறார் எனது நெருங்கிய நண்பர். பாலச்சந்தர் தயாரித்த படமொன்றில் வாய்பேசா இசைக்கலைஞன் பாலசுப்ரமணியம் நான் பார்த்த ஒரு அமெரிக்க இத்தாலியப் படத்தில் பாவரொட்டி (Pavorotti) இருந்தார். காட்சி அமைப்புகள் கூட அப்படியே இருந்தன.

ஹரிஹரனின் ஏழாவது மனிதன் திரைப்படம் அப்படத்தில் 'ஸ்டிரைக் எனப் பலகையில் எழுதி மேஜைமீது நின்று அனைவருக்கும் காண்பிக்கும் காட்சி 35 - 40 வருடம் முன்புவந்த Strike என்ற அமெரிக்கப் படத்தின் கொஞ்சமும் மாற்றப் படாத காட்சி. காமெரா கோணம், Timing பலகை காட்டப்படும் விதம் மௌனம் அப்படியே, Frame to frame அப்படத்தின் காட்சி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உண்மையில் படைப்பிற்கான ஆதாரங்கள் என்ன?

வாழ்வு. வாழ்வனுபவம். காதல். ஆண் பெண் உறவு. எதிர்ப்பு. Sentiments. இது உலகம் முழுக்க எல்லோருக்கும் பொதுதான். அமெரிக்கன் musical படம் பெரிய மண்டபங்களில் நடக்கும். நம் musical காலேஜ் இசைப் போட்டிகளாக இருக்கும்.

பாலியல் விழிப்பு, பால்யகால அனுபவம் போன்றவை கால இட மாற்றம் தவிர உலகம் முழுவதும் பொதுதான். இந்தப் பொதுத் தன்மை 'ஒரே மாதிரியான தோற்றந் தரத்தக்க சில படைப்புகளையும் உருவாக்கி விடுவது உண்டு. ஆனால் இருவேறு அசலான படைப்புக்களில் இந்தத் தோற்றம் வாழ்வின் ஆதாரத்துடன்/ ஆழத்துடன் இணைந்தது. காலம் இடம் காட்சியமைப்புகள் சித்தரிப்பு கோணம் போன்றவை இத்தகைய படைப்புகளில் நிச்சயம் வேறுபட்டிருக்கும். உதாரணமாக பாலு மகேந்திராவின் அழியாத கோலங்கள்.

பால்யகால பாலுணர்வு விழிப்புணர்ச்சி Adolecent தொடர்பாக 25 படமாவது பார்த்திருப்பேன். எல்லாவற்றிலும் சேட்டைகள், டீச்சர் ஊருக்கு வரும் பெண் ஊர்த் தேவடியாள் வருகிறார்கள்.

பாலு மகேந்திராவின் படத்திற்கும் இப்படங்களுக்கும் உள்ள ஒரே ஒருமை அடிப்படை ஆழத்தில் வாழ்வனுபவம்தான். மற்றபடி காலம் இடம் காட்சியமைப்பு சித்தரிப்பு கோணம் போன்றவை முற்றிலும் உடன்படுதல் இல்லாதவை.

இத்தன்மைதான் அசலான ( original ) மண் தன்மையுள்ள ( native ) படத்தைத் தருகிறது. இவ்வகையில் அழியாத கோலங்கள் பிறவற்றுடன் இணைசொல்ல முடியாதது.

அடுத்து ஒரு கவிதையின் ஒரு வரியோ, ஒரு சிந்தனைக் கட்டமைப்பின் ஒரு தர்க்கத் தெறிப்போ ஒருவருக்கு பிறிதொரு படைப்பிற்கான தூண்டுதலாக இருக்க முடியும்.

சுமங்களா நேர்முகத்தில் ( யூன்95 )கூட நாஞ்சில் நாடன் கு.ரா, நீல பத்மநாபன் பாதிப்பினால் தன் படைப்புகள் வேர்கொண்டதைச் சொல்கிறார். கு.ரா.வுக்கும் இத்தகைய பாதிப்பை காம்யுவும், காப்காவும் ஏற்படுத்தியிருக்கக் கூடும். ஆகவேதான் கு.ரா.வின் படைப்பு அவர்களின் வாழ்க்கை விசாரணைகளோடு ஒப்புநோக்கத் தக்கதாகவும் கால இடமாற்றம் சித்தரிப்பு எனும் அளவில் அசலான நாவலாகவும் இருக்கிறது.

அட்டை வடிவமைப்பு கு.ரா.விடம் கேட்க வேண்டியதல்ல. ஓவியரிடம் கேட்க வேண்டிய விடயம். இதுவன்றி முகமற்ற மனிதர்கள் வாழ்விலும் ஓவியத்திலும் இடம்பெறுவது உலகெங்கும் புதிதான விடயமல்லவே. முகமற்ற மனிதன் உலகெங்கும் இருக்கிறான்.

பாலு மகேந்திராவின் 'யாத்ரா திரைக்கதை ஒரு கவிதையின் பாதிப்பில் உருவானதெனச் சொல்லியிருக்கிறார். பல்வேறு கவிஞர்களின் நல்ல கவிதைகளின் இடையில் அவர் பாதிப்புக்கு உள்ளான கவிகளின் நல்ல வரிகளைப் பார்க்க முடியும்.

நல்ல படைப்பாளி நேர்மையான படைப்பாளி எப்போதுமே தனது ஆதாரங்களை பாதிப்புகளைப் பற்றிச் சொல்வதில் நேர்மையாய் இருப்பான். வியாபாரி போலி ஏமாற்றுபவன் அறியாமையைத் தனது மேதைமைக்கு உபயோகிப்பவன் கலாசாரத்து ஒட்டுண்ணியாவான்.

சினிமா சார்ந்தவர்கள் பெரும்பாலானவர்களுக்கு இந்த நேர்மை இல்லை. அதேபோலவே இவர்களின் சினிமாக்களில் திருட்டுக்கு உரியதாகச் சொல்லப்படும் படங்கள் காட்சிக்குக் காட்சி காமெரா கோணம் காட்சியமைப்பு வசனம் போன்ற எல்லாவற்றையுமே பிரதி செய்பவை. இத்தகையவைகளைத் தமது படைப்புகளாக இவர்கள் உரிமை கோருகிறார்கள். மக்களிடம் இருந்து வரும் பாராட்டுகளை வெட்ஜையற்று சூடிக்கொள்கிறார்கள். Courtesy நன்றி போடும் குறைந்தபட்ச அறிவுலக நாகரிகம் கூட இவர்களிடம் இருப்பதில்லை. பாலசந்தர் கமலஹாசனில் இருந்து கிரேஸி மோகன் அசோக்குமார் வரை இதைச் செய்கிறார்கள்.

இது 40-50 வருடம் முதல் வந்த ஆங்கிலப் படம்தானே, உலகத் திரைப்பட விழாக்களில் மட்டும் திரையிடப்பட்ட படங்கள்தானே, எவருக்குத் தெரியப் போகிறது. தெரிந்தாலும் எவர் சொல்லப் போகிறார்கள் என்கிற அறியாமையை - மக்களின் அறியாமையைப் பயன்படுத்தும் நபும்சகத் தனம்தான், படங்களைக் காட்சிக்குக் காட்சி பிரதி செய்து விற்கும் மோசடி.

இப்போது இப்படிப் பார்க்கலாம். 'படைப்புகள் மூன்று வகைகளில் வேர்களைக் கொள்கிறது.

1. வாழ்வின் ஆதார அனுபவங்கள்.

உலக மனித பிரக்ஞையின் அடிப்படைப் பண்புகள்.

2. பாதிப்புகளால் தூண்டப் பெறுபவை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Anti-
Rasistisksenter

For alle henvedelser ta kontakt så fort som mulig.
Arbeidstid er man-fre. 9-17
Adresse : Housmanngt.27
0182 Oslo
Tel. 22 11 60 00

Nordic Black Theater

Cinema, theater, Seminar arrangements.
Adresse: Parkteatret, Olaf Ryespl.11 Bilet & info.

Tel.22381262.

3. நேர்மையற்று சுவீகரிக்கப்பட்டு முன்வைக்கப் படுபவை

மூன்றாவது வகையான அசிங்கத்தைத்தான் நமது மரியாதைக்குரிய சினிமாக்காரர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். மக்களின் அறியாமையைத் தனது மேதைமையாகப் பிரகடனம் செய்பவன் கயவாளி.

பிரதி செய்தல் courtesy யுடன் தமிழில் வருமானால் ஆரோக்கியமானது. அது அல்லாதபோது மக்களை முட்டாள்களாக்கும் நோக்கம் கொண்டிருக்குமானால் அது திருட்டு. இது திருட்டு மட்டுமல்ல அறியாத மக்களை ஏமாற்றுவது.

இசை பற்றிய விவாதத்திற்கு வருவோம்.

ஒவ்வொரு தேசிய இசைக்கும் சில அடிப்படைப் பண்புகளும், ஒவ்வொரு இசைக் கருவிக்கும் இசை வடிவமொன்றும் இருக்கிறதென நினைக்கிறேன்.

மேற்கின் Symphony யுடன் வயலின் கருவிக்குள்ள தொடர்பு.

இந்திய சரிகமபதநி எழுத்து நடனங்களுடன் மிருதங்கம் ஆர்மோனியம் போன்றவற்றுக்குள்ள தொடர்பு.

ஆப்ரிக்கப் பாடலுடன் 'பீட்' இசைக்கேற் c Drum கருவிக்குள்ள தொடர்பு.

ஜப்பானிய நடனமான Tango அசைவுக்கு உடுக்கை போன்றதொரு இசை அடிப்படையான கருவி.

இவ்வாறு ஒவ்வொரு கலாச்சாரத்துக்கான அடிப்படையான இசைக்கருவிகள் அருவ இசையை (பாடலற்ற இசை - உதாரணமாக Title music ) பிக கலாச்சாரத்து உணர்ச்சிகளைச் சித்தரிக்கப் பயன்படுத்துகிறபோது அது பிரதி செய்வது போலவோ திருட்டு செய்வது போலவோ தோன்றக் கூடும்.

ரஹ்மானின் இசையை ஒருவர் ரெகே/ ராக்/ அராபிய இசைத் திருட்டு எனலாம். இளையராஜாவின் symphony யைக்கூட மேற்கத்தைய இசைத் திருட்டு எனலாம். சைக்காவ்ஸ்க்கியின் அருவ இசையைக் கேட்கிற ஒருவர் அதே உணர்வை இளையராஜாவின் Nothing but wind ஐக் கேட்கிற போதும் அனுபவிக்கலாம். கதிரிகோபால்நாத்தின் ஸக்ஸபோன் இசையை எனது நண்பரொருவர் புகழ்வாய்ந்த ஆபிரிக்க ஸக்ஸபோன் இசைக் கலைஞரிடமிருந்து திருட்டு என்றார்.

இந்த ஒப்பீட்டில் இருந்த ஒப்பிடுவதற்கான அம்சம் இரண்டுதான். ஒன்று ஸக்ஸபோன் மற்றது அது எழுப்பும் ஒலி. இதுவன்றி உணர்ச்சிப் பரவலில் உடன்பட என்று ஏதுமில்லை.

மேலும் உலகம் மிகமிக நெருங்கி வந்துகொண்டிருக்கும் காலகட்டத்தில் இம்மாதிரியான இசை மாதிரிகளுக்கு இடையிலான பரஸ்பர தாக்கங்கள் என்ன மாதிரி விளைவை உருவாக்கும் என்பதும் தெரியவில்லை.

சீரழிவையும் இவை கொண்டுவரக் கூடும் அற்புதமான Synthetic இசை அனுபவத்தையும் தரக்கூடும். இசையின் வர்க்கத் தன்மை பற்றிப் பேசிய ஜேர்மனிய இசைமேதை பிரெக்டின் நண்பர் Hans Eisler

www.tamilarangam.net

போன்றவர்களின் அடியொற்றிய விதங்களும் எழுச்சி பெறக்கூடும்.
மற்றபடி மேற்கு கிழக்கு சம்பந்தமான பிரச்சினைகள் இடம்பெறுகிற இத்திருட்டு விவகாரங்களில் ஒரு ஆபத்தான போக்கும் நிலவிவருவதை இச்சந்தர்ப்பத்தில் சுட்ட வேண்டும்.
கழிசடை அமெரிக்கப் படங்களை மட்டுமே பார்க்கிற ஒரு கிழக்கத்தையன், தனது தாய்மொழி தவிர பிற அனைத்து காட்டுக் கத்தல்களையும் ருசித்துக் கொண்டிருக்கிற ஒரு கிழக்கத்தியன் சொல்கிறான்: அவன் பெரும்பாலான வேளையில் தமிழனாக இருக்கிறான்.
"Bloody இண்டியன் Bloody வடிவங்கள். என்ன படமெடுக்கிறான். என்ன அடிக்கிறான். இங்கிலீஸ் படங்களைப் பாருங்கள். கொல்வதைக்கூட தத்ரூபமாக எடுப்பான். நிஜமாகவே அழிப்பான். தமிழ்ப் படமெல்லாம் கொப்பிதான். தமிழனுக்கோ இந்தியனுக்கோ மூளை இல்லை
இந்தக் கூற்றில் இருக்கிற அடிவருடித் தன்மையையும் நாம் கவனத்துடன் அவதானிக்க வேண்டும்.

குறிப்பு: இசை பற்றி நிறையப் புத்தகங்கள் வந்திருக்கின்றன.
சமீபத்தில் வந்த புத்தகங்கள்:
1. Encyclopeadia of world music
2. A guide to world music
அமெரிக்காவில் இருந்து கறுப்பு இசை இதழான Beat இந்திய இசைக்கென்று ஒரு சிறப்பிதழ் வெளியிட்டிருக்கிறது.
இசை பற்றிய விவாதங்களை அதன் ஆழ்தளத்தில் எடுத்துச்செல்ல நிறைய படிப்பும் அனுபவமும் வேண்டும். அதற்கு முயற்சிப்போம். ●

# தொடரும் கனவுகள்

**ஓட்டமாவடி அறபாத்**

எனக்கென்று எதுவும்
சொந்தமாயில்லை
இப்போது.

முன்பென்றால்
ஒரு துண்டு நிலமிருந்தது.
புத்தகத்தினுள் அடையாளம்
செருகப்பட்டதாய்
எனது குடிசையும்
எனக்கென்றிருந்தது.

என்னிடமும் வரிபிடுங்கப்பட்டது
அந்த வரியில் இருந்துதான்
என் நெஞ்சில் அழுத்தி
வெளித்தள்ளிய துப்பாக்கியும்
வாங்கப்பட்டிருக்கும்

எனக்கெதிராய் போராட
என் கரங்கள் நீண்டது பற்றி
எனக்கு சொட்டுப் போலேனும்
வருத்தமில்லை.

இரவுகள் நீண்டன
தூக்கணாங் குருவிக்கூடாய்
என் தாயகம் பற்றிய
கனவுகள் தொங்கின மனசுக்குள்.

ஒவ்வோர் கணமும்
கனவுகள் கட்டுவேன்
எனினும்
குரங்குகள் வந்து -
பிய்த்தெறியும்.
திரும்பத் திரும்ப கனவுகள் மூளும்.

இப்போது
நான் எவருக்கும் வரிகொடுப்பதில்லை
கொடுத்ததைத்தான்
வாங்கிக்கொண்டேன்
ஓர் அகதியாய்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மண்மனம்

[illegible]

## அத்தியாயம் 14



உண்மையிலேயே தம்பையரால் ரகுநாதனைப் புரிந்து கொள்ள முடியவில்லை.
அவரது எண்ணப்படி -
ஒரு மனிதனுக்கு ரோச நரம்பு எண்டு ஒன்று இருக்க வேணும். சரி அது தான் இல்லாமல் போனாலும்.... தன்மானம் எண்ட ஒண்டு கட்டாயம் இருக்க வேணும். எனக்கு உன்ரை கலியாணமே வேண்டாம் எண்டு அண்டைக்கு இவன்ரை மூஞ்சையிலை அடிச்சது மாதிரிச் சொல்லிப் போட்டு, அவள் போட்டாள். என்ரை மோள் ரோசக்காரி. பிறகும் இவன் ஏன் அவளிலை நாய் மாதிரி வழியிறான் எண்டு விளங்கேல்லை என்று யோசித்தார்.
நேரம் கழிந்து கொண்டிருந்தது.
உங்களுக்கும் என்னோடை கதைக்க விருப்பம் இல்லை எண்டால், நான் திரும்பிப் போறன். என்னை மன்னிச்சுக்கோள்ளுங்கோ! ஆனால், எண்டைக்காவது சுசிலாவோடை ஒரு அரை மணித்தியாலம் நான் கதைச்சே ஆகவேண்டும். அந்தக்கதையிலை இருந்துதான் என்ரை முடிவு என்னெண்டு எல்லாருக்கும் தெரியும். இப்ப நான் போட்டு வாறன் என்றபடி திரும்பினான் ரகுநாதன்.
தம்பி பொறும் என்று சொல்லிவிட்டு தன்னைச் சுதாரித்துக்கொண்ட தம்பையர் தொடர்ந்தார்.
நீர் படிச்சனீர், நல்ல உத்தியோகத்திலை இருக்கிறீர். ஊருக்குள்ளை உம்மடை குடும்பத்துக்கும் உமக்கும் எவ்வளவு மரியாதை இருக்கெண்டு எனக்குத் தெரியும். எனக்கும் ஒரே பிள்ளை. சீதனம் ஏராளமாய்க் கிடக்கு. அவளும் படிச்சவள்.
உங்களுக்கிடையிலை அந்தக் காலந்தொட்டு ஒரு 'இது' இருந்தது எண்டு எங்களுக்குத் தெரியாமலில்லை. என்ரை முடிவிலை எதுவும் தங்கியிருக்கேல்லை. அவளுக்குப் பூரண சுதந்திரம் குடுத்துத்தான் அவளை நாங்கள் வளர்த்திருக்கிறம். அவள் என்ன முடிவெடுக்கிறாளோ அதுதான்

**க.ஆதவன்**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எங்கடை முடிவு. ஆனால் ஒண்டு சொல்லுறன் கேளும். நீர் எனக்கு மருமகனாய் வாறதிலை எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. இப்ப அவளின்ரை போக்குகள் கொஞ்சம் வித்தியாசம். நீர் அரை மணித்தியாலம் என்ன எவ்வளவு நேரமும் கதைச்சிட்டுப் போம். நான் இதுகள் ஒண்டும் விளங்காத சுத்த மடையனில்லைக் கண்டீரோ என்று சொன்னார்.

வேஷ்டியை ஒரு தடலை வரிந்து கட்டினார். தனது walking stick (நுனியில் வளைந்த பிரம்புத் தடி) எடுத்தார். (பின்னேர உடன்கள்ளு இவரது வாடிக்கை என்பது ரகுவுக்கு நன்கு தெரியும்)

தம்பி, நான் ஒருக்கா மயில்வாகனத்தோடை கதைக்க வேணும். போட்டு வாறன்.

பிள்ளை....!

பிள்ளை.....!

ஆர் வந்திருக்கினம் எண்டு பார்

என்று உள்ளே குரல் கொடுத்துவிட்டு நடக்கத் தொடங்கினார் தம்பையர்.

எவ்வளவு நிம்மதியாக... திட்டவட்டமாக இருக்கிறார்கள். பார்க்கப் போனால் எல்லோரும் அப்படித்தான் இருக்கிறார்கள். ஆறரை மணிக்குத் தவறாமல் தம்பையர் தனது வாடிக்கைக் கள்ளுக்குச் செல்கிறார். எனது காதலின் வயதைவிட அவரது வாடிக்கைக் கள்ளின் வயது அதிகம்.

நண்பன் சுரேஷ். எவ்வளவு திட்டவட்டமாக உறுதியாகச் செயல்படுகிறான். முடிவுகளை எடுக்கிறான். சந்திரா கணப்பொழுதில் தன்னையே முடித்துக் கொண்டாள். எதிர்காலம் பற்றிய தெளிவான முடிவுகளுடன் எல்லோரும் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த மண்ணின் மைந்தர்கள் வரலாற்று நாயகர்களாக மறைந்தும் தோன்றிக்கொண்டும் இருக்கிறார்கள்.

திட்டம். Plan. உறுதி.

இதுதான் வாழ்க்கையா?

இதுதான் எமது மண்ணின் அடையாளங்களா?

அம்மாள் கோயிலடியில் யாரோ நாட்டிய அரசங்கண்டு, இப்போது அரசடி அம்மாள் கோயிலாகப் பெயர் மாறுகிற அளவுக்கு வளர்ந்துவிட்டது.

அம்மாள் கோயில் அரசா அல்லது அரசடி அம்மாள் கோயிலா? யாருக்கு யார் சொந்தம்?

பல வருடங்களுக்கு முன்னர் நிலத்தில் விழுந்த பனங்கொட்டை 'வடலி' எனப் பெயர் கொண்டு பின்னர் 'பனை' எனப் பெயர் கொண்டு, பின்னர் 'நல்ல கள்ளுப் பனை' எனவாகி... இப்பொழுது 'தம்பையரின் பனை' எனப் பெயர் கொண்டுவிட்டது. யார் எதனுடன் கிரமப்படியாக உறவு கொள்கிறார்களோ அது அவரின் பெயரைத் தாங்கி அவரது சொந்தம் என்றாகிறது.

ஒரு தாய் தனது மகனை 'தன்ரை மகன்' எனச் சொல்வது வெறும் இரத்த உறவினால் மட்டுமல்ல. திட்டம். உறுதி. கிரமப்படியான உறவு என்பதால்தான்.

பெத்துப்போட்டு வீதியில் வீசி எறியப்பட்ட குழந்தைக்கு யார் தாய்?

வீதிதான்.

கூலிகளாகத் தனது மக்களை இலங்கைக்கு ஏற்றுமதி செய்த (இந்திய) மலையக மக்களின் தாய் யார்?

இலங்கைதான்.

சொந்தம், என்ரை, உன்ரை என்பதன் அர்த்தம் உறவுதான். தம்பையர்தன்ரை மகள் எண்டு சொல்ல முடியாது. என்ரை சுசீலா எண்டுதான் சொல்லவேணும். அவளும் என்ரை ரகு எண்டுதான் சொல்லவேணும். இதுதான் எனக்குத் தேவை. இதுதான் எங்கடை உறவு. எங்கடை சொந்தம். இதுக்காகத்தான் நான் காலங் காலமாகக் காத்துக் கிடந்திருந்தேன். அரை மணித்தியாலம் நான் கதைக்கப் போறது இதைத்தான். நீ என்ரை, நான் உன்ரை!

என்று யோசித்துக் கொண்டிருந்தான் ரகுநாதன். அப்பொழுது உள்ளிருந்து ஏதோ அரவம் கேட்டது. வெளியே வந்தது சுசீலாதான், வந்து கதவு நிலையில் வலது தோளைச் சாய்த்துக் கொண்டு இடது பக்கத்தில் தனது ஒற்றைப் பின்னலை முன்னால் தொங்கவிட்டு..... நீண்ட அவளது விரல்கள் பின்னலின் நுனியில் விளையாடியபடி.....

வெள்ளைநிற நீண்ட 'மிடி'யில்...

நெற்றியில் காண்போர் கண்களுக்கே தெரியும் ஒரு சின்னப் பொட்டுடன்....

மின்னலாய்ப் பளிச்சிடும் அந்தக் கீழ்வாய்ப் பல்லினூடாக ஒரு புன்னகையுடன்...

எப்பிடிச் சுகம்? என்று கேட்டாள்.

ரகுநாதன் தடுமாறிப் போனான். அவன் எதிர்பார்த்ததைவிட, அவள் அழகுடனும் இயல்புடனும் தெளிவான உறுதியுடனும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்